436



TIRUVALLUVAR

A STUDY

T. CHELVAKESAVAROVA MUDALIAR, M.A.

T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A.



430

TI
RUVALLUVAR

A STUDY

CHELVAKESAVARO
)YA MUDALIYAR, M.A.

[Pachaiyappa's College]

NEW EDITION



MADRAS

PRINTED AT THE

DIOCESAN PRESS, VEPERY

1934

Catalogue No.....
LIBRARY

PREFACE

"THE chief glory," says Dr. Johnson, "of every people arises from its authors." The Tamils are a poetic people. Their poetical literature is a vast treasure of which any nation can well be proud.

Greece gave

birth to Homer and Socrates. The Tamil land gave birth

to Tiruvalluvar and Kamban. Kamban is the Homer and

Tiruvalluvar, the Socrates, of Southern India. The literary

glory of the Tamils rests on Tiruvalluvar and

Kamban, not

to speak of Auvaiyar—the Muse in human embodiment,

and a host of others. The object of this Essay is to

present to the College student a brief survey of Tiruvalluvar and his immortal work—the Holy Bible of the

Tamiis. It was read before the Tamil Literary Society

of the Presidency College in 1901, Mr. J. M. Velu Pillai,

late of the 'Teachers' College, presiding. A small number

of copies was subsequently printed at the suggestion of

this gentleman who always inspired in his students

a loving veneration for Valluvar and his Kural. Having

been prescribed as a Text-book for the F.A. Examination

of 1905, the essay (without material reprinted with some

explanatory notes.

PERAMBORE,
20th March, 1904.

alterations) is now

T. C.

Preface to the New Edition.

THE text of this New Edition is chiefly a reprint of that in the earlier edition with a few additional exampies, etc. The notes* designed for college students and included in

the last edition have been omitted with a view to afford room for the Appendices remarks and useful information sources.

PERAMBORE,
12th May, 1920.

which contain critical culled from various

T. C.

* Portions of the notes are included in the present edition.



THE ORIENTAL COLLEGE, PUDUKKOTTAI MAYAVARAM
Serial No.....
Catalogue No.....
LIBRARY

திருவள்ளுவர்

துதி

திருமுடி மிசையார் மயிர்முடி-
யழகும்

தீர்க்கபுண் டரநுத லழகும்
தீரண்மணி புயந்தை
வருஞ்செவி யழகும்

திகழ்நெடுந் தாடியி
னழகும்

அருமுடி செபமா லிகைகின்முத்
திரைசே

ரபயநேர் வலக்கையி
னழகும்

அமிழ்துறழ் தமிழ்மா

மறைமுறை வரத

மமைதரு மிடக்ஙகையி

னழுகும்

கருமுடி யோகப் பட்டைடயி

னழுகும்

கடிகொள்கீட் கோவணை

வழுகும்

கழல்களிற் றிகிரி வளாவரை

யழுகும்

கமலநல் லாதனத் தழுகும்

தருமுடி முகிழ்ரெய் மயிலையி

னிலைடமா

தவர்கள்கண் டிறைஞ்சவீற்
றிருக்கும் தழைபுகழ்த் திருவள்
ளுவரெனு நாம

சற்குரு சரணமே சரணம்.

தமிழ்க்குக்
கதியாவார் இருவர்
எனச் சில புலவர்
புகல்வதுண்டு. கதி
என்பதில் கஂகாஜனக்
கம்பநாட் டாழ்
வாருக்கும், திஂகாஜனத்
திருவள் ளுவருக்கும்,

ஞாபக சூத் திரமாகக் கொள்ளல்வேண்டும்.

கம்பர், தமது ராமா யணம் அரங்கேறுகையில், தமக்கு முற்பட்ட சிறந்த நூல்.

8
திருவள்ளுவர்

ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அகப்பை அள்ளிக்கொண்ட தாகக் கூறினரென்று ஆசிரிய பரம்பரையில் நாம் கேட்டு வருகிறோம். பழைய நூல்களிற் பயிற்சி மிக்கவர்கள் இதன் உண்மையை நன்குணர்வர். திருவள்ளுவர்க்குப் பிற்பட்டவர்களுள், திருக்குறளில் ஓர் அகப்பையா யினும் அள்ளிக்கொள்ளாத சிறந்த பாவலர் ஒருவரு மிலர் என்பதும் நாம் நன்கறிவோம். "கனியிருப்பக்

காய்கவர்ந்த கள்வனேனே" என வாசிசரே ஓர் அகப்பை அள்ளிக்கொண்டாரென்றால், வேறு கூறவேண்டா. பண்டை நாட் கவிச்சுவை யெல்லாம் வாரிக் கொணர்ந்து ஓரிடத்தே பொதிந்து, இற்றைநாட் கவிராயரெல்லாம் கொள்ளே கொள்ள வைத்த கவிச்சக்கரவத்தியையும் அவர் கவித்திறத்தையுஞ் சுட்டிச் சிலவாண்டுகளுக்கு முன்னே ஒரு சங்க முன்னிலையில் சிறிதெடுத்துரைத் தேன். வேட்டவேட்ட பாவலரும் நாவலரும் வேணவா அடங்க அள்ளிக்குடிக்கும் ஊற்றுக்குழியான உத்தர வேதத்தையும், அதனை உரைத்தருளிய திருவள்ளுவரை

யுஞ் சுட்டி, எனக்குத்
தாயகமான இவ்விராசதானிக் கல்
லூரியின் தமிழ்ச்சங்க
முன்னிலையில்,
இற்றைநாளொன்று
என்னுளியன்றனை
எடுத்துரைப்பான்

வந்தேன்.

செப்பலோசையைத்
தழுவி, முதலடி-
நாற்சீராயும் ஈற்றடி-
மூச்சீராயும் ஒரு
விகற்பத்தாலும்
இருவிகற்பத்
தாலும்
வருகிற ஈரடி-வெண்பாக்
குறள்வெண்பா எனப்
படும். இது குறள்
எனவும் வழங்கும்.

கலிப்பாவாற்

றொகுத்த நூல் ஆகு பெயரிலக்கணத்தாற் கலியென வழங்குமாறு போலக் குறட்பாவா னியன்ற நூல் குறள்

என வழங்குவதாயிற்று.

திரு என்பது அழகு

என்னும்

பொருட்டு. திருக்குறள் என்பது அழகிய குறள் என்ற வாறு. இது முற்காலத்தில் ஆசிரியர் பெயரால் திரு

திருவள்ளுவர்

9

வள்ளுவர் என்றும், திருவள்ளுவரால் இயற்றப்பட்டு எல்லார்க்கும் எல்லாப் பயனையும் அளித்தலின் திரு வள்ளுவப்பயன் என்றும் வழங்கியது. சங்கப்புலவரிற்

பதின்மூவர் இதனை

மூப்பால் எனச்

உரைத்தனர். பதினெண்
கீழ்க்கணக்கை
வரையறுத் துரைக்கும்
பழம்பாட்டும் இதனை
முப்பால் என்றே
உரைக்கின்றது. சிலர்
இதனை வள்ளுவர்வாய்ச்
சொல் என்றும், வள்ளுவர்
வாய்மொழி யென்றும்
வழங்கினர்.

தெய்வநூலென்றும்,

பொய்யாமொழியென்றும்,
வாயுறை வாழ்த்
தென்றும், தமிழ்மறை
யென்றும், பொதுமறை
யென்றும் ஒளவையார்
புனைந்துரைத்தனர்.
ஆயினும் இந் நூல்
நெடுநாளாகத்
திருக்குறள் என்று
வழங்கிவருகின்றது.
தமது நூலை
மாணாக்கர்க்கட்கு

உபதேசிக்கும் உருவ
மாகப்
பிரதிட்டிப்பித்திருக்கும்
திருவள்ளுவருடைய
அர்ச்சாவிக்கிரகத்தில்
இடக்கையில்
ஏட்டுச்சுவடி பிடித்
திருப்பதாகக் காட்டி,
அதன்மேல் திருக்குறள்
என்ற பெயர்
தீட்டியிருக்கின்றது.

திருவள்ளுவருடைய

திருவுருவத்தின்

தோற்றப் பொலிவை

அறிய

அவாவுகின்றவர்கள்,

திருமயிலையில் அவருடைய

திருவாலயத்திற்குச்

செல்வாராக. மேலே

ஸ்வரூபஸ்துதியிற் கூறியபடியே, தலையிற் சடையை முடித்திருக்கும் முடியினழகும், அடர்ந்த மீசையினழகும், அலைந்து மார்பிற் புரள்கின்ற தாடியினழகும், அகத்தினழகைக் காட்டுகின்ற முகத்தினழகும், ஆஜானு

பாகுவாய் அகன்ற

மார்பையுடைய

திடகாத்திரமும்
காண்பவர்க்கு,
யூரோப்பியரிற்
சிறந்த ஞானவான்களான
ஸாக்ரடிஸ் ப்ளேடோ
என்பவர்களை நினைவூட்டு
கின்றனவாய்
இருக்கின்றன.
வலக்கையில் ஜபமாலிகை
யும் இடக்கையில்
தமிழ்மறையுமாகக்
கமலாசனமிட்டு

10

திருவள்ளுவர்

வீற்றிருப்பதை
நோக்கின்,
அகத்தியர்க்கு
இரண்டாவ தாக
எண்ணத்தக்க தமிழ்
முனிவரோ இவர்
என்பது நோன்றும்.

தமிழ்ப் புலவர்கள் இவரை
அகத்தியருடைய

பிரபௌத்திரராகவே
வபிசாவளி
வரையறுத்துக் காட்டி
யிருக்கின்றனர்.

மதியுகிகளான சில
தமிழாசிரியருடைய
தற்கால
வாராய்ச்சியாலும், சிலப்பதிகாரம்
மணிமேகலையென்னும்
பெருங்காப்பியங்களிற்
கிடைக்கலான

ஆதரவுகளாலும்,
பிறவாற்றாலும்,
திருவள்ளுவர்,
எறக்குறைய சாலி
வாகன சகாப்தத்தின்
தொடக்கத்தில்,
அதாவது, கி. பி.
முதலாற்றாண்டில்
இருந்தவரென்பது
துணியப்படுகின்
றது. அதனினும்
முற்பட்டவர் எனத்

துணிந்துரைத் தற்கான
ஆதாரங்கள்
அகப்படவில்லை.
எங்ஙனமாயினும்
இன்றளவும் நின்று
நிலைதலான தமது நூலை,
வள்ளுவ னுர் வரை
யறுத்து
வகைப்படுத்திக்கொண்டு,
"செய்யுந் தொழிலெல்லாம்
சீர்தூக்கிப் பார்க்கில்
நெய்யுந் தொழி லுக்கு

நிகரில்லை'' யென்று,
மயிலைமா நகரிலே
உதரநிமித்த மாகத் தமது
தறியின்மேல்
தலைகுனிந்து சீலை
நெய்யா நிற்கையில்,
யூரொபியருடைய
அந்தகாரகாலம் அப்பாற்
பட்டதில்லை; மத்திய
காலமும்
உதயமாயிற்றில்லை;
துருக்கருடைய

மகம்மதிய மதம்
தோன்றிற்று மில்லை.
கிறிஸ்தவ மதம்
அப்போதுதான் முளை
விளம்பிக்கொண்
டிருந்தது.
இந்தியாவிலும், சைவம்
அத்துவிதம் வைணவம்
என்னும்
சமயதெதங்களுக்குரிய
சமயாசாரியர்கள்
எல்லாரும்,

வள்ளுவனாக்கு
நெடுங்காலம் பிற்பட்டு
அவதரித்தவர்கள்.
வள்ளுவர்காலத்தில்,
தமிழ்நாடு பேரும் பலமும்
அடைந்து, உச்சதசை
உற்றிருந்தது. மேலும்,
தமிழ்நாடானது,
வடக்கிலும் குடக்கிலும்
குணக்கிலும் உள்ள பல
தேயத்தரும் வந்து
வாணிகஞ் திருவள்ளுவர்

செய்யும் பெரிய
வியாபார
ஸ்தானமாகவும்
இருந்தது. அதற்கு
நெடுங்கால முன்னரே
ஆரிய பிராமணர்கள்
திராவிடதேசத்தில்
குடியேறி நிலைபெற்றும்,
தமிழ் நாட்டு
மூவேந்தரிடத்திலும்
அமாத்தியரும்

புரோகிதரு மாக
உத்தியோகித்தும்,
ஆலயங்களில்
அர்ச்சகரர்க அமர்ந்தும்,
ஆரியக் கோட்பாடுகளை
ஆங்காங்குப் பரவி
வித்தும் இருந்தனர்.
அக்காலத்தும்
தென்னிந்தியாவின்
சர்வகலா சங்கமான
கடைச்சங்கமும்
மதுரையில் நன்கு
நடந்துவந்தது. சேர

சோழ
பாண்டியர்களுடைய
பிரதான
பட்டணங்களில், சைவ
வைணவ ஆலயங்
களுக்கு அணித்தாக,
ஜைன புத்த ஆலயங்கள்
விளங்கி யிருந்தனவென்று
அக்காலத்
திலக்கியங்களால் அறி
கிறோம். இந்திரன்
பலதேவன் பிரமன்

மூதலான தேவ
தைதகளுக்கும்
அக்காலத்தில்
ஆங்காங்கு ஆலயங்கள்
உண்டு. அக்காலம்,
சமய வேறுபாடுகளில்
கூர்த்திரம்---
சாதிப்பதில்லையாய்,
அவரவர்
இராஜபயமின்றித் தத்
தமது வழிபடுகடவுளை
நிர்ப்பயமாக
வணங்கிவந்த காலமாக

இருந்தது. பிரபுக்களும்
வீரர்களும் அரசர்களும்

அரிய புலவரை ஆதரித்துவந்தனர். கவிதாசிருஷ்டி
விசேஷித்திருந்தது. சிற்பம் ஓவியம் முதலான லளித

வித்தைகளும்
வெகுவாய்ச்
சன்மானம் பெற்றுவந்தன.
நீராவி அச்சியந்திரம்
மின்சாரம் என்பவற்றின்
தற்கால அதிசயங்கள்
தவிர, ஏனை
யெவ்வாற்றினும்,
அக்கால மானது,

நனிநாகரிகத்தான்
மேம்பட்ட இந்நூற்றாண்
டின் பிரதிசாயலென்று
உரைக்கலான
காலமாகவே இருந்தது.

இன்னோரன்ன
காலத்தில் இன்னோரன்ன
நாட்டில்,
கர்ணபரம்பரையில்
வழங்குமாறு,
திருமயிலையில், ஆதிபக
வன் என்பவருடைய

மக்கள் எழுவரில்
இளைஞராய்ப் 12
திருவள்ளுவர்
பிறந்தார் நமது
திருவள்ளுவர்.

இவரைப்பற்றி வழங்கி
வருகிற சரித்திரம்
முற்றும் புலவர்களில்
வழங்கிவரு கின்ற
கர் ணபரம்பரையே
யாதலின், இதில்
கொள்ள ற் பாலது

இதுவென்றும்
தள்ளற்பாலது
இதுவென்றும் துணிவது
கூடாத காரியமாக
இராநின்றது. இருமுது
குரவராலே திருமயிலையில்
விடப்பட்ட இவரை,
மகப் பேறில்லாத
வேளாளன் ஒருவன்
கொண்டுபோய் வளர்த்து,
வாசுகியென்னும் ஒரு
பெண்ணை மணஞ்செய்

வித்துக் காலகதி
அடைந்தனனென்றும்,
இவருடைய மனைமாட்சி
வசிட்டருடைய
மனைமா ட்சியோடொத்த
தென உலகினர்
புகழ்ந்துவந்தனரென்றும்,
இவர்

ஊரிலுள்ளவரொடு
வாழாமல் ஊர்ப்புறஞ்
சேரிசார்ந்து
தெள்ளுசொற்

புலனழவாய்ந்து
சேலனெய்ப் திருந்தவாற்றால்
வள்ளுவர் என்றூர்
பல்லோர் வளமையோ
னெனலோராரே .. என்றும்
புலவர் புராணம்
உரைக்கின்றது.
அன்றியும்
அப்புராணம்
பாதிவான்
மதிவாழ்சென்னிப் பரமனே
பரமென்றேர்ந்து
சோதிட மாதிநூல்கள்

தாயன வாகச்சொல்லி

நீதிமுற்

றுணர்த்தும்பெட்பால் நிகமமே

இதுவாமென்னத்

தீதின்மெய்

யறிஞர்போற்றத் திருக்குற

ணூலுஞ்செய்தான்

என்றும்

இயம்புகின்றது.

இப்புராணத்திற் கூறும்

ஏனை

வரலாறனைத்தும்

கற்பரம்பரையை

ஒத்தேதயுள்ளது.

ஆயினும், வள்ளுவனார்

"இல்லறமென்னும்

பொன்னுக்

கியலுரையாணி"

என்றும், இவர் நூலின்

எற்றத்தைதச்

சமய வேறுபாடின்றி,

நால்வர்சொல் சைவர் வேதம்,

நளிர்குரு

கூரன் சொல்லைப்

போல்வலார் சிலர்தாஞ்

சொல்லும் பொருளில்பா கவுதர்
வேதம்,
திருவள்ளுவர்
13

வால்வகை யுலவும் வீறு
மயிலெவள் ளுவன்சொல்,
யார்க்கும் மேல்வழி யுணர்த்நிக்
கீழ்மை
விலக்குநல் வேத மாமே

அஃதாவது, சைவ சமயாசாரியர்கள் அருளிய தேவார திருவாசகங்களும், வைணவ ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்வியப் பிரபந்தமும், வள்ளுவர் குறளும், உலகினர்க்குக் கீழ்மையை விலக்கி மேல்வழியை உணர்த்

தும் நல்ல
வேதங்களாம் என்றும்,
இந்நூலில் உரைத்த
நருமங்களிற்
கொலைமறுத்தலே
முக்கியமான நருமம்
என்பதைக் குறித்து,
இந்திர பதவிக் கேற்றும்
இவுளியா
கழும் பொல் லாதென்
றுந்திய கருணை வாய்ந்தோர்க்
குறுதியுண்
டாகத் தோற்றும்

சந்திர வதனத் தாதி தருமகா
ரெழுவர் தம்மில்
பிந்திவள் ளுவப்பேர் காங்கும்
பெரியவன்
பேசு நூலே
என்றும்,
பறந்த வோதிமப் புள்ளிமறை
யாகியர்
பகர்ந்தசொற் குறித்தேனும்
இறந்த வூனுமுண் பதுதகா
தென்பதே
இயற்றமிழ் மறைக்கோளே
என்றும் அப்புராணம்

பகர்கின்றது.

இனி(இவருடைய
திருநாமத்தைப்பற்றி
மேற்கூறியபுலவர்
புராணம், வளமையான்
என்று கூற அறியாத
பாமரர்கள் வள்ளுவன்
என
வழங்கிவிட்டனரென்று
கூறுவது கண்டோம்.)
திருவள்ளுவ மாலைக்கு
உரை

14

திருவள்ளுவர்

(யியற்றிய திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர், "வள்ளுவர் என்பது வண்மையுடையவர் என்பதை விளக்கி நின்றதாகலின், அது வேதத்தில் இலைமறை காய்கள்போல் பல விடங்களினும் மறைந்து வெளிப் படாதிருந்த மெய்ப்பொருள்களை யெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்து அருள்செய்தவர் என்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று" என்றனர். கபிலர் இயற்றிய அகவலில்,

தொண்டைமண்
டலத்தில் வண்டமிழ் மயிலைப்

பறைய ரிடத்தில்

வள்ளுவர் வளர்ந்தனர்

என்றுரைத்திருக்கின்றது. சில பிரதிகளில் திருவள்ளுவ மாலையின் அனுபந்தமாகத் திருவள்ளுவர் வரலாற்றை யுரைக்கும் அகவலில்,

மைப்புய லணிபொழின்

மயிலாப் பூரில்

வள்ளுவர் மனையிடை

வள்ளுவர் வளர்ந்தனர்

என்று

கூறியிருக்கின்றது.

பிங்கல நிகண்டில்,

வள்ளுவன் சாக்கை

யெனும்பெயர் மன்னற்

குள்படு கருமத் தலைவற்

கொன்றும்

என்றும், பிற்பட்ட

சூடாமணி நிகண்டில்,

வருநிமித்திகன் போர்

சாக்கை வள்ளுவ

னென்றுமாகும்

என்றும் வருவது முறையே கன்மத்தலைவன் ஜோசியன் எனப்பொருள்படுகின்றதாயினும், உலகவழக்கில் வள்ளுவன் என்பது பறையர்களுக்குக் குருவாய் ஜோசியமே ஜீவனமாக இருக்கும் வள்ளுவஜாதியிற் பிறந்தவனையே குறிக்கின்றது. சங்கப்புலவர்கள் இவரைத் தேவர், முதற்பாவலர், மாதானுபங்கி, செந்நாப்போதார் எனப் பலவகையாகப் புனைந்துரைத்தனரேனும்,

திருவள்ளுவர்

15

அறம்பொரு ளின்பம்வீ
டென்னும்அந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய
தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர்
பேதை அவன்வாய்ச்சொல்

கொள்ளார் அறிவுடை
யார் -,
என்கிற பாட்டில்
காகுஸ்வரம் என்கிற
ஒலிக்குறிப்பி
லுலே, சாதியிழிவு
தோன்ற,
'வள்ளுவனென்பான்'
என்ப
தாக
உரைத்திருத்தலின்,
இவர்க்கு வள்ளுவரோடு
உண்

டான தொடர்பால்
தோன்றிய காரண
விடுகுறியே

போலும், வள்ளுவர் என்னுந் திருநாமம்.

தமது திருக்குறள்

சங்கத்தார் முன்னிலையில்
அரங்

கேறியபின்னர்,
வள்ளுவர் மயிலைக்கு
மீண்டு மனைவி

யோடு இல்லற
நடாத்திவருநாளில்,
மனைவி காலகதி
யடைந்துவிட்டனர்.
இம்மனைவியாருடைய க
ற்பின்

நிறத்தைதக்குறித்துச்
சிற்சில வரலாறுகள்
வழங்குகின்

றன. தனது தவம்
சித்தியுற்றதாய் என்
றறியவிரும்பித்

தன்மீது எச்சமிட்ட
ஒரு கொக்கைக்
கண்விழித்து

எரித்துவந்த
கொங்கணமுனிவர்,
மயிலையில் வள்ளுவ

ருடைய வீட்டில் பிக்ஷைக்குச் சென்றபோது, வள்ளுவர் மனைவியார், தமது பார்த்தாவுக்குத் தொண்டுசெய்து

கொண்டிருந்தமையால்,
பிக்ஷையிடச்
சிறிதுகாலந்தாழ்க்

கவே, கோபத்துடன்
விழியை உருட்டிப்பா

ர்த்த அந்த

முனிவரை நோக்கி, ''கொக்கென்று நினைத்தையோ கொங்
கணவா?'' என்று கேட்ட மாத்திரத்தில், முனிவர் திடுக்

கிட்டு அவருடைய
கற்பின் திண்மையை
மிகவும் மெச்சி

னர் என ஒரு
வரலாறுண்டு. அம்மனைவி
துஞ்சியபோது

வள்ளுவர்.
அடிசிற் கினியாளை அன்புடை
யாளைப்

படிசொற்

பழிநாணு வாளை—அடிவருடிப்
பின்தூங்கி
முன்னுணரும் பேதைபோ
யான்பிரிந்தால் என்தூங்கும்
கண்கள னெனக்கு

16

திருவள்ளுவர்

எனப் புலம்பிய வெண்பாவாலும், அவர் மனைமாட்சி நன்கு புலப்படும். வள்ளுவர் சரிதத்தைப் பலர் சாற்றக் கேட்ட கச்சி விட்டலையரசன், மாயிலைசென்று ஒரு சிற்பலில் வள்ளுவ ருருச்செய்து பிரதிட்டிப்பித்துப் பூஜை செய்யும்படி இலிங்கதாரணர்க் கீந்தான் எனப் புலவர் புராணம் புகல்கின்றது. இதுகாறும் அம்மரபினரே பூஜை நடத்திவருகின்றனர்.

வள்ளுவரிடத்தில்

ஏலேலசிங்கர் என்பவர் ஈடுபட்டு

மெய்யன்புடையவராக இருந்த வரலாற்றினுக்கு உலகு

வழக்கிலே "ஏலேலசிங்கன் பொருள் எழுகடல் போனலுந் திரும்பும்" என்கிற பழமொழியும், "ஏலேலோ ஏலவலி" என்று சுமையிழுக்கிற ஆட்கள் பாடுகிற பாட்டுமேயன்றி, நூல்களின் வாயிலான சான்று ஒன்றுமில்லை.

இனி, "இடையாலும் கடையாலும் சங்கம் அழிவதாக," அஃதாவது; இடைக்காடராலும் திருவள்ளுவராலும் மதுரையிலுள்ள கடைச்சங்கம் அழிவதாக என்னும்

சாபவார்த்தைக்குப்

புலவர்களுடைய
கர்ணபரம்பரை

யன்றித்தக்க
சான்றுகள் பிற வில்லை.
உள்ள சான்றுக

ளெல்லாம், வள்ளுவர்
தமது நூலை அரங்கேற்றிய
பின்ன

ரும் சங்கம் செழிப்புற்றிருந்ததற்கே ஆதாரமாகின்றன.
அவைகளை ஈண்டு விரிப்பதாயின், இந்த வியாசமும்

விரிவுறும்,
பொழுதும் இல்லை.
திருவள்ளுவமாலையில்

பாயிரங் கூறிய
புலவர்களனைவரும்
ஏகாலத்தில் இருந்
தவருமல்லர்.
புற நானூறு
மூதலானவற்றின்
சார்பைக்
கொண்டு
ஆராயுமிடத்தில், பதின்மர்
பன்னிருவர் ஏக
காலத்தவராக
இருத்தல்கூடும் என்பது

தெளியப்படு



கின்றது. எங்ஙனமாயினும், சங்கப் புலவர்கள் ஓரோர் காலத்தில் திருக்குறட்குக் கூறிய பாயிரத்தைப் பின்

திருவள்ளுவர்

17

எவரோ ஒருவர் திருவள்ளுவ மாலையாகத் தொகுத்தனர் என்பதே தேற்றம்.

திருக்குறளும் தொல்காப்பியமும் ஆகிய இரண்டுமே,

சிதைவுறுமல்

இப்பொழுது வழங்கும்

நூல்கள் எல்லா

வற்றினும்
முற்பட்டனவர்ம்.
திருக்குறளுக்குப் பன்
னெடுநாள்
பிற்பட்டனவையெல்லாம்
எத்தனையோ வேறு
பாடுற்றுப்
பற்பலவிடங்களில்
ஆசிரியர் வாக்கு இதுவே
யென்று
துணியலாகாதவாறு மா
றிவிட்டனவாகவும்,

ஆயிரத்தெண்ணூறு
யாண்டுகளாகச் சிறிதுஞ்
சிதைவுறு

மல்

வழங்கிவருவதே, இந்நூலின்
பெருமையை உணர்த்

துவதன்றியும், இஃது
என்றும் அழியாது நின்று
நிலவும்

என்பதற்கும்
சான்றுகின்றது. இஃது
இங்ஙிஷ்,

ப்ரெஞ்ச், ஜெர்மன்,
லாடின், தெலுங்கு
முதலான பாஷை
களிலும்
மொழிபெயர்க்கப்பட்டுப்
பல தேசங்களிலும்
வழங்கிவருகின்றது.
திருவள்ளுவர்
தமிழர்க்குச் செய்த
உபகாரம்
உலகினர்க்கே செய்த
மஹோபகார மாகிவிட்

டது.

இந்நூலாசிரியரைத்
தமிழர், பிரமனுடைய
அவ
தார மென்றெண்ணி,
இவரைத் தெய்வப்
புலவர் என்
கின்றனர்.

கிறிஸ்தவர்களுக்கு
விவிலிய நூலும், துருக்
கர்களுக்குக்
குரானும், புத்தர்கட்குத்
திரிபிடகமும்,

பிராமணர்களுக்குச்
சதுர்வேதமும் எங்ஙனம்
ஸர்வோத்
கிருஷ்டமோ,
அங்ஙனமே
தமிழர்களுக்குத்
திருக்குறள்
ஸர்வோத்கிருஷ்டமாம்.

II

தமிழிலக்கியங்

கூறும் பொருளெல்லாம்
அகப்பொ
ருள் புறப்பொருள்
என்னும் இரண்டு
பாகுபா டுடை
யன. அவற்றுள்,
அகமென்பது
இன்பமென்னும் இயல்
பினை யுடையதாகி
உள்ளத்தின் கண்ணே
நிகழும் ஒழுக்க
மாம்.

சொல்லப்படும்
இயல்பினையுடையதாய்ப்
புறம்பே நிகழும்
ஒழுக்கமாம். ஆகவே,
அறம் பொருள் இன்பம்
என்னும் மூன்றும் உன

ரத்தலால், திருக்குறள்
மூப்பால் எனும்
பெயர்த்தாயிற்று.

அறமென்பது இல்லறம்
துற வறம் என்று
பிரண்டுமாம். மனிதன்
இல்லறத்திலே நின்று
பொருளீட்டி
இன்பநுகர்ந்து இறுதியில்
துறவற நெறியால்
வீடெய்தலாம் என்பது
இந்நூலாற் போந்த

கருதது.

அறநான் கறிபொருள்
எழொன்று காமத்
திறழூன் றெனப்பகுதி
செய்து—பெறலரிய
நாலு மொழிந்த
பெருநாவலரே நன்குணர்வார்
போலும் ஒழிந்த
பொருள்—(தொடித்தலை
விழுத்தண்டினர்.)
அங்ஙன மாயின்
இல்லறம்—பொருள்—இன்பம்—துறவறம்

என்ற முறையாக

வையாத

தென்னையெனின்,

அறமாகிற ஒப்புமைபற்றி

இல்லறத்தையுந்

துறவறத்தையுஞ் சேர

வைத்தானென்க. மேற்

கூறியாங்கு மனிதன்

வீடெய் தலே

வள்ளுவர்க்குக்

கருத்தாதலே, அவர்,

துறவிகட்

கின்றியமையாத

அருளுடைமை முதலான
குணங்களைச் சொல்லி,
துறவறவியலின்
இறுதியில்
அவாவறுத்தலை
அதிகாரப்படுத்தி,
அவ்வதிகாரத்தின்
இறுதியில்
ஆராவியற்கை
அவாநீப்பின் அந்நிலையே
பேராவியற்கை தரும்

ான உரைத்திருப்பதனால்
உணரலாகும்.

பரிமேலழகர்க் கும்
இக்கருத்தே
கருத்தாதல், அவர்
அப்பாவின் கீழே

நன்றாய் ஞானங் கடந்துபோய்
நல்லிந்
திரிய மெல்லா மீர்த்
தொன்றாய்க் கிடந்த
வரும்பெரும்பா ழுலப்பி

லதனை யுணர்ந்துணர்ந்து

திருவள்ளுவர்

19.

சென்றுங் கின்ப துன்பங்கள்

சென்றுக்

களைந்து பசையற்றுல்

அன்றே யப்போ தேவீ டதுவே

வீடு வீடாமே.

என்று நம்மாழ்வார்

பாசுரத்தைத் தேற்கோள்

காட்டி யிருப்பதனால்,

நன்கு புலப்படும்.

ஊழைத் தழுவாத தெய்வத்தினரும் மதத்தினரும் இல்லை. இன்பதுகர்தற் கின்றியமையாதன இல்லறமும் பொருளும். இல்லறம் நன்கு நடத்தற்கும் பொருள் நன் கீட்டற்கும் ஊழே காரணமா மென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலின், அதனைச் சிறந்த நோக்காக அறத்

திற்கும் பொருளுக்கும்

இடைப் பெய்து

வைத்தார்.

"இன்பம் வீடுபேற்றிற்குக் காரணமாகுமோ? அது மீண்டு மீண்டும் பிறப்பெய்தற்கன்றோ காரணமாவது? அதனை இன்னோரன்ன நூல்களிற் கூறுவது ஏற்றக் குறை

வே யன்றோ?" எனின்,

அற்றன்று;

அகப்பொருளான இன்பம்
பிறவித் துன்பமும்
பிறதுன்பமும்
பயப்பதா யின்,
கடுந்துறவியான
வாதவூரர்
திருக்கோவையாரை
இயற்றியருள்வரா?
சடகோபர்
திருவிருத்தத்தைத் திரு.
வாய்மலர்ந்தருள்வரா?
காமவின்பமே கதியாகக்

கடைப் பட்டவர்கள்
கரையேறி
உய்தற்பொருட்டே
நூல்கள் இன்பத்தை
எடுத்துரைப்பது என்னுங்
கருத்தை, இறை யனு
ரகப்பொரு ளுரையில்,
“காமம் நன்முமாறும்
உண்டு. சுவர்கத்தின்கட்
சென்று போகந்
துய்ப்பலென் றும்,
உத்தர குருவின்கட்

சென்று போகந்
துய்ப்ப லென்றும்,
நன்ஞானங் கற்று வீடு
பெறுவ லென்றும்,
தெய்வத்தை
வழிபடுவலென்றும்
எழுந்த காமங் கண்டா

யன்றே. மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதி பயக்குமாகலின், இக்காமம் பெரிதும் உறுதி

20

திருவள்ளுவர்

யுடைத் தென்பது.

உடைத்தா

மாறு:—அறுவகைப்பட்ட

பாசாண்டிகரும் இணை

விழைச்சு தீதென்ப

அஃது

உண்டாமிடத்துச்

சுற்றத்தொடர்ச்சி

உண்டாம். அஃதுண்

டாகவே, கொலையே

களவே செருக்கே மான

மே என்றித் தொ

டக்கத்துக் குற்றம்

நிகழும். அது கேட்டே

கொழுவும் புரளியும் ந
ரம்பும் மூத்திர
புரீடங்களும்
என்ற இவற்றதியைபு
பொருளன்று; பொருளாயின்
பூவே சாந்தே பாகே
எண்ணெயே அணிகலமே
என்றிவற்றாற்
புனையவேண்டா, தான்
இயல்பாக நன்றாயின்'
என்று அதன்
அ சுபத்தன்மை
உரைப்பக் கேட்டு

நீங்குவர். கடையாயினார்
எத்திறத்தாவது நீங்கார்.
என்னை, பல பிறப்பிடை
ஆணும் பெண்ணுமாய்ப்
பயின்று போகந் துய்த்து
வருகின்றமையின்,
அவர்க்கு இது
காட்டப்பட்டது.
என்னை, பேதையைக்
காதல் காட்டிக்
கைவிடுக்க என்பதனால்,
அவன் தாழ்ம்பட்ட

இணைவிழைச்சினுள்ளே
மிக்கதொன்று
காட்டப்பட்டது.
எஞ்ஞா ன்றும் மூப்
புப் பிணி சா க்காடில்லது,
நிச்ச நிரப்பிடும்பை
யில்லது. இவனும்
பதினாறாட்டைப்
பிரா யத்தானாய் இவளும்
பன் னீராட்டைப் பிரா
யத்தாளாய் ஒத்த பண்
பும் ஒத்த நலனும் ஒத்த

அன்பும் ஒத்த
செல்வமும் ஒத்த கல்வி
யும் உடையராய்ப்
பிறிதொன்றிற்
கூனமின்றிப் போகந்
துய்ப்பா ரென்று
காட்டப்பட்டன.
என்போலவோ எனின்,
கடுத்தின்னுதாஅனக்
கட்டூசிக் கடுத்
தீற்றிய வாறு போலவும்,
கலங்கற்சின்னீர்

தெருளாமையான் உண்ப
ானை அறிவுடையா
னொருவன்
பேய்த்தேரைக் காட்டி
'உது காணாய், ந
ல்லதொரு நீர் தோ
ன்றுகின்ற திருவள்ளுவர்
21

தண்ணீர் பருகாய்; இச்
சேற்று நீர் பருகி என்
செய்தி' என்று நன்னீர்
காட்டி ஊட்டியது போ

லவும், தான்
ஒழுகா நின்றதோர்
இணைவிழைச்சினுள் ளே
மிக்கதோர்
ஒழுக்கங் காட்டினான்.
காட்டக் கேட்டு, அது
பெறு
மாறு என்னை கொல்லோ
எனும். எனவே மக்கட்
பாட்
டினானும் வலியானும் வன
ப்பானும் பொருளானும்

பெற
லாவதன்று, தவஞ்செ
ய்தலாற் பெறலாம்; எ
ன்னை,

வேண்டிய
வேண்டியாங் கெய்தலான்
செய்தவம்
ஈண்டு முயலப் படும்

என்பதாகலா
னென்பது. அதுகே ட்டு
இனி தவஞ்செய்து

யானும் இதனைப் பெறுவேனென்று தன்மாட்டு வேட்
கையால் தவஞ்செய்யும்
செய்யாநின்றானைப்,
"பாவீ
இதன் பரத்ததோ
வீடுபேற்றின்பம் என்று
வீடுபேற்
றின்பத்தை
விரித்துரைக்கும்.
அதுதான், பிறப்புப்

பிணி மூப்புச் சா
க்காடு அவலக் கவலைக்
கையாற்றி
னீங்கி, மணியினது
ஒளியும் மலரினது
காற்றமும் சந்து
னத்துத் தட் பமும்
போல உண் ணின்
றெழுந்த தொரு
போரின்ப வெள் ளத்து
ளென்பது கேட்டு, அதனை
விட்டு

வீடுபேற்றின் கண்ணே
அவாவின்று, உலகமும்
ஞான
மும் புரிந்து வீடு
பெறுவா னென்பது''
என நக்கீரர்
விரித்துரைத்ததைக் க
ண்டு தெளியலர்ம்.
ஆசிரியர்
தொல்காப்பியனுக்கும்
இது கருத்தாகலி

காமஞ் சான்ற

கடைக்கோட் காலை

ஏமஞ் சான்ற

மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனுங்

கிழத்தியுஞ்

சிறந்தது பயிற்ற

லிறந்தகன் பண்பே என்னும்

பொருளதிகாரச்

சூத்திரமும் அதனுரை

யும் நன்குணர்த்தும்.

ஆகவே இல்லறத்தில்

நிற்போன், அறத்தாற்றிற்

பொருளிட்டிக் குடித்தன
ம் நன்கியற்று நின்று.

22

திருவள்ளுவர்

மலையாளமொடு இன்
பநுகர்ந்து, டின்
துறவியாய் வீடு

பெறுவதே இந்நூலின்
இனிதுழுமுடிந்த
பொருளாகும்.

(நன்று, இரண்டாவது பாவினைப் பொருட்பால் எனப் பெயரிட்டுக்கொண்டு, அரசியல் அமைச்சியல் முதலாயினவற்றை விரித்துரைக்கின்ற நோக்கமென்னை என்பது,

திருக்குறளை ஒருமுறை ஒருவர் மனதிலும் இயற்கையாக எழுகின்ற கடா. கவிவாணர் பாட்டிலமைந்த பழம் பொருளை அறிவதரிதாகலின், நூலை ஓதுகின்றவர்களும், நூற்கு உரை காண்கின்றவர்களும், இயன்றமட்டில், அவ்வந்நூலாசிரியருடைய கருத்தை உய்த்துணர்தல் வேண்டும். அங்ஙனமன்றி இவர் தந்தம் மதத்தை நூலிலேற்றி யுரைத்தலும், நூல் தம் மதத்துக்கு இடங்கொடாவிடின் வலிந்தும் நலிந்தும் பொருள் கோடலும், பாடபேதம் பல்லுதலும், அவமேயான காரியங்களாம். நம்மாலியன்ற வரையில் இப்பாலில் ஆசிரியர்

கருத்து இன்னதென்பதை ஆராயப் புகுவோம்.) "இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக் கொண்டார். அது தன் துணைக்காரணமாய் அரசனீதி கூறவே அடங்கும். அரசனீதியாவது காவலே நடாத்து முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்துக் கூறுகின்றார்" எனப் பொருட்பாலுக்குப் பாயிரமுரைத்து உரைகூறப் புகுகின்றனர் பரிமேலழகர். காமத்துப்பாலின் உரைப்பாயிரத்திலும், பரிமேலழகர், "இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றியோதுதலான்" என்றும், "இனி, தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து" என்றும், உரைப்பாயிரத்தின் இறுதியில் "ஈண்டும் பிரிவினை வடநூன்மதம்

திருவள்ளுவர்

23

பற்றி...நூல்வகைத்

நாக்கிக் கூறினர்"

என்றும் கூறுதலால்,
திருக்குறளுக்கு வடநூற்
போக்கையே பின்பற்றி
இவர் உரைகூறுவது
தேற்றம். இக்கருத்துப்
பற்றியேபோலும், இவர்

படைகுடி கூழமைச்சு நட்பா
ணைறுட்
உடையா னரசருள்
ளேறு

என்கிற விடத்தில்
"ஈண்டுக் குடியென்றது
அதனை
யுடைய நாட்டினை"
என்றும், இறுதியிலுள்ள
பதின்மூன்
றதிகாரத்தை ஒழியியல்
என்றும் கொண்டது.
திருவள்
ளுவமாலையில்
போக்கியார் என்பவர்,

அரசிய லையைந் தமைச்சிய
லீரைந்
துருவ லரணிரண்டொன்
றெண்கூழ்—இருவியல்
திண்படை நட் புப் பதினேழ்
குடிபதின்மூன்
றெண்பொருள் ஏழா மிவை
என்க்கூறி ய
வெண் பாவால்,
'அரணிரண்டு, என்பதில்
நாட்டை அரணின் பாற்
படுத்தி யிருப்பதும்,

'ஒன்றேழ்'

'கூழ்' என்பது பொருள்
செயல்வகை யென்பதும்,

'குடி-

'பதின்மூன்' றென்பது
இறுதியிலுள்ள
பதின்மூன்றை

'கார்' மும்
குடியென்பதும்
தெளியப்படுகின்றன.

ஆகவே,

சங்கத்தார் காலத்தில்

ஒழிபியல் என்பதொ
ன்றில்லை

யென்பதும், குடி- எ
ன்பதை அவர்கள் நாடா
கக்கொண்

டிற்றிலர் என்பதும்
தேற்றமாம். ஒழிபியலும்
காவலை

நடாத்து
முறைமையாலும்,
அதனுள் ஆசிரியர்
உழவு,

நல்குரவு, இரவு, இரவச்சம் முதலியவற்றை அதிகாரப் படுத்துவரோ? குடிமையும், அதற் கின்றியமையாத

குணங்களும், குடிமை
யல் வகையும், அதற்
கேதுவான

உழவும், அது செய்
யாதார் எய்தும்
நல்குரவும், அதனால்

இரவும், பிறவும்,
காவலை நடாத்து
முறைமையின்பாற்

படுமோ? அரசியலை
முதலிலும் குடியியலை

வைத்துப்
பொருட்பால் உரைத்த
ஆசிரியர்க்குக் கரு
த்து வேறுதல்
வேண்டும். இப்பாவில்,
இம்மை மறுமை
பயப்பதான

பொருளுக்குத்
துணைக்காரணமான அரச-
னீதி கூறுவதே
அமையுமென்பது
ஆசிரியர்க்குக் கருத்.

காலை, இப்பாலைப் பொருள் செயல் வகையும் அரசனீதி யுமாகப் பகுத்துக்கொண்டிருக்கலாமே. ஆகவே, ஆசிரியர் கருத்துப் பரிமேலழகர் கருத்தன் முதல்வேண்டும்.

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை
ஆதி
தென்புலத்தார் தெய்வம்
விருந்தொக்க மூனென்றுங்
கைம்புலத்தா றோம்ப றலை.

இங்ஙனம் ஓம்புதல்
பொருளின்றி
முடியாதன்றே?
ஆகவே
பொருட்பாலில்
அப்பொருளீட்டுமாறு
கூறினர்.
ன்றி அரசனீதியே
கூறினரல்லர். அரசனும்
இல்வாழ்
வானே, குடிகளும்
இல்வாழ்வானே. அரசன்

பொருள்பட்டு

மாறு வேறு, குடிகள்
பொருள்பட்டுமாறும்
வேறே.

உறுபொருளும் உல்கு
பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன்
பொருள்.

குடிகளுக்கு ''உழந்தும்
உழவேதலை.'' '
'தென்புலத்தார் தெய்வம்

விருந்தோக்கல் தா
னென்றுங் கைம்புலத்தா
ரோம்பல் தலை”
என்றதனால், அரசனுக்கு
இறைப்பொருள் ஆறிலொ
ன்றுயிற்று,
இவ்வைம்புலத்திற்கும்
ஐந்துகூறு வேண்டுதலின்.
ஆகவே இதனைப்
பொருட்பாலில்வேறு
கூறாயினர்.
அவ்வாறிலொன்று

பெறுதற்கு அரசன் செ
ய்யுந் தொழிலாவது ‘
‘குடிபுறங் காத்தோம்பிக்
குற் றங்கடிதல்.’’ அரசன்
பொருளீட்டுதற்குக்
குடிகளுஞ் ஒருவாயி
லாதலினன்றே

திருவள்ளுவர்

25.

படைகுடி

சூழமைச்சு நட்பரணுறும்

உடையான் அரசரு

ளை று

என்னும் இறைமா
ட்சியில். ஆலோசனை
சொல்லக்கூடிய
அமைச்சருடனே
பகைவர் ஊறு
செய்யலாகாது அரணி
லிருந்து, படையையும்
நட்பையுந்
துணையாகக்கொண்டு,

அரசன் பொருள் செய்யவேண்டும் என்பது பொருட்
பாலின் முற்பகுதியின் கருத்து. கயமையில்லாத குடி
கள், தங்கள் குடிமைக்கேற்ற குணங்களையுடையராய்,
பொருளின்மையால் நல்குரவெய்தி இரவாமல், உழவுத்

தொழில் செய்து தங்கள்
குடியை
மேம்படுத்திக்கொள்
ளக்கடவர் என்பது

பொருட்பாலின் பிற்பகுதியின்
முதல்
கருதது.

அறனீனும்
இன்பமுமீனும் நிறனறிந்து
தீதின்றி வந்த
பொருள்

என்றபடி, அறத்தாற்றி
னீட்டிய பொருள்
அறத்தையும், (காம)
இன்பத்தையுங்
கொடுக்கும்; ஆதலால்
அப்
பொருளை அவ்வாற்றின்
ஈட்டுக என்பதே
இப்பாவின்
ஒருதலையான நோக்கமாம். *

* செந்தமிழ் என்னும் பத்திரிகை முதல் புத்தகம் 245-ம் பக்கத்தில், "பொருட்டாலில், இறைமாட்சி முதலாக இடுக்கணழி யாமை யீறுகக்கூறிய அதிகாரங்கள் இருபத்தைந்தும் பெரும்பான்மை

யும் அரசர்க்கு உரித்தாகலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை யீறாகக் கூறிய அதிகாரங்கள் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாகலின் அமைச்சியல் என்றும், நாடு முதலாகப் படைச்செருக் கீறாகக்கூறிய அதிகாரங்களைந்தும் பொருளாதலின் பொருளியல் என்றும், நட்பு முதலாகக் கூடாநட்பீறாகக் கூறிய அதிகாரங்களைந்தும் நட்பின் பகுதியவாதலின் நட்பியல் என்றும், பேதைமை முதலாக மருந்தீறாகக்கூறிய அதிகாரங்கள் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமை யீறாகக்கூறிய அதிகாரங்கள் பதின்மூன்றும் மக்களதியல்பு கூறுதலின் குடியியல் என்றும், ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரங்கள் எழுபதும் ஆறு பகுதியாயிற்று" என ஒரு சாரார் கூறுவர் எனக் காட்டியிருக்கின்றது.

26

திருவள்ளுவர்

இனிக் காமத்துப்பாலையும் வள்ளுவர் வடநூல் வழக்குப்பற்றி ஓதினாரல்லர் என்பது

ஆண்பாலேழ் ஆறிரண்டு
பெண்பால் அடுத்தன்பு பூண்பா
லிருபாலோ ராறுக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு
மூன்றுகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

என வள்ளுவ மாலையில்
மோசிகீரனார் கூறிய
வெண்பா வால் விளங்குமே.

இங்ஙனம்

மனபதைகள
உய்ந்துபோமாற்றை
உரைப் பான்
எடுத்துக்கொண்ட
இந்நாலுக்குப் பாயிர மாக
அமைத்துக்கொண்ட
அதிகாரம் நான்கில்,
பொரு
ளும் இன்பமும்
அறத்துவழிப்படுவன
வாதலின் அவ் வறனை
வலியுறுத்தும் அதிகார

மொன்றும், அவ்வறமுத
லானவற்றை உலகினர்க்கு
உணர்த்தவல்லார்
நீத்தாராக வின் அவர்
பெருமையை
உணர்த்தும்
அதிகாரமொன் றும்,
‘‘மழையின்றி
மாநிலத்தார்க் கில்லை’’
யாதலின்
வான்சிறப்புரைக்கும்
அதிகாரமொன்றுமாக

வைத்து, முதற்கண்
கடவுள் வாழ்த்தைதக்
கட்டுரைத்தார்.
இக்கடவுள் வாழ்த்னைதத்
தாம்
எடுத்துக்கொண்ட
இலக்கியம் இனிது
முடிதற்பொருட்டு
ஆசிரியர் இந் நூலுக்கு
எற்புடைக்கடவுளை
வாழ்த்திய வாழ்த்
தாகக் கொண்டனர்

பரிமேலழகர்

முதலாயினர். வாஅன

இன்றியமையாத உலகத்தில், நீத்தாரால் உணர்த்தப் படும் அறம்பொருளின்ப வகையால் வீடு பெறற்குரிய மாந்தர், தெய்வபக்தி யுடையவராய்க் கடவுளை வாழ்த் துதல் ஒருதலை என்பது வள்ளுவர்க்குக் கருத்து. அதனை லன்றே, இவ்வதிகாரத்தில் ஸர்வ ஜகத்காரணனை ஆதி பகவனை எழுவாயாக முதற்பாவில் நாட்டி, அவனை வணங்காவிடின் ''கற்றதனலாய பயன் என்கொல்'' என்

திருவள்ளுவர்

27

றும், யாக்கை

பெற்றதனலாய பயனும்

அவனை வணங்குதலே,

அவனை வணங்காத்தலை
"கோளிற் பொறியிற்
குணமிலவே" என்றுங்
கூறி, அவனை வணங்கலா
லுய பேறுகளையெல்லாம்
பயனிலையாகக்
கடைப்பிடித்துப்
போந்தார் நம்
வள்ளுவர். ஆகவே
மாந்தர் கடவுளை
வாழ்த்துதலின்
இன்றியமையாமையைக்

கருதிற்று இவ் வதிகாரம்
என்பது போதருரும்.
ஆசிரியர் தம்மைந்
தன்மையாகவும் கடவுளை
முன்னிலையாகவும்
வைத்துரை யாமையும்
இக்கருத்தை
வலியுறுத்துகின்றது.

எடுத்துக்காட்
டாகற்பாலதான
அரசியலில் வாழ்

வாங்கு வாழுங் குடிகள் இம்மையின்ப நுகர்ந்து இறுதி யாக ஈறிலின்ப மெய்தற்குச் சோபானமான இந்நூலில்:

துறவறமாகிய படி-
இன்றியும் அவ்வீறிலின்ப
மெய்தலாகும் என்பதே
ஆசிரியர்க்குக் கருத்து.

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்
என்றும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
தெய்வத்துள் வைக்கப் படும்

புறத்தாற்றிற்

வாணைறையுங்

என்றும் நமதாசிரியர்
கூறியிருக்கின்றனர்.
ஆகவே வையத்துள்
வாழ்வாங்கு
வாழ்பவனுடைய
லக்ஷணத்தை அறப்பாவில்
இல்லறவியலிலும்,
பொருட்பாவில் குடியிய
லிலும், நாடும்

ஆராய்ந்தறிதல்
வேண்டும். ஆயின்
அவன் தன் மனதிற்குத்
தோன்றுமாறு,
அல்லது நூலோர்
தத்தமக்குத் தோன்றி
யாங்கு உரைத்தவாறு,
ஒழுகற் பால னல்லன்.
உயர்ந்தோ
ரொழுக்கத்தையே
பற்றுக் கோடாகக்
கொண்டு ஒழுகற்பாலன்

எவ்வ துறைவ துலகம்
உலகத்தோ

டவ்வ துறைவ தறிவு
என்றும்

உலகத்தோ டொட்ட
வொழுகல் பலகற்றுங்

கல்லா ரறிவிலா தார்
என்றும்

உரைத்தாராகுலின்,
அவ்வுயர்ந்தோ ரொழுக்
கு

கத்தை எடுத்துக்காட்டுவதே ஆசிரியருடைய நோக்க
மாயிற்று. ஆகவே இல்வாழ்வானுக்கு மேல்வரிச்சட்ட
மாகச் சில கூறுதலே இந்நூலின் கருத்து. †

† "புருடார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுள் முதன் மூன்றினையும் வழுவா தொழுகவே மோக்கமெய்துதலான், அதற்கு வேறு வகுத்துக்கூறவேண்டுவ தின்மையின், அஃதொழித்து ஒழிந்த தன்மார்த்த காமப்பகுதிகளே, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்று பெயர் கூறுவார்; மங்கலவகையான் எப்பொருட்கு முத லாகிய கடவுள் வாழ்த்தும், அக்கடவுளின்து செய்கைத்தாகி இவ்வுல கின்றியமையாதாகிய வான் சிறப்பும், பிறப்பினிற் சிறப்பெய்துதற் குரியராகிய முனிவரது பெருமையும், அவராற் கொண்டுய்க்கப் படுகின்ற அறத்தினது வலியும் நான்கதிகாரத்தாற் பாரித்து; பிரம சரியம், காருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாதம் என்னும் நால்வகைப் பட்ட அறத்தினுள் பிரமசரியஞ் சீடராய் நின்றோதுவதல்லது செய் வது பிறிதின்மையின் அதனைப் புதல்வரைப் பெறுதல் என்புழி யடக்கி, காருகத்தம் இருபத்திகாரத்தானும், வானப்பிரத்தம் பத்ததி காரத்தானும், சந்நியாதம் மூன்றதிகாரத்தானும் எல்லார்க்கும் பொது வாகிய ஊழ் ஓரதிகாரத்தானுமாக முப்பத்துநான்கதிகாரத்தான் அறத் துப்பால் கூறி; பொருட்பால், அரசனை முதலாக நாட்டி அவனுக்குப் புறத்துறுப்பாவன படை குடி கூழமைச்சு நட்பரணென ஆறுகப் பகுத்து, அரசர்க்குரிய திறம் இருபத்தைந்து அதிகாரத்தானும், அமைச் சரதியல்பு பத்ததிகாரத்தானும், நாடும் அரணும் பொருளும் ஒரோ ரதிகாரத்தானும், படை இரண்டதிகாரத்தானும், நட்பு ஐந்ததிகாரத் தானும், பகை ஆறதிகாரத்தானும், அரசர்க்கு அங்கமான பெரியா ரைப் பிழையாமை முதல் மருந்தீறாக ஆறும் ஆறதிகாரத்தானும், அதற்குறுப்பாகிய குடிமை முதல் நாணுடைமை எனப்படுவன எழதி காரத்தானும் அரசர்க்கும் ஏனை வருணங்கட்கும் ஒப்பவரித்தாகிய குடி செயல்வகையும், அவருட் பார்ப்பாரொழித்துப் பெரும்பான்மை

III.

அங்ஙனம்

ஆசிரியர்
மேல்வரிச்சட்டமாகக்
கூறும்

அமிசங்கள் சிலவற்றை
ஆராய்ந்து
பார்த்தல்வேண்டும்.

துறவறத்திற்கு
அடியாகின்றது அருள்.
அவ்வருள்

தானும்,

"அருளென்னும் அன்பீன்
குழவி" என்கிறபடி,
அன்பு காரணமாகச்
சனிப்பது. இத்தகைய
அன்பே
இல்வாழ்வானுக்கு
அடியாவது. ஆகவே
இல்லறந் துற
வறமாகிய அறம்
இரண்டற்கும் அன்பே
அடியென்பது
தெளிவு. இது

மாத்திரமோ? அறத்துக்கு
மறுதலை மறம்.

ஒருவன் செய்த
பகைமைபற்றி உள்ளத்து
மறம் நிகழ்ந்
தால், அவனை நட்பாகக்
கருதி, அவன்மேல்
அன்புசெய்ய
அது நீங்குமாதலின்,
அம்மறத்தை அகற்றுதற்கும்
அவ்
வன்பே துணையாம்.

அறத்திற்கே யன்புசார்
பென்ப அறியார்

மறத்திற்கு மஃதே
துணை.

வேளாளர்க் குரித்தாகி ஏனையோர்க்குச் சிறுபான்மை யுரித்தாகிய உழவும் ஓரோரதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்யாதவழி யுளதாகும் நல்குரவும், அதுபற்றித் தோன்றும் இரவும், இரவின்கண் உளதாகிய அச்சமும், இரப்போர்க்கியாதாருள்ளிட்ட கயவர தொழுக்கமுமாகிய இந்நான்கும் ஓரோ ரதிகாரத்தானுமாக எழுபததிகாரத்தாற் கூறி; காமத்துப்பால் கூறுவார், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்தினையும் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றனுட் பெரும்பான்மையும் உரிப்பொருள்பற்றிப் புணர்தலும் புணர்தனிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரிதனிமித்தமும் பாலை எனவும், இருத்தலும் இருத்தனிமித்தமும் முல்லை எனவும், இரங்கலும் இரங்கனிமித்தமும் நெய்தலெனவும், ஊடலும் ஊடனிமித்தமும் மருதமெனவும் ஓரோவொருநிலம் ஐந்ததிகாரமாக இருபத்தைந் ததிகாரத்தாற் கூறி; ஆக நூற்று முப்பத்துமூன் றதிகாரமாக்கி, ஓரோ வதிகாரம் பத்துக் குறள்வெண்பாட்டாகக் கொண்டு, இங்ஙனம்

ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டான் வடநூலுந் தமிழ்நூலுங் கூறும் பொருளெல்லாந் தொகுத்துக் கூறினரென வுணர்க."

இது மணக்குடவருரை.

31

திருவள்ளுவர்

மறத்தை நீக்கி அறத்தைச்
துணிடு.

அன்புற் றமர்ந்த வழக்கென்ப
நின்புற்று மெய்துஞ் சிறப்பு.

ஆகவே, அந்தமிலின்பத்

செய்தார் துறக்க மெய்தல்
வையகத்
தழிவில்லீ டெய்தலான
மாந்தர்க்கு அன்பு
இன்றியமையாதது
என்றவாறு.
அவ் வன்பில்லாதவரால்
உலகிற்கு ஒரு பயனும்
இல்லை. அனபுடையவரே
தம் உயிரையுங்
கொடுத்து உதவத் த
கவா.

அன்பிலா

ரெல்லாந் தமக்குரியர்: அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு.

இங்ஙனம் அன்பு காரணமான இல்வாழ்க்கையின் பயனை வது இல்லார்க்கு ஈந்து அதனால் புகழ் பெறுதலாம்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல

தூதிய மில்லை உயிர்க்கு.

ஏனெனின்,

ஒனரு உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்ரூது நிற்பதொன் றில்.

இத்தகைய புகழும்
சிறந்ததாம்,
ஈதலால் வருவதாயின்,
அதுவே

உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்

ஆதலின். பொருள்படைத்தார், அப்பொருளை எவர்க்
குங் கொடாமல் சேமித்து வைத்தலினும், இல்லாத
வர்க்கு ஈதலால்உண்டாகும் இன்பமே பெரிது. சேமித்த
பொருளைக் கள்வர் முதலானவர்கள் வௌவாதவாறு
வைக்கத்தக்க இடம் இல்லையாலோ எனின்,

நிருவள்ளுவர்

அற்ற தழிபசி தீர்த்தல்
அஃதொருவன்
பெற்றான்
பொருள்வைப் புழி
என்க. இங்ஙனம்
ஈந்துவிட்டால், ஒருவன்
தான் வறி
யனாய்
இன்னலெய்தலாகுமே
எனின்,

பாத்தாண் மரீஇ
யவனைப் பரியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது

என்க. இத்தகையான்
மேலுலகம் புணர்தல்
ஒருதலை.

''மேலுலகம்
இல்லெனினும் ஈதலே
நன்று'' என்பதூஉ இவ்
வாசிரியர் கொள்கை.
''நல்லா றெனினும்
கொளலீதூஉ''

ஆகலின், இரவலர்க்கு
ஈதல் செய்யுமிடத்தும்
அவரால்
பிரதியுபகாரம்
அடையவிரும்புதல்
தக்கதன்று.

கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்
டென்னுற்றுங்
கொல்லோ வுலகு.

உதவிசெய்பவர்
கைம்மாறு வேண்டா

ராகவின் உதவி

பெற்றவன் அவர்
செய்த நன்றியை
மறக்கலாகாது.

அன்பு காரணமாய்,
ஈதலால் பெறும் புகழே
பயனாய்,

பிறனில்

விழைதல்–அழுக்காறு–வெஃகல்–புறங்கூறுதல்

முதலானவற்றை
அஞ்சி, வருவிருந்தோம்பி,
யாவர்மாட்

டும் இனிய வார்த்தை
பேசி, அடக்கம்
பொறுமை முதல
லான நல்லொழுக்கம்
பொருந்தி, "நன்றே
வரினும் நடுவி
கந்தா மாக்கத்தை
ஒழிய" விடுபவனுய்
இல்வாழ்வா னது
க்கு, செய்ந்நன்றி
மறவாமையாகிய குணமே
மிகவும் ஏற்ற

முடையது. முன
தான் ஒருபகாரமும்
செய்யாமலிருக்க,

தனக்கு இன்னது
செய்தால் இன்ன நன்மை
உண்டா

கும் என்றாராயாமல்
தனக்கு இறுதி வந்த
சமயத்தில்,

ஒருவர் செய்த
உபகாரத்துக்குக்
கைம்மாறுக வையகத்.

தோடு வானகத்தைத்
சேர்த்துக் கொடுத்தலும்
அதற்கு
ஈடாகாது.
அவ்விறுதிக்கண்
அவ்வர்செய்த உபகாரம்
தினையளவாயினும்,
தான் அதனைப்
பனையளவா கப்

32

திருவள்ளுவர்
பாவிக்கவேண்டும்.

மனிதன் இயற்றும்

வினைப் பாவங்

களுக்கெல்லாம் கழுவாய் உண்டு; செய்ந்நன்றி மறந்த
பாவத்துக்கு மாத்திரம் கழுவாய் இல்லை. உதவிசெய்த

வர் பிரதியுபகாரம்
வேண்டாமையால், உதவி
பெற்றவன் செய்யலாவது
பிறிதில்லை; அவர்
செய்ததை மறவாமல்
நினைத்திருப்பதே
சாலும். அவர் ஒருகால்
தனக்குத் தீங்குசெய்ய

நேரினும், தான்
அவர்க்குக் கேடு
சூழாது அவர் செய்த
உபகாரத்தையே நினைந்து
அமைந்து, அத் தீமையை
மாத்திரம் அப்பொழுதே
மறந்துவிடுக.

நன்றி மறப்பது
நன்றன்று: நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

அங்ஙனம் மறந்து

விடுவதற்கு

உபாயமாவது

கொன்றன்ன இன்ன

செயினும், அவர்செய்த

ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

மலைமேல் செய்த

ஹிதோபதேசத்தில்

"மனிதர் செய் யும்

தீமையை நீங்கள்

மன்னிப்பீராயின்,
பகவான் உங்
களையும்
மன்னிப்பார்"
என்றுரைத்தார்
ஏசுநாதர்.

பேகன் என்னும் ஆங்கிலவாசிரியர்.. "பழிக்குப் பழி தீர்த்துக்கொள்பவன் பகைவனேடொத்தவன்; அதைப் பாராட்டாமல். மன்னிப்பானுயின் அவனினும் உயர்ந்த வனுவான்; ஏனெனின் மன்னிப்பது ராஜகுண மாகின் றது" எனக் கூறியிருக்கின்றனர். ஸாலமன் என்பவர் தமது மூதுரைகளில், "ஒருவன் செய்த குற்றத்தை மன்னிப்பதே ஒருவனுக்குப் பெருமையாம்" என்றனர். ஆனல் நமது வள்ளுவனுர் பிறர்செய்யும் தீமையை மன் னிக்கும்படி சொல்லாமல், அதனை அப்பொழுதே மறந்துவிடுக என்றனர். ஏசுநாதர் மேற்கூறிய உப தேசத்தில் "உங்களுடைய பகைவரை நேசியுங்கள், உங்களைச் சபிக்கின்றவரை வாழ்த்துங்கள் உங்களை வெறுக்கின்ற

வர்களுக்கு நன்மை
செய்யுங்கள்" என்றார்.
நமதாசிரி
யரும்,
பொறையென்னும்
அதிகாரத்தில்,
மிகுதியால் மிக்கவை
செய்தாரைத் தாந்தம்
தகுதியால் வென்று
விடல்

என்றும்,

இன்னுசெய்யாமை என்னு

மதிகாரத்தில்,

இன்னு செய்தாரை

ஒறுத்தல் அவர்நாண

நன்னயஞ் செய்து

விடல்

என்றும், தீவினையச்சம்

என்னும் அதிகாரத்தில்,

அறிவினு ளெல்லாம்

தலையென்ப தீய

செறுவார்க்கும் செய்யா

விடல்

என்றும், பண்புடைமை
என்னும் அதிகாரத்தில்,

நண்பாற்று ராகி நயனில
செய்வார்க்கும்

பண்பாற்று ராதல் கடை
என்றும், கண்ணோட்டம்
என்னும் அதிகாரத்தில்,

ஒறுத்தாற்றும் பண்பினர்
கண்ணும் கண்ணோடிப்

பொறுத்தாற்றும் பண்பே
தலை

என்றும், பல்லிடத்தும்
இவ்வுறுதியை
உரைத்தனர். இங்ஙனம்
இன்னாசெய்தார்க்கும்
இனிய செய்யுமாறு வற்
புறுத்தற்கண் எல்லாரும்
ஓராறுபட்டு
ஒப்பவராயினும்,
தீமையை மறந்துவிடுக
என்னுமிடத்தில்,
ஏனையரிற் சீரி —
யாராயினார் நமது வள்ளுவனாரே.

இல்லறத்தில்,
இல்வாழ்வான் ஏனை
மூவர்க்குந் துணை யாகி,
மற்றையில்வாழ்வார்
முதலாயினருடனே
கலந்து உறவாடுகையில்
அனுசரித்தலான
பொதுலக்ஷணங்களைச்
சொன்னார்.
பொருட்பாலில்
குடியியலில், அவ்

வில்வாழ் வான்
அரசியலிலே ஒரு
குடியாய்க் கௌரவமான
குணங்கள் பொருந்தி,
நல்குரவால் இரந்து
இன்னலெய்தாமல்,
உழவுத்தொழிலால் தன்
குடியை மேம்படுத்தும்
திறத்தைக் கூறுகின்றார்.
இங்கே விளக்கும்
தலைமையான

திருவள்ளுவர்

குணங்கள் மூன்று.
அவை மானம்,
பெருமை, சான்றாண்மை
என்பன. மானமாவது
எப்போதும் தமது
நிலையில் தாழாமையும்,
அங்ஙனம் தாழ்வு வந்தால்
உயிர் வாழாமையுமாம்.

"மயிர்நீப்பின் வாழாக்
கவரிமா வன்னார்"

உயிர்நீப்பர் மானம்
வரின்.

அவரவ ரெய்தும்
பெருமைக்கு, வள்ளுவர்,
ஊழ் முதலானவற்றைக்
காரணமாகக் கொண்டிலர்.
அவரவர் பெருமைக்கு
அவரவர்களுமம்
அவரவர்கள் செய்கை
வேறு பாடுகளுமே

காரணம் என்பதை

ஒருமை மகளிரே

போலப் பெருமையும்

தன்னைத்தான்

கொண்டொழுகின் உண்டு

எனவும்

பிறப்பொக்கும்

எல்லா வுயிர்க்கும்:

சிறப்பொவ்வா

செய்தொழில்

வேற்றுமை யான்

எனவும் உரைத்தனர்.

பெருமையின்
இலக்கணமாவது
செயற்கரியசெய்தல்.
தருக்கின்மை, பிறர்குற்றங்
கூறுமை முதலான
நற்குணங்களால்
பெரியாரது தன்மை
என்பதை
பெருமை யுடையவர்
ஆற்றுவர் ஆற்றின்
அருமை யுடைய
செயல்

என்றும், ''பெருமை
பெருமித மின்மை''
என்றும், ''அற்ற
மறைக்கும் பெருமை''
என்றும் விளங்க வைத்
தார்.

சான்றுண்மையாவது பல குணங்களானும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை. இவ்வதிகார மொன்றுமே திருக்குறளின் சிரோபூஷணமாகக் கொள்ளற்பாலது,

மனிதர் நல்வழிப்பட்டு
மேம்பாடெய்தற்கு
எடுத்துக் காட்டலான
மனிதனுடைய திறத்தை

விளக்குவது இவ்

திருவள்ளுவர்

35

வதிகாரமே யாதலின்.

இங்ஙனம்

எடுத்துக்காட்டலான

மனிதனது சால்புக்கு

ஆதாரமான குணங்கள்

ஐந்து.

அன்புநாண் ஒப்புரவு

கண்ணோட்டம் வாய்மையோ

டைந்துசால் பூன்றிய

தூண்.

இச் சால்புடைமையின்

பயனுவது இன்னு

செய்தார்க்

கும் இனியவே

செய்தலாம்.

ஊழி பெயரினுங்

தாம் பெயரார் சான்ருண்மைக்

காழி யெனப்படு வார்

குடிகளே

யோம்புதற்கு அமைச்சு
முதலிய அங்கங்
களுடனே அரசியற்றிப்
பொருளீட்டும் அரசனைப்பற்றிச்
சொல்லுமிடத்தில்,
கல்வி, ஊக்கமுடைமை,
நட்பு
என்றாற்போல்வன
எல்லாரும் அறியத்தக்க
விஷயங்கள்.
கல்வியைப்பற்றிக்

கூறுமிடத்தில் கல்வியின்
பயனைக்
கூறிய
தாமின் புறுவ துலகின்
புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்
என்னுங் குறள் மிகவும்
பாராட்டத்தக்கது.
உலகத்தின்
பெருமையை
ஆக்க மதர்வினைச் செல்லும்
அசைவிலா

என்பதனால்
உணரலாம். நட்பு,
அரசின் அங்கவியல்பிற்
சேர்ந்ததாயினும்,
குடிகளுக்கும்
இன்றியமையாச் சிறப்
பிற்றுதலிற்போலும்,
இதனைக் குடியியலுக்கு
முன்னே
வைத்தது. நட்பினை

ஞண்டாகும் இன்பம்
காமவின்பம்

போன்றது: உது காண்
எனக் காட்டலாவ
தொன்றன்று.

சின்னீரதான
காமவின்பம் போலே,
நட்பிலுலாய வின்

பம் தெய்வதன்று,
அந்நட்புப்
பெரியோரிடத்துப்

பொருந்துவதான்
முகுமிடத்து. "நிறைநீர
நீரவர்

கேண்மை பிறை".
இங்ஙனங் கற்றறிந்த
பெரியோர்களுஞ்

குள்ளே உண்டாகி
நாட்குநாள் வளர்வதான

நட்பின்

பத்தை

நவிலுறு நூனயம் போலும்

பயிலுறும்

பண்புடை யாளர் தொடர்பு

என உவமை

முகத்தான் விளக்கிய

திறம் மிகவும் வியக்க

லாவதே. இத்திறம்

அவ் விருதிறத்தையுஞ்

சுவைத்த

வர்கட்கே
கண்கூடாகும்.
இன்னோரன்ன
இன்பந்தருவ
தாயினும்,
நகுதற் பொருட்டன்று நட்டல்:
மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.
உற்றதுரைத்த
பின்னரன்று, நட்பினர்
ஒருவர்க் கொரு

வர் செய்யும் உதவி.

உடுக்கை யிழந்தவன் கைபோல

ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு.

இந்நட்பின்

நுட்பத்தை

இனையர் இவரெமக்

கின்னம்யாம் என்று

புனையினும் புல்லென்னும் நட்பு

என இவ்வாசிரியர்

உரைத்தாங்கு

வேறெவரும் உரைத்த

தாக யான்

இதுகாறும் கண்டதும்

கேட்டதும் இல்லை.

நட்பிற்

பிழைபொறுத்தலைக்

குறித்துப்

பேசுன் என்னும்

ஆசிரியர், ஜோப் என்னும் மகான் விவிலிய நூலில் "நாம் கடவுளிடத்தில் நன்மைபெறுமாறு போலே தீமையைத்

தானும்

அமைதியுடனே

ஏற்றுக்கொள்ளக்
கடவோ
மன்றோ?”
என்றுரைப்பதை
மேற்கோள் காட்டி, நட்
பினர் திறத்திலும்
ஒருவாறு அங்ஙனமே
எனக் கூறிவிட்டனர்.
நபது தமிழாசிரியரோ
அங்ஙனமன்றி,

பேதமை யொன்றே
பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார்
செயின்

கேளிழுக்கங் கேளாக்
கெழுதகைமை[1] வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார்
செயின்

என்றும் உரைத்தார்.

துறவறத்துக்

கடியாகின்ற
அருளாவது கொல்
லாமை.
உண்ணற்பொருட்டு
ஊனைக் கொள்வா ரிலரா
யின் விலைப்பொருட்டு
ஊனை விற்பாரும்
இலராவர்.
அவிசொரிந் தாயிரம்
வேட்டவின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை
நன்று.

தவநிலையில் நிற்பவராய்
நடித்துக்
காமவின்பத்தை விரும்
பும்
கூடாவொழுக்கத்தினர்
புலித்தோல் போர்த்துப்
பைங்கூழ் மேயும்
பசுவுக்குச் சமமாவர்
என வரைத்து,
மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்த தொழித்து

விடின்

என்றனர்.

இன்னவர்கள்

உள்ளத்தா லுள்ளலுந்

தீதே பிறன்பொருளாக்

கள்ளத்தாற் கொள்வே

மெனல்.

அப்பால் வாய்மை

மூதலாக அவாவறுத்த

லீறுகத்

துறவறத்துக்

கொருதலையானவற்றைக்

கூறுமிடத்தில்
வாய்மையை மாத்திரம்
சற்று ஆராய்ந்து
பார்ப்போம்.
யாமெய்யாக்
கண்டவற்றுள் இல்லை
எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.
திரிகரணசுத்தியிற்
பிரதானமான
மனோசுத்திக்குக் கார
ணம் இவ்வாய்மையே.

புறந்தூய்மை நீரா னமையும்:

அதுந்தூய்மை

வாய்மையாற்

காணப் படும்.

வாய்மை வல்லான்

பிறவறங்களைச் செய்

யவேண்டா.

திருவள்ளுவர்க்கு,

---

(1) கட்புரிமை.

திருவள்ளுவர்

வாய்மை யெனப்படுவ

தியாதெனின், யாதொன்றும்

தீமை யிலாத சொலல்.

ன்று.

தமிழ்வேதமாகக்

கொள்ளும் இந்நூலில்,

அறத்

துப் பாலில்,

துறவறவியலில்,

வாய்மையை வற்புறுத்து

மிடத்தில்,

11

பொய்ம்மையும் வாய்மை யிடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்

என இவ்வாசிரியர் எடுத்துரைத்தது ஏற்குமா? கலப்பா லில் துளிப் பிரை விட்டாற் போல இஃது இந்நூலின் பெருமையைக் குன்றச் செய்வதொன் றன்றே என்பர் சிலர். உலகத்துக் கின்றியமையாதவற்றை இத்தனைத் திட்பமு நுட்பமுமாகக் கூறிய குரவர், இது நூலின்

பெருமையைக் கெடுப்பதாக இருப்பினும், இதனால் உல
கினர்க்குக் கேடுண்டாவதாக இருப்பினும், இதனை இங்
ஙனம் இவ்விடத்தில் கூறியிரார். உலகினருடைய
பொதுநன்மையை நாடினவர் நமதாசிரியர். இன்று
செய்தார்க்கும் இனியவே செய்யுமாறு வற்புறுத்து
கின்றவர். எல்லாருடைய பொதுநன்மைக்கும் வாய்மை
யே காரணமன்றே. அந்நன்மையானது ஏகதேசமாக
ஒரோவோர் காலத்துப் பொய்ம்மையாலும் விளைவதா
யின், அது மெய்ம்மையோ டொத்ததேயன்றே. ஆகவே,
அப்பொய்ம்மை மெய்ம்மையின் பாலதுதானே. அப்
பொய்ம்மையால் கெடுவாரின்மையின் அது தன்னெஞ்
சைச் சுடுவது மில்லையே. இங்ஙனம் புரைதீர்ந்த நன்மை
பயக்கும் பொய்ம்மை மெய்ம்மையின் பாலது என்று
கூறும் கருத்துப்பற்றியே போலும் இவர்

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

என வரையறுத்துக் கொண்டது.

•

திருவள்ளுவர்

இந்நூலில்
அவ்வப்பாவில்
அவ்வவ்வியலில் எவ்
வெவரை நோக்கி
எவ்வெவ்விஷயங்கள்
கூறப்பட்டனவோ
அவ்வவ்விஷயங்கள்
அவ்வவரையே
நோக்கின என்ப
தில்லை.
"குடித்தனமோ

துரைத்தனமோ”
என்பது |
பழமொழியாதலின்,
அரசர்
அமைச்சர்களுக்குக்
கூறிய
வற்றிற் பல,
குடியானவனும்
கொள்ளற்பாலன். குடி-
யியலிற் கூறியவற்றிற்
பல, அரசரும்
அமைச்சரும்

கொள்ளற்பாலனவே.
துறவறத்திற் கூறிய
புலான்மறுத்
தல் வாய்மை
முதலாயின, ஏனையறங்
காப்பாருங் கொள்
ளற்பாலனவே. மனிதன்
பலவேறு நிலைமைகளில்
தழுவற்
பாலனவற்றை
ஆங்காங்கு
கூறியிருப்பினும்,

நல்லரசு

னுடைய நாட்டிலே

இல்வாழ்வான்

சான்றாண்மையுடனே

குடிமையை

நடத்தாநின்று

இன்பநுகர்ந்து பின்

துறந்து

துறக்க மெய்தலே

இந்நூலின்

நோக்கமாதலின், ஓவ்

வொருவரும் இத்தமிழ்

மறையை முற்றவும் நன்கு
கற்றல்
வேண்டும்.
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.
இனி
அறத்தாற்றின்
இல்வாழ்க்கை யாற்றின்
புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ
தெவன்
எனக்கூறிப் பின்னே,

தலைப்பட்டார் தீரத் துறந்தார்;
மயங்கி
வலைப்பட்டார்
மற்றை யவர்

எனக் கூறியதும்,

உளமிற் பெருவலி
யாவுள? மற்றொன்று
சூழினுஞ் சான்முந்
துறும்
எனக்கூறிப் பின்னே,

திருவள்ளுவர்

ஊழையும் உப்பக்கங் காண்பர்
உலவின்றித்
தாழா துஞற்று பவர்
எனக்கூறியதும்
முரண்படக் கூறலாம்;
இன்னுசெய் தாரை யொறுத்தல்
அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

எனக்கூறிப் பின்னே,
இன்னுசெய் தார்க்கும்
இனியவே செய்யாக்கால்,
என்ன பயத்ததோ சால்பு
என்றும்
நண்பாற்று ராகி நயமில
செய்வார்க்கும்

பண்பாற்று ராதல் கடை
என்றும் கூறியது,
கூறியதுகூறலாம்;
வலியறிதல் என்

னும்

அதிகாரத்திறுதியில்

உரைத்த

ஆற்றின் அளவறிந் தீக.

அதுபொருள்

போற்றி வழங்கு நெறி

ஆகா றளவிட்டி தாயினும்

கேடில்லைப்

போகா றகலாக் கடை

அளவறிந்து வாழ்தான்

வாழ்க்கை உளபோல

இல்லாகித் தோன்றுக் கெடும்

உளவரை தூக்காத ஒப்புர

வாண்மை

வளவரை வல்லைக் கெடும்

என்னும் நான்கு

பாக்களும்

பொருள்செயல்

வகையிலோ

குடிசெயல் வகையிலோ உரைக்கத்தக்கவை; அவைகளை வலியறிதலில் உரைத்தது இடப்பிறழ்வாம்; கட்பு அதிகாரப்பட்ட விடத்தில் சூது மருந்து என்பனவற்றை விரித்துரைத்தது மற்றொன்று விரித்தலாம் எனின், மேற்கூறியாங்கு நூலினை முற்றக்கற்று நூலின் நோக்கத்தைத் தொகுத்துப்பார்த்து நுனித்தறிவார்க்கு இவைகளும் இவைபோல்வன பிறவும் அக்குற்றங்களாகாமை தேற்றமாம்.

திருவள்ளுவர்

மணக்குடவர் உரையில்

5. இல்வாழ்க்கை

6. வாழ்க்கைத் துணைநலம்

7. மக்கட்பேறு

8. அன்புடைமை

9. விருந்தோம்பல்

10. வாய்மையுடைமை

11. செய்ந்நன்றியறிதல்

12. நடுவுநிலைமை

13. பொறையுடைமை

14. அழுக்கறாமை

என்னும் அதிகாரங்களும்,

25. அருளுடைமை

26. இனியவைகூறல்

27. அடக்கமுடைமை

28. தவமுடைமை

29. கூடாவொழுக்கம்

30. அழுக்காறுமை

இல்லற வியலின்கீழ்,

15. பிறனில் விழையாமை

16. வெகுளாமை

17. இன்னாசெய்யாமை

18. கொல்லாமை

19. புலான்மறுத்தல்

20. கள்ளாமை

21. தீவினையச்சம்

22. ஒப்புரவறிதல்

23. ஈகையுடைமை

24. புகழுடைமை

துறவறவியலின்கீழ்,

31. வெஃகாமை

32. புறங்கூறாமை

33. பயனிலசொல்லாமை

34. நிலையாமை

35. துறவுடைமை

36. மெய்யுணர்தல்

37. அவாவறுத்தல்

என்னும் அதிகாரங்களும், இம்முறையே அடைவுபெற்றிருக்கின்றன. பரிமேலழகர் உரையில் வாய்மையுடைமை–வெகுளாமை–இன்னாசெய்யாமை–கொல்லாமை – புலான் மறுத்தல்–கள்ளாமை என்னும் ஆறதிகாரங்கள் துறவறவியலிலும், இனியவைகூறல் – அடக்கமுடைமை – அழுக்காறுமை – வெஃகாமை – புறங்கூறுமை – பயனிலசொல் லாமை என்னும் ஆறதிகாரங்கள் இல்லறவியலிலும் சேர்த்திருக்கின்றன. செய்யுள்களின் முறையும் இவ்

விருவருரையிலும்
வேறுபடுகின்றன.
இங்ஙனம் அதிகார
அடைவும் செய்யுள்
முறையும் வேறுபடினும்,
இருவரும், எறிச்சலூர்
மலாடனார் காட்டிய

திருவள்ளுவர்

பாயிரம் நான்கில்
அறம்இருபான் பன்மூன்றே

தூய துறவறம்ஒன் றூழாக—ஆய
அறத்துப்பால் நால்வகையாய் ஆய்ந்துரைத்தார், நூலின்

திறத்துப்பால்

வள்ளுவனார் தேர்ந்து

கணக்கைமாத்திரம் சரிக்கட்டிவிடுகின்றனர். ஒரு பாலை வில் வேறுபாடுகள் இவ்வளவானால், முப்பாலிலும் திருவள்ளுவர் உள்ளபடியே கொண்ட அதிகாரவடைவும் செய்யுள்களின் முறையும் என்ன என்பதைத் துணிதல் இயலவில்லை. எளிதிற் கிடைக்கலாகாத ஏனை உரைகள் கிடைத்தாலன்றி இவ்வையம் தீர்தலான திறம் வேறென்றும் புலப்படவில்லை.

இந்நூல் ஏறக்குறைய இப்பொழுது எஞ்சிநிற்கும் இலக்கியங்கள் எல்லாவற்றினும் முற்பட்டதாகக் காண்கின்றது. எங்ஙனமாயினும், இதற்கு முன்னே இன்னோரன்ன நூல் தமிழில் இருந்ததாகக்கண்டதுமில்லை, கேட்

டதுமில்லை.

வடமொழியில் உள்ள

மிருதிகளும் வருண

சமயச்சார்புடனே
நியாயப்பிரமாணங்களை
அவ்வக்

காலத்துக் கேற்றபடி
கூறிய நூல்களாயின.
நாம் கண்ட

கேட்ட பிற
தேயங்களிலும்,
இவ்வகையான நூல்

யாதொன்றும்
இருப்பதாக இதுகாறும்

கேட்டிலோம்.

ஆகவே, இஃது
இணையில்லாத
நூலாயிற்று. நூற்பாகு
பாடுகளும்
நூற்போக்கும் நுதலிய
பொருளும் நமதா
சிரியர் தமது
கல்விகேள்விகளி
னூற்றலால் தாமே தமது
புந்தியில் புதுவதாகக்
கூர்ந்

துய்த்தறிந்துரைத்தனவா

மாதலின்,
இவ்வாசிரியரும்
இணையில்லாதவராயினர்.
ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந்
திதனினிது
சீரிய
தென்றொன்றைச்
செப்பரிதால்:—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு
வள்ளுவனர்
ஒது குறட்பா

வுடைத்து.

என்றுரைத்தார்

இருமொழியிலும்

வல்லவராக எண்ணப்

திருவள்ளுவர்

43

பட்ட கடைச்

சங்கத்தினர்.

"என்னி னுயர்வுறும்

இனித் தமிழ்மொழியென,

முன்னுறு பெருவட
மொழி யுழுக் காறுற"
என்றனர்
பிற்பட்டவர்களும்.

IV.

வள்ளுவனுர் ஒவ்வோ
ரதிகாரத்தையும்
பப்பத்துக் குறளாகக்
கூறுவதென்று
வரையறுத்துக்
கொண்டதில் இரண்டு

விதமான
இடர்ப்பாடுண்டு.
அதிகாரப்பட்ட பொருள்
பத்துக்குறட்குக்
குறைவதாயின், கூறியது
கூறுதல் மற்றொன்று
விரித்தல்
மிகைபடக்கூறல் முத
லான குற்றங்களுக்கு
இடமுண்டாகும்:
அதிகாரப்பட்ட பொருள்
பத்துக்குறளின்

மிகுவதாயின்,
குன்றக்கூறல் முதலான
குற்றங்களுக்
கிடமுண்டாகும்:
அன்றியும்
விதிமுகத்தானும்
மறைமுகத்தானும் பல
அதிகாரங்கள்
கூறவேண்டுவது மாகும்.
கடவுள்வாழ்த்து
அதிகாரப் பட்ட
விடத்தில், நீடுவாழ்வார்

இன்னார் என்பது
இரண்டு குறளால்
உணர்த்தினர்.
அவ்விரண்டு குறளையும்
ஒன்றுக
இணைத்திருக்கலாம்.

அறவாழி யந்தணன்றாள்
சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்தலரிது
என்ற குறளையும்
பிறவிப் பெருங்கட னீந்துவர்
நீந்தார்

இறைவனடி சேரா தார்
என்ற குறளையும் ஒரு
முடிபாக முடிப்பது
நன்றாகும்.

இல்வாழ்க்கை
அதிகாரப்பட்ட
இடத்தில், துறவறத்தி
னும் இல்லறம்
ஏற்றமுடையது
என்பதற்கு,

அறத்தாற்றி

னில்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ
தெவன்
என்றும்,

திருவள்ளுவர்
இயல்பிலே
னில்வாழ்க்கை வாழ்பவ
னென்பான்
முயல்வாரு

எல்லாந் தலை

என்றும்,

ஆற்றி னழுக்கி

யறனிழுக்கா வில்வாழ்க்கை

நோற்பாரி

னேன்மை யுடைத்து

என்றும் மூன்று குறள்

கூறினர். நட்பு

அதிகாரப்பட்ட

விடத்தில்

கூறவேண்டுவன

வெல்லாம்

ஓரதிகாரத்தில்

அடங்காமையால், அதனைப் பல வதிகாரங்களாக துக்கொண்டார்.

வகுத்

நமதாசிரியர் இந்நூலை ஏனைப்பாக்களாற் கூறுது குறட்பாக்களாற் கூறிய எடுத்துக்கொண்டதனால், சுருங்கச்சொல்லல் – விளங்கவைத்தல் – நவின்றோர்க்கினிமை – நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகள் இந்நூலில் இனிதாக அமைவனவாயின. ஆயினும் குறட்பாவாற்

கூறுதலால குறைவொன்று குறுக்கிடுகின்றது. அதி
காரப்பட்ட விஷயங்களின் இலக்கணத்தை ஒருமுடி
பால் விளக்குவது விளங்கவைத்தலாக இருக்கும். அங்
ஙனம் முடிபொன்றால் முடித்துக்கூற முடியாதவாறு,
அதிகாரப்பட்ட பொருள் விரிவதாயின், அதனை ஒரு
குறட்பாவில் விளங்கவைப்பது இயலாது. அமைச்சு—
தூது—அரண்—நட்பு என்றாற்போல்வனவற்றை விளக்கு
கின்றுழி, இக்குறைவு எல்லார்க்கும் இனிது விளங்கும்.

ஒவ்வோரதிகாரத்தையும் பப்பத்துக் குறட்பாவாகக்
கூறுவதனாலும் இந்நூலைக் குறளாற் கூறிய எடுத்துக்
கொண்டதனாலும் எழுகின்ற இடர்ப்பாடுகளன்றி, இந்
நூலில் வழூஉச்சொற்புணர்த்தல் மயங்கவைத்தல் வெற்
றெனத்தொடுத்தல் சென்றுதேய்ந்திறுதல் நின்றுபய
னின்மை முதலான குற்றங்கள், பலமுறை தேடித்துரு

விப் பார்த்தவிடத்தும், ஒன்றும் காணப்படா.) அதனா
லன்றே மருத்துவன் தாமோதரனார்

சிந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்

மோந்தபின் யார்க்கும்
தலைக்குத்தில்:—காந்தி
மலைக்குத்து மால்யானை!
வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத்
தற்கு
என்னூர். ஆகவே
இந்நூலின் நலங்களை
யென்றமட்டில் ஒருவாறு
ஆராயப்புகுவோம்.

நாலடியாரில்,

பெரியவர்

கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா
நந்தும்---வரிசையால்
வானோர்
மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார்
தொடர்பு
எனப் பெரியாரோடு
பெரியார் கொள்ளும்
நட்பு, பிறை மதி
வளர்வதுபோல
நாட்குநாள் வளரும்;

இழிஞரோடு இழிஞர்
கொள்ளும் நட்பு,
நிறைமதி
தேய்வதுபோல நாட்கு
நாள் தேய்ந்துவிடும்
என்பதனை, வள்ளுவர்

நிறைநீர நீரவர் கேண்மை
பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

என ஒரு குறளில்
சுருங்கச்
சொல்லியிருக்கின்றனர்.
பெருமுத் தரையர் பெரிதுவந்

தியும்

கருனைச்சோ ரூர்வர்

கயவர்——கருனையைப்

பேரு மறியார் நனிவிரும்பு

தாளாண்மை

நீரு மமிழ்தாய் விடும்

என்ற நாலடியின்

கருத்து,

தெண்ணீ ரடுபுற்கை

யாயினும் தாடந்த

துண்ணலின்

ஊங்கினிய தில்

என்ற குறளில்
அடங்கியிருக்கின்றது.

46

திருவள்ளுவர்

தினையனைத்தே
யாயினுஞ் செய்தநன்
றுண்டால்
பனையனைத்தா
உள்ளுவர்
சான்றோர்.—பனையனைத்

தென்றுஞ் செயினும்
இலங்கருவி நன்னுட!
நன்றில நன்றறியார்
மாட்டு
என்றது நாலடி:
நினைத்துணை நன்றி
செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரிவார்
என்றது குறள். ஒரு
பொருளையே ஓதும்
இரண்டு நூலே

ஒப்பிட்டுப்
பார்க்குமிடத்தே
அவ்வந்நூலின் திறம்
விளங்குமாதலின்,
இங்ஙனம் நாலடியையும்
குறளையும்
ஒப்பிட்டுப்
பார்த்தோம்.
ஒப்பிட்ட ஒவ்வொரு
பொருளையும் நமது குறளே
சுருங்கச்சொல்வதா

யிராகின்றது.

ஒரோர் பொருளை
உவமையான்
விளக்குமிடத்தில் உவ
மைக்குக் கொடுக்கும்
அடையைப்
பொருட்கண்ணும்
பொருளுக்குக்
கொடுக்கும்
அடைய உவமைக்கண்ணும்
கூட்டிக்கொள்ளும்படி
வைத்துப் பொருளை

நன்கு உய்த்
துணருமாறு
சுருங்கச்சொல்லுவர்.
இதற்கு உதாரணம்,
சமன்செய்து சீர்தூக்குங்
கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்
கணி
உரைக்கலுற்ற ஓர்
பொருளின் ஒரு
பகுதியை எழுவா

யாகவைத்து

அதன் பயனிலையைச் சுருக்கமாக ஒருவமை

முகத்தான் முடித்துப்

பொருளின் கருத்தை

உய்த்துணர

வைப்பர். உதாரணம்,

''உலகவாம்

பேரறிவாளன்திரு''

பாழ்போகாது

நெடிதுநின்று

எல்லார்க்கும்

வேண்டுவன தப்பாது

உதவும் என்பதை

''ஊருணி

நீர்நிறைந்தற்று'' என்ற

உவமையால் முடித்தார்.

பயன்மரம் உள்ளூர்ப்

பழுத்தற்றால் செல்வம்

நயனுடை யான்கட்

படின்

மருந்தாகித் தப்பா

மரத்தற்றால் செல்வம்

பெருந்தகை யான்கட்

படின்

என்ற பாக்களும்

அங்ஙனம்

உப்புணர்வைத்தனவே

ஆகவே இந்நூலில்

சுருங்கச்சொல்லல்

என்னும் அழகு

நன்கமைந்துளது

என்பதற்கு ஐயமின்று.

தினையளவு போதாச்
சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும்
படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும்
வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா,
யாரி
என்றூர் கபிலர்.
அரிசிற்கிழாருரும்,

பரந்த

பொருளெல்லாம் பாற்றிய வேறு

தெரிந்து

திறந்தோறும் சேரச்—சுருங்கிய

சொல்லால் விரித்துப்

பொருள்விளங்கச் சொல்லுதல்

வல்லாராா்

வள்ளுவரல் லால்

என்று கூறிப்போந்தார்.

இங்ஙனம் சுருங்கச்

சொல்லிப்போதல்

இவ்வாசிரியர்
வழக்காயினும், பொருளானது
கவர்படுதலும் திரிபாதலு
மின்றித் தாம்
கூறுவனவற்றை யெல்லாம்
விளங்கவே
வைத்திருக்கின்றனர்.
ஓரோவிடத் துண்டாகின்ற
திரி புதாணும்,
உரையாசிரியர்
தாணட்டித் தனது
நிறுத்த லாணும்,

பிறிதொடுபடாது தன்
மதங்கொளலானும் எழு
வதேயன்றி, ஆசிரியரால்
நிகழ்வதன்று.

இந்நூன் முற்றுமே நவின்றேர்க்கினிமை பயப்ப தாயினும், ஒவ்வோ ரதிகாரத்திலும் பெரும்பான்மை யாய் ஒவ்வொரு குறள் நாயகமணி போன்று நனிநயம் பயப்பது, இந்நூலே ஒரு முறை இரு முறை ஓதினோர்க்கும் உணர்வு தொன்றுகக் கிடக்கின்றது. இது மூன்றுவது

பாவில் இன்னும்
சிறப்பாகக் காணப்படும்.
சிலவற்றை ஈண்டு
எடுத்துக்காட்டுவோம்.

திருவள்ளுவர்

உண்டார்க
ணல்ல தடுநருக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்த வின்று
என்பது
தகையணங்குறுத்தல்.

இருநோக் கிவளுண்க ணுள்ள
தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய்

மருந்து

என்பது குறிப்பறிதல்.

தொடிற்சுடி

னல்லது காமநோய் போல

விடிற்சுட லாற்றுமோ தீ

என்பது

பிரிவாற்றுமை.

மழித்தலு நீட்டலும் வேண்டா

வுலகம்

பழித்த தொழித்து விடின்

என்பது

கூடாவொழுக்கம்.

நன்றறி வாறிற் கயவர்
திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்

என்பது கயமை.

நன்றியில் செல்வத்தை
விரிக்கு
மிடத்தில்

வைத்தான்வாய் சான்ற
பெரும்பொரு ளஃ துண்ணுன்
செத்தான் செயக்கிடந்த
தில்

என்றூர். பெருமை
என்னும் அதிகாரத்தில்
பணியுமா மென்றும் பெருமை:
சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து
என்றூர்.
செவிக்குணவில்லாத போழ்து
சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்
என்றது கேள்வியில்.

திருவள்ளுவர் அவ்விதத் தழுக்கா

றுடையானைச் தவ்வையைக்
காட்டி விடும்
என்பது பொருளுமையின்
பயன்.
(நன்மொழி
புணர்த்தலாவது

49:

செய்பவள்
அவ்வப்பொருளுக்.
கேற்ப நல்ல

சொற்களைச் சேர்த்தல்.
இதைச் சுட்டி, நாம்
ஒன்றும்
எடுத்துரைக்கவேண்டா.
“பழுது தமிழ்ச்
சொல்லுருமை
நாவிரண்டில்” என
ஔவையார் உரைத்து
விட்டனர்.
பிற்பட்டவர்களில்
இலக்கணக்கொத்து
டையார்

பல்காற் பழகினுங் தெரியா
வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர்
கோவையார்
மூன்றினு முழங்கும்
எனக்கூறினர்.

ஓசையுடைமை
என்பதை
சந்தவின் பழுடைத்தாதல்
எனக்
கொள்பவாகலின், ஈண்டு
ஆராய்ச்சியின்று. நூத

லும் பொருளைப்
பலமுறையும்
சிந்தித்தால் ஒருகாலைக்
கொருகால் கருத்து
ஆழ்ந்து செல்வதை
ஆழமுடைத்தா
தல் என்னும்
அழகென்பர். இவ்வழகு
இந்நூலில் மிக்
கிருப்பது மூன்றுவது
பாலிலாதலின்,
வேண்டுவார்

ஆண்டு
ஆராய்ந்துகொள்க.
முறையின்
வைப்பதான

அழகு பழைய தமிழ்
நூல்களில்
குறைக்காட்டிலும்.

வேறு எதனிடத்தும்
நாம் கண்டதில்லை.
வீடுபேற்றின்
விழுமிய பொருளில்லை.
அப்பேறு பெறுவதே

இந்நூ
    லின் முடிந்த
நோக்கமாதலின்
இதன்கண் விழுமிய தும்
பயத்தலும் உண்டு.
குறளை எடுத்து மேற்
கோள்
    கொடாத உரையில்லை.
“ஆலும் வேலும்
பல்லுக்குறுதி
    நாலு மிரண்டும்
சொல்லுக்குறுதி”.

ஆகவே விளங்கு.

தாரணத்ததாகு மழகு
இந்நூல் முற்றும்
உள்ளதாகும்.

ஆகவே மாங்குடி மருதனர், }

50
திருவள்ளுவர்

ஓதற் கெளிதாய்
உணர்தற் கரிதாகி

வேதப் பொருளாய்
மிகவிளங்கித்—தீதற்றோர்

உள்ளுதோ

றுள்ளுதோ றுள்ளம்

உருக்குமே

வள்ளுவர்

வாய்மொழி மாண்பு

. . .

எனறுரைத்தகா.

V

பெண்பாலினர்

தாம் அழகு

மிக்குடையராயினும்

அணிகலனணியும்

. . .

அவாவுடையவாகள.

கவிவாணர்:

ஞரும் தாம் உரைக்கும்
பொருள்
அழகுடையதாயிலும்
அதனை
அணியமைத்தே கூறுவர்.

அணியிலாக் கவிதை பணியிலா வனிதை

என்றூர் அகத்தியரும்.
நமதாசிரியரும்
அங்கங்கே சில
அணிகளை

அமைத்துவைத்தனர்.

சொற்பின்வருநிலையும்
பொருட்பின்வருநிலையும்
குறள்
ளில் ஓரோவிடத்துக்
காணப்படுகின்றன:—

இறந்தாரிறந்தாரனையர்
சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை
பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு.

சொல்லுக சொல்லைப்
பிறிதோற்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து

குன்றி னனையாருங் குன்றுவர்
குன்றுவ
குன்றி யனைய செயின்

பிறிதுமொழிதல்

என்னும் ஓட்டணிகள்
இடத்துக் 'கேற்ப
இயைந்துள்ளன.

எளியரென்று பலரோடு
பகை

கொள்வான், தான் வலியனேயாயினும், அவர் ஒருங்கு சேர்ந்த விடத்து வலியழிவான் எனக் கூறவந்தவர்

பீலிபெய் சாகாடு மச்சிறும்

அப்பண்டம்

சால மிகுத்துப்

பெயின்

திருவள்ளுவர்

51

என்றார். பகைமேற் சொல்லத்தொடங்கித் தன்னுற் செல்லக்கூடிய அளவுவரையில் சென்று நின்றவன், பின் அவ்வளவைக் கடந்து மேலுஞ் செல்வனாயின் உயிர் முடி

வான் எனக் கூற

எடுத்துக்கொண்டனை

நுனிக்கொம்ப
ரேறினர் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி
விடும்
என்று கூறிவிட்டார்.
அரசர் தமக்குச்
சாதகமும் பகை வர்க்குப்
பாதகமுமான இடத்தில்
நின்றுசன்னை செய்க.
என்ற கருத்தை
நெடும்புனலுள்
வெல்லு முதலை அடும்புனலின்

நீங்கி னதனைப் பிற

என்றும்,

கடலோடா காலவ னெடுந்தேர்:

கடலோடு

நாவாயு மோடா நிலத்து

என்றும்,

காலாழ் களரி னரியடும்

கண்ணஞ்சா

வேலாண் முகத்த களிறு

என்றும், மெலிதாய காலத்தே தம்பகையைக் களையாது
வலிதாய காலத்துக் களையலுறின் தம்மை அதுகளையும்

என்பதை,

இளைதாக முண்மரம் கொல்க.

களையுநர்

கைகொல்லும் காழ்த்த விடத்து

என்றும்

எடுத்துரைத்தார்.

இன்னும் சில

விடங்களில்.

இங்ஙனம் உரைத்திருக்கின்றனர்.

சில இடங்களில் இலக்கணையால் பொருள் குறிப்பது உண்டு. இலக்கணையாவது உரியபொருளை விட்டு அப் பொருளின் சம்பந்தியை உணர்த்துவது.

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்: நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை

என்பதில் மக்கட்குரிய
சாக்காடும்
பறைபடுதலும் இலச்
சினைக்குறிப்பால்
நுகர்ப்பின்மேல்
வற்றப்பட்டன.

விளக்கற்றம்
பார்க்கும் இருளேபோல்
கொண்கன்
முயக்கற்றம்
பார்க்கும் பசப்பு
என்பதில் பார்க்கும்

என்பன

இலக்கணைச்சொல்.

கண்ணும்

கொளச்சேறி நெஞ்சே:

இவையென்னைத்

தின்னும் அவர்கான

வுற்று

இதில் தின்னும் என்பது கலியாநிற்கும் என்கிற பொருளில் வந்ததால் இலக்கணைக் குறிப்பு.

சொல்லப்படுஞ் சொற்களிலே விசேடணவலியால்

:உள்ளுறையாக வேறும்

ஒருபொருள்

தோன்றவைத்தல்

உடம்பொடுபுணர்த்தல்
எனப்படும்.

சுவையொளி
யூறோசை நாற்றமென்
றைந்தின்
வகைதெரிவான்
கட்டே உலகு

இதில் ''வகைதெரிவான் கட்டென உடம்பொடு புணர்த்
ததனால், தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற் கருவி
யாகிய மான் அகங்கார மனங்களும் அவற்றிற்கு முத
லாகிய மூலப்பகுதியும் பெற்றும்.''

பெறினென்னும் பெற்றக்கா லென்னும் உறினென்னும்
உள்ளம் உடைந்துக்கக் கால்

இதில் ''இம்மூன்றும்

உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்

டன, அதன்மேலும் முன்னவழக் குண்மையின்". இங்ஙனம் உடம்பொடு புணர்த்துவது தந்திரவுத்திகளில் ஒன்று.

உவமைகளை அமைக்க முடியாத விடங்களிலும், பொருளாற்றலை உரமெய்துவிக்க வேண்டின விடங்களிலும், உருவகமும் ஏகதேச உருவகமும் அமைத்திருக்கின்றனர். அவற்றில் சில வருமாறு:—

திருவள்ளுவர்

53

1

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்,

ஏமப் புணையைச் சுடும்.

பெருமைக்கு மேனைச்
சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.
அல்லற்பட் டாற்றா
தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்
படை.
பொருளென்னும்
பொய்யா விளக்கம்
இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச்
சென்று.

கண்ணேட்ட மென்னுங்
கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ்
வுலகு.

அருளென்னு மன்பீன்
குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியா
லுண்டு.

கேட்டினு முண்டோ
ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்

ஒரு நீதியை விளக்குமிடத்தில் தாம் வற்புறுத்த விரும்பும் பிறிதொரு நீதியை உவமானமாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர் சிற்சில விடங்களில்:—

அழுக்கா றுடையான்கண்
ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண்
உயர்வு.

இன்மையு ளின்மை
விருந்தொரால்: வன்மையுள
வன்மை மடவார்ப்
பொறை.

பொச்சாப்புக் கொல்லும்
புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன்

ருங்கு.

கொல்லா நலத்தது

நோன்மை:பிறர்தீமை

சொல்லா நலத்தது

சால்பு.

முதலிலார்க் கூதிய

மில்லை: மகலையாம்

சார்பிலார்க் கில்லை நிலை

புலவர்களுடைய கல்வி கேள்விகளின் சிறப்பும் பிர
பஞ்ச வியாபாரமும் பிரகிர்தி ஞானமும், அவர்கள் தங்
கள் நூலில் நுதலும் பொருள்களை விளக்கும்படி காட்

டும் உவமானங்களாலே
நன்கு விளங்கும்.

சாதாரண மான

சம்பாஷணையில் தானும்
அவரவர்கள் எடுத்துக்
காட்டும்
உவமானங்களால்,
அவரவர்களுடைய
யோக்கி யதை
இனத்தியல்பு
தொழிற்றிறம் மதியூகம்
மனப் போக்கு முதலான

சில பாவங்களெல்லாம்
நன்கறியக் கூடும்அன்றே.
கதிரவன் நுழைந்து
பாராத இடத்தையுமே
கவிகள் கண்டறிவர்
எனத் தெலுங்கரில் ஒரு
பழமொழி உண்டு. ஒரு
சம்பந்தமும் இல்லாத
பொருள்களுக்கு ஒற்
றுமைநயங் கற்பித்து
உவமானங் கொள்ளுதல்
சிறந்த கவிராயர்களுக்கு

இயல்பாகு
இருக்கின்றது. தலைமயி
ருக்கும் ஒருவன்
நிலைமைக்கும் என்ன
சம்பந்தம் உண்டு?
ஆயினும்
நுனித்தறிவார்க்கு
ஒற்றுமை புலப்படும்.
தலையி னிழிந்த மயிரனையர்
மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

ஆமைக்கும்

அடக்கத்துக்கும்
கற்பித்த ஒற்றுமையைப்
பாருங்கள்—

ஒருமையு
ளாமைபோல் ஐந்தடக்க
லாற்றின்
எழுமையு மேமாப்
புடைத்து.

அனிச்சமலர் அதிதிக்கு
ஆதாரமாவதைப்
பாருங்கள்—

மோப்பக் குழையு

மனிச்சம்: முகந்திரிந்து

நோக்கக் குழையும்

விருந்து.

ஒருவனுடைய நிழலும்

அவன் தீமையின்

பயனும் ஒற்

றுமைப்படுவதை உற்று

நோக்குங்கள்—

தீயவை செய்தார்

கெடுதல், நிழறன்னே

லீயா தடியுறைந்

தற்று.

இன்னும்

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால், சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

திருவள்ளுவர்
55

சொல்வணக்கம் ஒன்னார்கட்
கொள்ளற்க, வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

நவிலுறு நூனயம் போலும்,
பயிலுறுபண்புடை யாளர் தொடர்பு.

என்றும்
போன்றவற்றுள்ளும்
இத்திறத்தை நன்கறிய
லாம்.

சிற்சில விடங்களில்
இவ்வாசிரியர்
காட்டுகின்ற உவ
மைகளை நீக்கி வேறு
எதை அமைத்து
வைத்தாலும்
பொருள் அவ்வளவு

நன்றுகை மனதிற்
பதியாது: அவ்வப்
பொருளின்
சிறப்பையோ அல்லது
இழிவையோ வேறு
வாயிலாக உரைக்கவும்
இயலாது.

உடுக்கை யிழந்தவன் கைபோல,
ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

வேலொடு நின்றான் இடுவென்
றதுபோலும்,

கோலொடு நின்ருன் இரவு.

வினையான் வினையாக்கிக்

கோடல், நனைகவுள்

யானையால் யானையாத் தற்று.

இவ்வாசிரியர் காட்டிய உவமானங்கள் பரந்துபட்ட ஒருவியாசத்துக்கு இடந்தருவனவாகவிரிந்திருத்தலின், இவற்றை இங்கே இன்னும் விரித்துரைப்பது வேண்டா.

ஓரோவிடத்துப் புகழ்வார் போன்று பழிப்பர் இவ்

வாசிரியர்.

தேவ ரனையர்

கயவர் அவருந்தாம்

மேவன செல்தொழுக லான்.

நன்றறி வாரிற் கயவர்

திருவுடையார்

நெஞ்சத் தவல மிலர்.

பொறிதினிது பேதையார்
கேண்மை: பிரிவின்கண்

பீழை தருவதொன் றில்

56

இத்திருக்குறளை

சமயத்தினர் என்று

திருவள்ளுவர்

VI.

இயற்றியருளிய

ஆசிரியர் இன்ன

துணிந்துரைப்பது

இயலாது. இவர்

எச்சமயத்தின ராயினு

மாக.

ஐந்தவித்தா னற்றல்

அகல்விசும்பு ளார்கோமா

னிந்திரனே சாலுங் கரி

என்றும்,

மறப்பினும் ஒத்துக்

கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக்

கெடும்.

என்றும்,

அந்தணர் நூற்கும் அறத்திற்கும்

ஆதியா

நின்றது மன்னவன் கோல்

என்றும்,

இயல்புளி கோலோச்சு

மன்னவ னுட்ட
பெயலும்

விளையுளும் தொக்கு
எனறுமம,
முறைகோடி மன்னவன்
செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்
என்றும்,
ஆபயன் குன்றும்
அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்

என்றும் வருவனவற்றுல் இவர் பொதுப்பட ஹிந்துமதத் துக்குட்பட்டவர் என்பது துணிவு. ஆயினும் முதற் பாலில் முதற்குறளில் விஷ்ணுவுக்குரிய பகவந்நாமத்தை உரைத்தமையாலும், இரண்டாவது பாலில்

மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்

தாஅய தெல்லா மொருங்கு

என நிலங்கடந்த நெடுமுடியண்ணலைக் லும், மூன்றுவது பாலில்

குறித்தமையா

திருவள்ளுவர்

57

தாம்வீழ்வார் மென்றுள்

துயிலின் இனிதுகொல்

தாமரைக் கண்ணு லுலகு

எனப் பரமபதத்தைக்

குறித்தமையாலும்,

வள்ளுவர்

வைணவர் என்பார்

வைணவர்.

"அகாரார்த்தோ

விஷ்ணு." என்ற கருத்தை "அகரமுதல வெழுத்தெல்லாம்" எனத் தழுவியிருப்பதும் வள்ளுவர் வைணவர்

என்பதை

வலியுறுத்துமென்பர்.

குறுமுனிவன்

முத்தமிழும் என்குறளும் நங்கை

சிறுமுனிவன் வாய்மொழியின்
சேய்

என்று திருவள்ளுவரே
கூறினதாகக் கூறும் ஒரு
தனிப்

பாடலையும்
ஆதாரங்காட்டுகின்றனர்.

ஊரவர் கௌவை யெருவிட்
டன்னைசொன் னீர்படுத்து

என்னும் 43-வது
திருவாய்மொழியின்
நாலாவது பாசு

ரமும்

ஊரவர் கௌவை
யெருவாக அன்னைசொல் நீராக
நீளுமிந் நோய்

என்னும் குறளும்,

கண்டுகேட் டுற்றுமோந்
துண்டுழலு மைங்கருவி

கண்ட வின்பந் தெரிவரிய
வளவில்லாச் சிற்றின்பம்

ஒண்டொடியா டிருமகளு நீயுமே
நிலாநிற்ப

என்னுந் திருவாய்
மொழியும்
கண்டுகேட் டெண்டுயிர்த் துற்றறியு
மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள

என்னும் குறளும், ஒன்றை யொன்று அடியொற்றிக் கொண்டாற்போலே யிருப்பதும், வள்ளுவர் வைணவர் என்னும் வைணவர்க் குற்ற சான்றும். "எண் குணத் தான் தாளை வணங்காத்தலை" என்றது சிவபரமாதலால் சைவர்கள் வள்ளுவரைச் சைவர் என்பர். துறவறவிய லில் ஞானம் கூறும் பகுதிகள் சைவசித்தாந்தக் கருத்துக்

திருவள்ளுவர்

களை ஒத்திருப்பதும்
தங்களுக்கு ஆதாரம்
என்பர்.

"மலர்மிசையேகினான்"
என்றதனாலும்

அவிசொரிந் தாயிரம்
வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்
தண்ணுமை நன்று

என்றதனாலும், "பூமேனடந்தான்" என்னும் பெயரை உட்கொண்டு "மலர்மிசையேகினான்" என்றதனாலும்,

ஜைநர்கள் வள்ளுவரை ஜைநர் எனக் கூறிக்கொள்வர். "மலர்மிசை யேகினான்", "வேண்டுதல் வேண்டாமையி

லான்”

“பொறிவாயிலைந்தவித்தான்”

என்னும் புத்த

தேவனது பெயர்களை

எடுத்தோதிக் கடவுள்

வாழ்த்துக்

கூறுதலாலும் புத்ததேவன் விதந்து கூறிய அருளறத்தினை வள்ளுவர் மிகுத்துக் கூறுதலாலும், பௌத்த பிடகத்தில் பிக்ஷுக்களுக்கென்று விதித்த விரதங்களையே துறவறவியலில் துறவிகட்கு விதித்தமையாலும், வள்ளுவர் பௌத்தரெனக் கொள்வதற்கும் இடமுண்டு. ஜி. யூ. போப்பையர் “எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த ஹிதோபதேசத்தின் பிரதிசப்தமாகும் இத்திருக்குறள்” என்பர். “எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு” என்றூர் பரிமேலழகர்.) எவரெவ ரெத்திறத்தர் அவரவர்க்கு அவ்வத்திறத்தவராய்த் தோன்றும் இவர் சர்வ சமய சமரசவாதி எனல் சால்புடைத்து.

ஒன்றே பொருளெண்ணின் வேறென்ப; வேறெண்ணின்

அன்றென்ப ஆறு
சமயத்தார்.—நன்றென்ன
எப்பா லவருரும்
இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த
மொழி
என்றூர் கல்லாடர்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னுதமிழ்ப் புலவ
ராய்ந்கேட்க வீற்றிருக்க லாம்.

அநுபந்தம்

I

திருவள்ளுவர்

உலகியல்நெறி
வீட்டியல்நெறி இரண்டும்
நன்றுய் விசாரித்து
உண்மையுணர்ந்தவர்.
மாந் தர்க்கு இல்லறம்
துறவறமென்னும்
இருவகை யறங்க

ளுமே உரியனவென்பதும், அவற்றுள் துறவறத்தை நோக்
கியே இல்லறம் சாதிக்கத்தக்கதென்பதும், வீடு தேடு

வார்க்குத் துறவறமும்
உலகந் தேடுவார்க்கு
இல்லறமும்
உரியனவென்பதும்
அவர் சித்தாந்தம்.
இல்லறவியல்பு
கூறப்புகுந்த
திருவள்ளுவர்

அன்பிலா ரெல்லாம்
தமக்குரியர்: அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்னும் திருக்குறளால்
அன்பே அதற்குச் சிறந்த
இலக் கணமென்றும்,
துறவுக் கிலக்கணங்
கூறுமிடத்து

அவாவென்ப எல்லா
வுயிர்க்கும் எஞ்ஞாள்றும்
தவாஅப் பிறப்பீனும்
வித்து

என்னுங் குறளால் அதற்கு அவாவின்மையே சிறப்பிலக்
கணமென்றும் சித்தாந்தம் செய்திருத்தலே நோக்கினால்,
அவருடைய அற்புத தெய்வப்புலமையி னூற்றல் நன்கு

புலப்படும்.

திருவள்ளுவர் நூற்று முப்பத்து மூன்று விஷயங்கள் எடுத்து நூல் யாத்தனர். ஒவ்வொரு விஷயமும் எஞ்சாமல் கடைபோக அவரால் விசாரித்து நிச்சயம் பண்ணப் பட்டிருத்தலின், எத்துணை நுண்ணறிவுடையாரும் ஒன்றைக் கூட்டவேனும் குறைக்கவேனும் இடங்காணமாட்டார். திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட விஷயங்களுள் சிலவற்றைத் தாமாக விசாரித்த பிறபாஷைப் புலவருள்

திருவள்ளுவர்

தலையாலே
அவ்விஷயங்களைப்பற்றிக்

கூறியவற்றையும்

திருவள்ளுவர் கூறியவற்றையும் ஒப்பு நோக்குமிடத்துத் திருவள்ளுவர் கருத்துக்களே விஞ்சி நிற்றலின், அவரின் விஞ்சினோர் பிறரில்லை எனலே சித்தாந்தமாம்.

திருவள்ளுவர்க்கு முன்னும், முனிவரும் புலவரும்

அறம் பொருளின்ப மென்னும் முப்பாற் பொருளும் ஒரு வாறு எடுத்துக் கூறினரேனும், அவரெல்லாம் திருவள்ளு வரைப் போலக் கேட்டார் நெஞ்சினுட் பாய்ந்து பதி கொள்ளுமாறு சொல்லுஞ் சொல்வன்மையும் சாதுரிய மும் உடையவரல்லர்.

திருவள்ளுவரை ஆருகத சமயியென்று சிலரும் சைவ சமயியென்று பலரும் வாதிப்பர். ஆயினும் வைதிகா சாரங்களை மேற்கொண்டு நிற்கும் திருக்குறட் கருத்தை நோக்க அவரை ஆருகதரென்று சாதிக்கப் போந்த நியா யம் காண்கிலம்.

—அபிதான கோசம்.

II.

(இந்நூல், அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் உடைமையால் முப்பானூல் என்றும்,

இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என நான்காய முன் மறைகட்குப் பின்மறையாய் எழுந்தமையின் உத்தர வேதம் என்றும்,

தெய்வவருளால் பிறந்தமையின் தெய்வநூல் என்றும், பொய்யாமொழியான் நடத்தலின் போய்யாமொழி என்றும்,

வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்—தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்—றேம்படைக் கிளவியின் அறம் பொருளின்பம்—வாயுறுத் தருளிச் செய்தலின் வாயுறை வாழ்த்து என்றும்

அநுபந்தம்

தமிழான்

மறைவாய பொருள்

கிளத்தலின் தமிழ் மறை

என்றும்,

அந்தணர் அரசர்

வைசிய ரென்னும் துவிசர்

மூவருஞ்

ஓதுதற்குரிய சிறப்பியல்புடைய நான்மறைகளும் போலாது அந்தணர் அரசர் வைசியர் வேளாளர் என்னும் நாற்பால் வருணத்தாரும் மற்றைச் சங்கர சாதிகளும் உட்பட்ட நன்மக்களும் ஓதுதற்காம் பொது

வியல்புடைத்தாய்
மறைபொருள்
கிளத்தலின் போது
மறை என்றும்,

திருவள்ளுவரால்
செய்யப்படும்
காரியமாகலின் திரு
வள்ளுவர் என்றும்
வழங்கப்படும்.

திருக்குறளாசிரியர்,

வேதத்துப்
பலவிடங்களிலும் இலை
மறைகாய்போல்
புலப்படாதிருந்த
நலம்பட
பொருள்களெல்லாவற்றையும்
தொகுத்தெடுத்து
உலகத் தார்க்குக்
கொடுத்தல்
காரணத்தானே

திருவள்ளுவர் என்றும்,

• பாயநூலுறுதிப்
பொருளெல்லாம்
பாரிலுள்ளார்
அறிந்துய்யப் பாற்பட
எடுத்துக்கூறிய
அருட்டலைமை
யுடைமையானே
நாயனார் என்றும்,

அறம்பொருளின்ப வுறுதிப் பொருளியல்புகளைத் தமி
முலகம் தெளிந்துய்ய அருள் விளைதத்திற் கூறினமை
பானே தேவர் (திவ்–விளையாட்டு) என்றும்,

முழுதுணர்வால்சொற்பொருள் தெரிந்து தூல்செய்து எப்பாலவர்க்கும் மேலாய் முதல்வராய் நிற்றலின் முதற் பாவலர் என்றும்,

தெய்வவருளான்
எய்திய
புலமைபுடைமையின்
தெய்வப்புலவர் என்றும்,

62
திருவள்ளுவர்

மலரயனே வள்ளுவனுய் மறைந்து நான்மறையின் மெய்ப்பொருளே முப்பொருளாகத் தருதலின் நான்முகன் என்றும்,

தலைமக்களுக்கெல்லாம்
தாய்போல முப்பாலைத்
தன் னளியால்
சுரந்தருளுதலின்
மாதானுடங்கி
(மாதாவைப் போலும்
ஒழுங்கினன்) என்றும்,
அறனும் பொருளும்
இன்புமாம் தெளிதேனை
அரிற் பச் சொரிதரும்
செந்நாப்போ
துடைமையின் செந்நாப்

போதார் என்றும்,

அறத்துப்பாலும்
பொருட்பாலும்
காமத்துப்பாலும்
தனித்தனி கொண்டு
நூல்கள் இயற்றிய சிறு
நாவலர்கள் வியப்புற
அம்மூப்பாலும்
ஒருங்குகொண்டு
அறம்பொரு ளின்பம்
வீடென்னும் நான்கு

பொருளும் அடங்கத்
தமிழ்வேதம் தான்
செய்தவின் பெருங்காவலர்
என்றும் போற்
றப்படுகிறார்.)

திருக்குறள்

வீடுபேற்
றுறுதிப்பொருளும்
கூறிற் றேர் நூலையாம்.

வீடு, சிந்தையுமொழியும்
செல்லா
நிலைமைத்தாகலின்,

இலக்கணவகையாற்
கூறும் பான் . மைத்
தன்றென வுணர்ந்து,
அதனைத் துறவறமாகிய
காரணவகையாற்
கூறினர். ஆசிரியர்
தொல்காப்பியனர்
'அங்கில மருங்கின்
அறமுதலாகிய,
மும்முதற்பொருட் கும்
உரியவென்ப' எனச்
சூத்திரஞ் செய்ததூஉம்

இக் கருத்துப் பற்றியே
யாம். வீடுபேற்றியல்
நுதலியெழுந்த

வேதாந்த சித்தாந்த நூல்களும், வீட்டியற் பொருட்டி
றம் சிரவணம் மனனம் என்னும் இருநிறத்தால் தடத்த

மாகவும், சிரவணம்
மனனம் நித்தியாசனம்
நிட்டை என்னும்
நாற்றிறத்தால்
சொரூபமாகவும்
சாதனவகையாற்
கூறினவேயாம்.

திருக்குறளில் வீட்டின் சாதனம் சுருக்கமாகக் கூறப்பட்டது. இதுவே தம்முள் வேறு

அநுபந்தம்

63

பாடு. இங்ஙனமாகலின் திருக்குறள் அறம்பொருளின்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கும் தெளித்துரைக்கும் தமிழ்மறை நூலாம்.

—திராவிடப் பிரகாசிகை.

நாயனார், அறம் பொருள் இன்பங்கள் முறையே இம்மை மறுமை வீடென்னும் மூன்றும் பயத்தலும், இம்மை மறுமை இரண்டும் பயத்தலும், இம்மையே பயத்தலும் ஆகிய சிறப்புச் சிறப்பின்மைகள் நோக்கி, அறத்துப்பாலை முன்னும், பொருட்பாலை அதன் பின்னும், காமத்துப்பாலை இறுதியினும் முறையே வைத்து, அவற்றியல் தெரித்தற் கமைந்தருளினார். இனிப் பொருடான் அறஞ்செய்தற்கும் காமந்துய்த்தற்கும் உபகாரமாதலுடைத்தாகலின், அதன் முறைவைப்புச் சிங்கநோக்காமென்க. இல்லறம் துறவறம் என்னும் இரண்டறங்களுள் இல்லறம் இல்லாளோடு கூடிவாழும் ஒழுக்கமாகலானும், பொருளும் இன்பமும் தனக்கு அங்கமாகக் கொண்டே இயலும் பெற்றித்தாகலானும், பொருளும இன்பமும் வேறுதலின்றி அறத்தின்வழி நிகழும் நீரள வாய் அதனுள் அடங்கும் இயற்கையாகும். "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும், அறத்தின் வழிப்படூஉந் தோற்றம் போல" என்றதூஉம் இக்கருத்துப் பற்றியே யாம். பொருளும் இன்பமும் இவ்வாறு கௌணமாய அறத்தின் அடங்குதலின், திருக்குறள் முக்கிய விருத்தியால் அறங்கூறிய நூலே யாதும்.

இல்லறம் இருவகைப்பற்றின் முறுகிய மந்தவதிகாரிகளாகிய மக்களுக்கு அப்பற்றுக்கள் நுகர்ச்சியான் அறுந்து சித்தசுத்தி எய்துதற்பொருட்டு விதிக்கப்பட்ட தோர் ஒழுக்கமாதலின், அவ்வொழுக்காற்றுன் முனிவ

64

திருவள்ளுவர்

ரும் தேவரும் விழைதகும் போகம் ஈண்டுத் துய்த்துச் செல்லாநின்றார். அத்துய்ப்பினனே பொய்ப்பற்றற்று மெய்ப்பற்று நாடித் துறவறம் பூண்டு அந்தக்காரணங்கள் தூயவாதற்பொருட்டு விரதமனுட்டித்தலே உறுதியாகக் கைக்கொள்ப. ஆதலின், நாயனார் இல்லறவியல் முன்னும் துறவறவியல் அதன்பின்னுமாக நிறுத்தியருளினார்.

அறம் மேற்கூறிய நியாயம்பற்றியே இல்லறம் துறவற மென இரண்டாய தென்பது, "காமஞ்சான்ற கடைக் கோட் காலை, ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி, அறம்

புரி சுற்றமொடு
கிழவனும் கிழத்தியும்,

சிறந்தது பயற்

றல் இறந்ததன்
பயனே” எனவரும்
தொல்காப்பிய

சூத்திரத்தினும் அறிந்துகொள்க.
இனித் துறவறந்தான் வினைமாசு தீர்ந்து அந்தக்க

ணங்கள் தூயவாதற்
பொருட்டுத்
துறந்தாரால் காக்கப்
படும் விரதங்களும்,
அவற்றுள் அவை
தூயவாயவற்றி
உதிப்பதாய

ஞானமும் என
இருவகைப்படும். இரி
விரதம் அங்கமும்
ஞானம்
அங்கியுமாகலின், விரதம்
முன்னும் ஞானம்
அதன்பின்னும்
நிறுத்தியருளினர்.
இங்ஙனம்
விரதத்தான்
அந்தக்கரணசுத்தி
யெய்தி விடு

பயக்கும் உணர்வு
எய்தப் பெற்றார்.
தோற்றமுடையன
யாவும்
நிலையுதலிலவாம் தன்மை
உணர்ந்து, அகப்புறப்
பற்றுக்களைத் துவரத்
துறந்து, பிறப்பு
வீடுகளையும்
அவற்றின்
காரணங்களையும்
உண்மையான் அறிந்து,

அவாவினை
ஆற்றவறுத்துப்
பரவீடாகிய
நிரதிசயவின்
பம் பெறுவதென்று,
இவ்வாறு நிலையாமையும்
துறவும்
மெய்யுணர்வும்
அவாவறுத்தலும் ஆகிய
ஞானசாதனம்
கூறுமுகத்தானே
வீடுபேற்றுறிதிப்

நன்கு விளக்கியருளினர்.

இங்ஙனமாகலின், திருக்குறள் பொருளின்ப மகப்
படக்கொண்டு
அறங்கூறி வீட்டியல்பு
நன்று காட்டிய,

அநுபந்தம்

65

துவளுான நூலாம்
உத்தரவேதம் என்பது

தெற்றென

உணர்ந்துகொள்க.

—திராவிட பிரகாசிகை.

IV

நயமிகு புகழ்ச்சோ ணாட்டுள்ஓர் அந்தணன்
உயர்மனைக் கிழத்திஅங் குயிர்த்தஓர் மைந்தற்கு
யாணர்சால் பகவன் எனப்பெயர் ஈந்துபின்
கோணிலை நாணிலை குறித்த சாதகத்தால்
புன்குல மாதுதோள் புணருமென் றோர்ந்திஃ
தென்குலக் கிழுக்கதாம் எனஉளங் கழுமிய
பீழையி னோடுறீஇப் பின்பொரு சிலநாள்

மாழையுண் கண்ணியை மதலையைத் தணந்து
கோணைநீர்க் கங்கையில் குடைகுவான் ஏகினன்.
பேணுமச் சிறுவனும் பிரமசரிய மேற்று

ஓவா அருமறை ஓதிநூ லுணர்ச்சியின்
மூவா நலத்தின்ஐம் மூவாட் டையனுய்
எந்தைநிற் பிரிதரற் கேதுவென் னனத்தாய்
புந்திநைந் துரைசெயப் பொருள்வட புலந்துரீ இப்

போதரு நெறியிடைப் புலமகள் கருவூர்
ஆதியென் பெயரினள் அரும்பெறற் செவ்வியள்
பொற்கொடி போன்றெதிர் புகமருண் டினிய
சொற்கொடு புதுநலம் தோய்ந்துணர்ந் ததன்பின்

இச்செயல் தகாதென
எண்ணிவிட் டேகுழி
மெய்ச்செயல் கற்பினள்
விடாதுடன் தொடரக்

கண்டுருத் தொருசிலை கைக்கொடு நுதன்மிசைப்
புண்தர எறிந்தவட் போக்குபு விரைந்துபோய்த்

திகழ்பா கீரதி தீரமேல்
உளபதி

அகமெலாந் தேடியும் அத்தனைக் கண்டிலாது
அரந்தையிற் றளுதுநா டடைகுவான் மீண்டு

5

66

திருவள்ளுவர்

வரும்பொழு திரவலன் மற்றவற்ச் சாலையின்
கற்பிரி வாற்றாந் தளர்ச்சியோ டீர்தொறும்

அற்பகல் நேடுறும் ஆதிதற் காணூஉ
உற்றடி வணங்கலும் உயர்மறை யோன்அவள்
நெற்றியில் சிலைவடு நேரில் நோக்கிமுன்

பிணங்குமா தெனத்தெளிந் திவண்வர வென்னென
அணங்குநிற் பிரிந்துறின் ஆவிவா ழேன்என,
என்றிடும் மகவெலாம் என்றுழி யேவிடுத்
தான்றிய துணிபொடும் உடன்வர வல்லையேல்

வருகென அண்ணலம் மடவரல் இயைதலால்
இருவரும் தலந்தொறும் இயங்குகா லங்களில்
உப்பை யெளவ்வை உறுவை வள்ளியென்
றிப்புவி போற்றும் ஈரிருவர் மகளிரும்

மன்னுசீர்
அதிகமான் வள்ளுவர்
கபிலர்

என்னு மாடவர்
இம்மூவரும் பிறந்து

எவ்வெத் தலம்னவ
ரெவர்க்குட் பிறப்பிடம்

அவ்வத் தலங்களின்
அவரவர் வளர்ந்தனர்.

செப்புமவ்
வெழுவருள் திருவள்
ளுவர்தாம்

.

மைபடிய
ணிபொழில்
மயிலாப்பூரில்
வள்ளுவர்
மனையிடை வளர்ந்தனர்.
ஆங்கவர்
உள்ளுறுத்
தேவருள் ஒருவ ராகிய
சதுர்முகன் திருவள
தார மாதலின்
முதுமறை யாகமம்
முத்தமிழ்க் கலைபிற

ஐயந் திரிபிலா
தனைத்துநன் குணர்ந்து
தெய்வப் புலமையிற்
சிறந்தான் குருவாய்
அற்புத நீறணிந்
தைதந்தெழுத் தியம்பித்

தற்பர லிங்கமெய்
தரித்தருள்
செயப்பெறீஇ
வலங்கொள்பூ
வைகியர் மரபினுற்

இலங்குறு வாசுகி
எனும்பெயர்த் தையலை
மணந்தக னமர்ந்து
மகிழ்துற வத்தரும் அரு
பந்தம்

வணங்குறு இல்லற வா
ழ்வினுற் றருளால்,
என்னி னுயர்வுறும்
இனிக்தமிழ்

மொழியென முன்னுறு
பெருவட மொழி அழுக்
காறுற, மலைதரும்
பற்பல மதத்தரும்
வியந்து தலைமிசைக் கொ
ண்டிது தக்கதென்
றேத்த, இம்மை
மறுமைவீ டெய்த
விந்தூலொன் றம்ம
அமையுமென்
றறிஞர்உள் ளுவப்ப,
எங்கட் கிணையிலை

எனத்தருக் குறுகடைச்
சங்கப் புலவர்அத்
திருக்குளத் தெடுத்த,
ஈரிரு வேதமே எழுவா
யாகிய
சீரிய விழுமிய செவ்வி
நூல்களில் சிறந்த
பொருளெலாம்
செந்தமிழ்க் குறளில்
அறம்பொருள்
காமமென் றுரைமுப்
பாலால் கூறினர்

ஒருநூல். கொண்டுள
ம்

தேறினர் பயனெலாம்
சேர்ந்து வாழ்குவரே.

—(ஒரு) தனியன்.

V

மாபெரும் பூதம்
தோன்றி மடக்கொடி-

நீகேள் என்றே
நேரிழைக்
குரைக்கும்.— தெய்வந்

தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும்
பெருமழை யன்றவட்

பொய்யில் புலவன்
பொருளுரை தேறும்

பிசியும் நொடியும்
பிறர்வாய்க் கேட்டு

விசிபிணி முழவின்
விழாக்கோள் விரும்பிக்

கடவுட் பேணல்
கடவியை ஆகுவின்,

மடவரல் ஏவ
மழையும் பெய்யாது
நிறையுடைப்
பெண்டிர் நம்மே
போலப்

பிறர்நெஞ்சு சுடுஉம்
பெற்றியும் இல்லை.

ஆங்கவை ஒழிகுவை
யாயின் ஆயிழை 68
திருவள்ளுவர்

ஓங்கிரு வானத்து மழையுநின் மொழியது.
பெட்டாங் கொழுகும் பெண்டிரைப் போலக்
கட்டா துன்னினன் கடுந்தொழிற் பாசம்.

—சிறைசெய்காதை:
மணிமேகலை

VI

தேவர் குறளும் திருநான்
மறைமுடிவும் மூவர்
தமிழும்
முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர்
சொல்லும்

ஒருவா சகமென் றுணர்.

—நல்வழி.

VII

அக்கடைச்
சங்கந்தன்னை அழிப்பது
கருதிஆன்ற

முக்கண னருளாநாடி மொழிந்துள முப்பா னூலைக்
கைக்கண்ஓர் துணையாக்கொண்டு கவின்றிரு மயிலைநீங்கித்

தெக்கிண
திசையைநோக்கிச்
செறிபெருங் கானிற்சென்

ருன.

ஆங்குறு மழைகண்டஞ்சி
ஆலடி
தனிற்போய்நின்ருன்.
பாங்குறு புளிக்கீழ்நின்று
பரிந்திடைக்
காடனன்ணை
“தாங்குபுத்
தகத்துப்பேயா
தயங்குசிற் றிலைக்கீழ்வா
வென்று
ஓங்குபே ரொலியாற்கூவ

உடனவன்
உற்றுன்ஓர்ந்தே. அற்றமம்
மழிசின்னேரம்
அங்குபெய்
தகன்றபின்னர் மற்றவன்
றனவிலுவி மணக்குறிப்
பறிந்“துன்கையில்
உற்றநா
விடைசொற்றுள்ள
ஒண்பொருள்
வகைசொல்”
என்று,

“முற்றயாவையுஞ்
சொற்றுள்ளேன்”
எனுமொழி முதி
யோன் கேட்டு,
ஆட்டினம் அருந்தியுய்ய
அடைமறித்
துதவுமஃதைக் அநுபந்த
ம்

காட்டி
“ஈதினுக்கும்பாடல்
கழறியுள்ளாயோ?”

என்றான். கேட்டிடமை
கொட்டுமுன்னம் கிளர்உர
னென்னும்நல்ல தோட்டி
யால் பொறிகளாய
தும்பிக
ளைந்துங்காப்போன்
வரனெனும்
வைப்புக்கோர்வித்
தெனுங்கவி மகிழ்விற்
சொன்னான்.
பிரமனே
ரவற்குமால்போல்

பெரியவன் துணைபாச்
சேர்ந்தான்.

—புலவர் புராணம்.

VIII

மணற்கிளைக்க நீரூறும்.
மைந்தர்கள் வாய்வைத்
துணைச்சுரக்கும் தாய்முலை.
ஒண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர்
மும்பால் மதிப்புலவோர்க்
காய்தொறும் ஊறு மறிவு.

—உருத்திரசன்ம கண்ணர்.

புலவர் திருவள்
ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச்
செப்பல்—நிலவு
பிறங்கொளி மாலைக்கும்
பெயர்; மாலை, மற்றும்
கறங்கிருள் மாலைக்கும்
பெயர்.

—மதுரைத் தமிழாசிரியர்
செங்குன்றூர்க்கிழார்.

பூவிற்குத் தாமரையே;
பொன்னுக்குச் சாம்புனதம்;

ஆவிற் கருமுனியா;
யானைக்—கமரரும்பல்;
தேவிற் றிருமா
லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண்
பா.

—கவிசாகரப் பெருந்தேவனார்.

அறந்தகளி, ஆன்ற
பொருள்திரி, இன்பு
சிறந்தநெய், செஞ்சொல்தீத்,
தண்டு—குறும்பாவா
வள்ளுவனர் ஏற்றினர்,

வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.
—நப்பாலத்தனார். 70
திருவள்ளுவர்

வெள்ளி வியாழம்
விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும்
புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள்
வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.

—மதுரைப் பாலாசிரியனார்.

IX

சமயக் கணக்கர் மதிவழி கூறு
துலகியல் கூறிப்
பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு
வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட்
பெருமான்.

—கல்லாடம்.

பரிமேலழகர்

காஞ்சீபுரத்தில்
வைஷ்ணவப் பிராமண
குலத்திலே அவதரித்து
வடமொழி தென்மொழி
இரண்

டிலும் வல்லவராய் விளங்கித் திருவள்ளுவர் குறளுக்கு உரையியற்றிய ஆசிரியர். இவர் காஞ்சியிற் பிறந்தவர் என்பது

வள்ளல் சிலப்பெருமாள்

நச்சர் சாத்தர் வழுதிமுதல்
தள்ளுவனுர்க்கும்

தலையான பேரையும்

தன்னுரையை
விள்ளுவன் ஆர்க்கும்

திருக்காஞ்சி வாழ்பரி

மேலழகன்
வள்ளுவ னுர்க்கு

வழிகாட்டினன்

தொண்டைமண்டலமே

என்னும் தொண்டைமண்டல சதகத்தால் அறியப்படும். வள்ளுவர் குறளுக்கு உரைசெய்தவர்கள் பதின்மர். அவருள்ளே நச்சினார்க்கினியரும் இவருமே சிறந்தவராவர். அவ்விருவருள்ளும் இவரே தம்முரையாற் சிறந்தவர். பதின்மர் உரையையும் ஒருங்குகற்று ஒப்பநோக்கிய ஆன்றோரொருவர்

அநுபந்தம்

71

பாலெல்லாம் நல்லாவின்
பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம்
வள்ளுவர்செய்
நூலாமோ?—நூலிற்
பரித்தஉரை யெல்லாம்
பரிமே லழகன்

தெரித்தஉரை யாமோ
தெளி
என்று கூறியிருப்பதால்
அவ்வுண்மை பெறப்படும்.

நச்சினார்க்கினியர்
இவர் காலத்தவரே
யாயினும், அவர் வயசால்
மூதிர்ந்தவர். இவர்
வைஷ்ணவரென்பது ‘
‘அரிமேவண்புறாவும்
அன்பமை யந்தணன்”
என்னும் ஆன்றோ

ருளையால் துணியப்படும்.
இவர் வைஷ்ணவரே யா
யினும் சைவாகம உணர்
ச்சியும்
உடையவரென்பது
வள்ளுவருரையில்
இடையிடை
எடுத்துரைக்கும் ஆற்றல்
விளங்குகின்றது.
வள்ளுவருக்கு
உரைசெய்த பதின்ம ருள்
முற்பட்டவராகிய

தருமர் (தருமசேனர்)
ஆருகதர். அவ்வரையிலே
பெரும்பாலும்
ஆருகதமதக் கொள்கை
களே
பிரசங்கிக்கப்பட்டன.
இவ்வாறே
மற்றையோரும் தத்தம்
சார்பு பற்றி
உரைத்தார்கள்.
அவருள்ளே நக்கி
ரக்கினியர் ஒருவரே

திருவள்ளுவரைப்
பொதுநூல் எனக்கொண்டு
நடுநிலை கலங்காது
உரைசெய்தார். ஆயினும்
அவ்வொன்பதின்ம
ருரையும் மெய்யுரை
அல்ல வெனக் கொண்டே
பரிமேலழகர் தாம்
உரைசெய்யப் புகுந்தார்.
இவர் தம்முரையிலே
தமக்கு உடன்பாடா
யுள்ள

உரையாசிரியர்களுடைய
பதங்களை எடுத் துக்
காட்டித்
தழுவுவதோடு, தமக்கு
உ டன்பாடில்லாத
மதங்களையும்
எடுத்துக்கா ட்டி
எதுக்கூறி மறுத்தலும் செ
ய்வர்.

கந்தபுராணம்
கம்பராமாயணம் முதலி
ய நூல்களி னின்றும்

உதாரணம் எடுத்துக்
காட்டாமையால், இவர்
காலம்
அந்நூலாசிரியர்களுக்கு
முற்பட்ட தென்பதும்,
இவர் செய்த உரையிலே
போசராசன் பெயர்
வருதலால் 72
திருவள்ளுவர்

அவனுக்குப்
பிற்பட்டதென்பதும்
நன்றாக நிச்சயிக்கப்

படுகின்றன.

இவர் உரையிலே பொருள்வன்மையும், செஞ்சொற் சிறப்பும், இலக்கணங் கூறும் சாதுரியமும், விசேடவுரை தெரிக்கும் ஆற்றலும், மேற்கோளெடுத்துச் சித்தாந்தஞ் செய்யும் உபாயமும், பிறர்க்கெல்லாம் பல வசனங்களா னன்றி அமையாத விஷயங்களைச் சில சொற்கொண்டு

தெற்றெனைக் காட்டும்
பேராண்மையும்,
வடமொழிப் பதங்களைச்
செந்தமிழ்
மொழியாக்கும் அற்புத
சாமர்த்தியமும்,
சொன்முட்டுற்று
வடமொழிப் பதங்களை

எடுத் தாளும்
நல்குரவுடையார்
போலாது செந்தமிழ்ச்
சொற் செல்வ
முடைமையும்,
வேதாகம வியாகரண
சாஸ்திர புராணேதிகாச
ஸ்மிருதி
காவியாலங்காராதி
வடநூற் பயிற்சியோடு
முத்தமிழ்ப்
பரப்பெலாம்

முற்றவுணர்ந்த
நுண்புலமையும்
நன்குபெறப்படுகின்றன.
பரிமேலழகர்
யோகப்பயிற்சி யுடை
யரென்றும் ஒவ்வொரு
சொல்லும்
சமாதியிருந்தே
மெய்ப்பொருள்
கண்டாரென்றும்
கூறிவருகின்றனர். இது
அவருரையை ஊன்றி

நோக்குந் தோறும்
நம்பத்தக்க தாகின்றது.
—அபிதானகோசம்

XI

கண்ணுதற் கடவுள்
அண்ணலங் குறுமுனி.
முனைவென் முருகன்
எனவிவர் முதலிய
திருந்துமொழிப்
புலவர் அருந்தமிழ்
ஆய்ந்த
சங்க மென்னும்

துங்கமலி கடலுள்
அரிதின் எழுந்த
பரிபாட் டமுதம்,

அரசுநிலை திரீஇய அளப்பருங் காலம்
கோதில் சொன்மகள் நோதகக் கிடந்தனின்,

பாடிய சான்றவர்
பீடுநன் குணர்ந்

அனுபந்தம்
73

மிகைபடு பொருளை
நகைபடு புன்சொலின்

தந்திடை மடுத்த
கந்திதன் பிழைப்பும்
எழுதினர்
பிழைப்பும் எழுத்துரு
வொக்கும்
பகுதியின் வந்த
பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த
ஒவ்வாப் பாடம்
திருந்திய
காட்சியோர்
செவிழுதல்

வெதுப்பலின்,

சிற்றறிவி னர்க்குரும்
தெற்றெனத் தோன்ற

மதியின் றகைப்பு
விதியுளி யகற்றி

எல்லையில் சிறப்பின்
தொல்லோர் பாடிய

அணிதிகழ்
படைத்துத் துணிதரு
பொருளைச்

சுருங்கிய உரையின்
விளங்கக் காட்டினன்,

நீணிலங் கடந்தோ
ன் முடொழு மரபின்
பரிமே லழகன்
உரிமையின் உணர்ந்தே.

திருத்தகுசீர்
வள்ளுவன்றன்
தெய்வப் பயனின்
கருத்தருமை தானே
கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தோர்
பரிமே லழகனெனும்

மனது முயாகாமன
வாது.

—பரிபாடல்
உரைச்சிறப்புப்பாயிரம்.

XII

திருந்திய தமிழில்
தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவன்
ஆய்ந்ததன் வாக்கால்
அறம்பொருள் இன்பம்

வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த
செவ்விழுப் பாலுக்
கோருரை யின்றி
ஒன்பது சென்றும் ஐயுற
வாக நையுறு காலை,
வள்ளுவன் மீளவும்
வந்துதித் துலகோர்க்
கொள்ளிய பொருளை
உரைத்தன னென்ன,
எழுத்து முதல

திருவள்ளுவர்

வழுத்தில்வே தாகம
வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத்
தமிழ்மனு நூலிற்
கிதுவே உரையென்
றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு
நுட்ப வெச்ச
விழுப்பொருள் தோன்ற

விரித்திலி துரைத்தான்,
வடநூற் றுறையும்
தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற
நெறியறி புலவன்,
அன்பருள் நாணொப்
புரவுகண் ணோட்டம் ந
ன்றறி வாய்மை நற்றவ
முடையோன், இத்தகை
யன்றி ஈசன தருளால்
உய்த்துணர் வுடையவோ
ர் உண்மையாளன், பரிமே

லழகன் எனப்பெயர்
படைத்துத் தரைமேல்
உதித்த தலைமை யோனே

(திருக்குறளுரையின் ஒரு
பிரதியில் எழுதியுள்ள) ஒரு
தனியன்.

தெய்வப் புலமைத்
திருவள் ளுவர்குறளில்
உய்விக்கும் நூலெல்லாம்
உள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுட

ம்பிற் றந்துணர்வார்
போலுலகம் ஒத்தபரி
மேலழகன் ஓர்ந்து
(வேலூரு) தனியன்.

XIII

திருத்தக்குறள் உரையாசிரியர்.

பதினேமர்.

(கருமர் மணக்குடவர் காமத்தர் நச்சர்
பரிமே லழகர்
பருதி—திருமலையர்

மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் தூற்
கெல்லை யுரையெழுதி னோர்.)

XIV

1. The Kural contains no trace of the distinctive doctrines of Sankara Charya. It teaches the old Sankhya philosophy, but ignores Sankara's additions and developments.

2. It contains no trace of the distinctive doctrines

of the Agama or Saiva-Siddhanta School—a school which, since about the 11th century A.D., has exercised a more powerful influence on Tamil literature and the Tamil mind than any other. It exhibits no acquaintance even with the ex istence of this school.

3. There is no trace in the Kural of the mysticism of the modern

Puranic system ; of Bhakti, or exclusive enthusiastic faith in any one deity of the Hindu Pantheon. The work appears to have been written before Saivism and Vaishnavism had been transformed from rival schools into rival sects ; before the Puranas, as they now stand, had become the text-books of Hindu theology ; and whilst the theosophy of the early Vedanta and the

Mythology of the Maha-bharata comprised the entire creed of the majority of Hindus.

4. From the indistinctness and undeveloped character of the Jaina element contained in it, it seems probable that in Tiruvalluvar's age the Jainism of the Tamil country was rather an esoteric ethical school,

than an independent objective system of religion, and was only in the process of development out of the older Hinduism.

—Bishop Caldwell's Comparative Grammar of the Dravidian Languages.

XV

The Kurai owes much of its popularity to its

exquisite poetic form. A kural is a couplet containing a complete and 76

திருவள்ளுவர்

striking idea expressed in a refined and intricate metre. No translation can convey an idea of its charming effect. It is truly an 'apple of gold in a net-work of silver'. Something of the same kind is found in Greek epigrams,

in Martial, and the Latin elegiac verse. There is a beauty in the periodic character of the Tamil construction in many of these verses that reminds the reader of the happiest efforts of Propertius.

The brevity rendered necessary by the form gives an oracular effect to the utterances of the great Tamil Master of the sentences. They are the

choicest of moral epigrams. Their resemblance to gnomic poetry of Greece is remarkable as to their subjects, their sentiments, and the state of society when they were uttered.

It would have been possible to illustrate each chapter with parallel passages from Sanskrit authors, from poets of many languages and times, and from Holy Scripture.

This I have done here and there, especially where it might seem that the author was translating, as from Manu, for example ; but after careful study, it would seem that, except the few I have indicated, if is not probable that Tiruvalluvar translated a Sloka from Sanskrit. It is certainly not an anthology, but the perfect and most elaborate work of one

master.

M. Ariel speaks of Tiruvalluvar's great work as 'the masterpiece of Tamil literature—one of the highest and purest expressions of human thought'. Again, he says: 'That which above all is wonderful in the Kural is the fact that its author addresses himself, without regard to castes, peoples or beliefs, to

the whole community of mankind : the fact that he formulates sovereign morality

and absolute reason; that he proclaims in their very essence, in their eternal abstractedness, virtue and truth; that he presents, as it were, in one group the highest laws of

.

அதுபந்தம்

77

domestic and social life;

that he is equally perfect in thought, in language, and in poetry, in the austere metaphysical contemplation of the great mysteries of the Divine nature, as in the easy and graceful analysis of the tenderest emotions of the heart'. (Journal Asiatique 1848).

It speaks loudly in favour of the Tamil race that the couplets are

enshrined in the hearts of the whole people.

Dynastic changes, Muhammadan raids, and irruptions of alien races, through many centuries, have changed many things in the South : but the Tamil race preserves many of its old virtues, and has the promise of a noble future. Their English friends, in teaching them all that the West has to

impart, will find little to unteach in the moral lessons of the Kural rightly understood. Sir A. Grant says: 'Humility, charity, and forgiveness of injuries, are not described by Aristotle'. Now these three are everywhere forcibly inculcated by the Tamil moralist. These are the themes of his finest verses. It is obvious

that such a code as this could only arise among an essentially moral and noble race. We shall not do all the good we might do among them till we more unreservedly recognize this.

The authors of the Naladi seem to have been Jains. They are of unequal value, often obscure, sometimes trivial. The

prevailing tone is cynical, and we miss in them the healthy humanity of Tiruvalluvar. They have been forced by a later native editor into an arrangement harmonizing with that of the Kural; the result of which is, that the title of a chapter often affords no clue to its contents. Though often very beautiful, these verses especially lack the condensation and vigour

of our poet.

Tiruvalluvar abounds in short and memorable, and, if I might so call them, epigrammatic sayings, concentrating with a forceful brevity the whole idea which he desires to impart into some single phrase, forging it into a finished

shaft, at once pointed to

pierce, and barbed that it shall not easily drop from, the mind and memory.

'The Kural is composed in pure Tamil, that is, with scarcely any admixture of Sanskrit. Of this pure and primitive Tamil, this work of Tiruvalluvar is the most finished specimen, and may fitly be termed 'a well of Tamil undefiled'. The very few words introduced from Sanskrit are made to assume

a Tamil garb, under which it is hard to recognize them.

The greatest difficulty to the learner arises from Ellipsis, which in all its forms rules over Tamil poetry. The metre, requiring much to be compressed into two lines, having but seven feet between them, renders constant ellipsis indispensable. This is its

difficulty, and this also is one of its great beauties.

A higher interest is imparted to the spot and its neighbourhood (Mayilápúr), at least to Christians, by the tradition that here S. Thomas preached, and here met his death, and was here buried. Mayilápúr to us is better known as S. Thoine. In this

neighbourhood a Christian community has existed from the earliest times. Here are fine Armenian and Portuguese churches; and a Christian inscription of the fifth century. Here *Pantaenus* of Alexandria taught; and we are quite warranted in imagining Tiruvalluvar, the thoughtful poet, the eclectic, to whom the teaching of the Jains was

as familiar as that of every Hindu sect, who was not hindered by any caste prejudices from familiar intercourse with foreigners, whose one thought was to gather knowledge from every source, whose friend the sea-captain would bring him tidings of every stranger's arrival: we may fairly, I say, picture him pacing along the sea-shore with the Christian

teachers, and imbibing Christian ideas, tinged with the peculiarities of the Alexandrian அநுபந்தம்

school, and day by day working them into his own wonderful Kural.

The East and the West have influenced one another in a very real and not yet thoroughly

understood way from the earliest times. It is undoubtedly a noteworthy fact that from this Mayilápúr, on which the eyes of Christendom have ever rested as the one sacred spot in India of Apostolic labour, comes the one Oriental book, much of whose teaching is an echo of the 'Sermon on the Mount.'

There is no trace in the Kural of many things, systems, doctrines, and practices, current in South India at different

periods, because, I suppose, they have been eliminated from the sage's own eclectic system of faith and practice, and

because his work is didactic, and not controversial.

What philosophy he teaches seems to be of the eclectic school as

represented by
Bhagavadgita.

REV. G. U. POPE.

திருவள்ளுவர்

அரும்பதவுரை.

கதி—ஆதாரவு.

கஃகான்—இதில் கான் சாரியை. குற்றெழுத்தோடு கான் சாரியை புணரும்போது இடையே ஆய்தம் விரியும்.

(5-ம் பக்கம்.)

ஆசிரிய பரம்பரை—ஒரு
ஆசாரியனுடைய சிஷ்யன்
மற்றொரு சிஷ்யனுக்கு
ஆசாரியனாகிறான், இங்ஙனம்
வருகின்ற ஆசாரிய சிஷ்ய பரம்
பரை.

சில வாண்டுகளுக்கு
முன்னே—In 1896.

ஒரு
சங்கமுன்னிலையில்—சென்னை
முத்தியாலுபேட்டைத் தமிழ்ப்
பாஷாபிவிர்த்தி சங்கம்.
(திவான்பஹதூர் வ.

கிருஷ்ணமாசாரியர் சபாநாயகராக வீற்றிருந்தனர்.)

வேணவா—(வேட்கை அவா) ஆசைப்பெருக்கம்.

உத்தரவேதம்—(கீர்வாண வேதத்துக்குப்பின் தோன்றிய வேதம்.) இது திருக்குறளுக்கு வழங்கும் திருநாமங்களில் ஒன்று.

இற்றை ஞான்று—(இன்று ஞான்று) இன்றுகிய நாள், இன்று (in September 1901.)

விகற்பம்—வேறுபாடு: here எதுகை வேறுபாடு.

குறள்

வெண்பா—(குறள்—சிறுமை, குள்ளம்) வெண்பாவிற் சிறுமையள வுடையது.

(9-ம் பக்கம்.)

வாயுறைவாழ்த்து—"வாய்—வாய்மொழி: உறை—மருந்து; வாயுறை என்பது சொன்மருந்து எனப்

பண்புத்தொகையாம்; இனி வாய்க்கட்டோன்றிய மருந் தென வேற்றுமைத்தொகையுமாம்;

மருந்து போறலின் மருந்தாயிற்று.

வாழ்த்து—வாழ்விக்தல்,

ஆஜாதுபாகு—முழந்தாளளவும்
நீண்ட கையுடையோன்.

ஸாக்ரெடிஸ்

(Socrates.)—ஐரோப்பாக்கண்டத்தில்,
கிரேக்கு தேசத்தில், ஆதென்ஸ்
நகரில் கி. மு. 469-வருஷம்
பிறந்தவர். முற்காலத்து
ஞானவான்களில் மிகச் சிறந்தவர்.
தமது தேயத்தவருடைய
ஒழுக்கங்களைத் திருத்துவதே முக்கிய
நோக்கமாக இருந்தவர்.
இவருடைய கொள்கைக

திருவள்ளுவர் அரும்பதவுரை

ளெல்லாம் அக்காலத்தவர்க்கு அமையாதனவாக இருத்தலின், படிறனென்று பழித்து, இவரை கி. மு. 399-ஹுல் விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டனர். பின்னுல் அவருடைய பெருமையை அறிந்து, அவரைப்போல ஒரு சிலா விக்கிரகம் செய்து வைத்தனர்.

Socrates used to call himself 'the midwife of men's thoughts.' Out of his intellectual school

sprang those of Plato and the Dialectic system. He was the son of a statuary, and pursued the same calling in the early part of his life; but when he entered upon the study of wisdom, he laid aside that occupation, and devoted himself to the instruction of all whom he could persuade to listen to him, wherever he met with them in the city.

(Plato)—இவர் ஸாக்கிரடிஸ் என்பவருடைய மாணாக்கர். தம காசிரியருடைய சித்தாந்தங்களைப் பல நூல்களாக விரித்தெழுதினர். கி. மு. 347-வரல் காலகதி யடைந்தனர். அவர் போதித்த விஷயங்களின் முக்கியாமிசங்களாவன:—ஆன்மா நித்தியமானது; மனிதன் ஐம்பொறிவாயிலாய் அறிவு பெறுவதில்லை, இயற்கையில்தானே சேதனன்; உலகிற் பொருள்களுக்கு ஆதியந்த மில்லாத மூலகாரணங்களாவன,—ஒன்றோடொன்றியையில்லாத

ஈசுவரனும் அசிக்கும்;
ஞானமெல்லாம் ஒன்றுக்கொன்று
சார்பாய், அந்தத்தில்
ஏகபாவமுடைய'ன முதலியனவாம்.

(10-ம் பக்கம்)

பிரபௌத்திரர்—பௌத்திரன்
பிள்ளை, great grandson.

சிலப்பதிகாரம்...இடைக்கலான
ஆகாவு:—சிலப்பதிகாரம்
இரண்டாவது: மதுரைக்காண்டத்தின்
இறுதியில்,

"தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுவாளைத்

தெய்வந் தொழுந்தகைமை
திண்ணமால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய
கண்ணகி
விண்ணக மாதர்க்கு
விருந்து'' என்ற வெண்பாவிலும்,
மணிமேகலை சிறைசெய்த காலையில்,
''மாபெருந் தெய்வந்
தோன்றி மடக்கொடி
நீகே ளென்றே நேரிழைக்
குரைக்கும்
தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுமவள்
பெய்யெனப் பெய்யும்

பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன்
பொருளுரை தேறுய்”

6

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

-என்றவிடத்திலும்,

“தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு
மழை”

என்ற திருக்குறளை

உதகரித்திருப்பதனாலே,
திருவள்ளுவர், மேலைக் காவியங்கள்
இயற்றப்படுவதற்கு முன்னரே
இருந்தவர் என்பது பெறப்படும்
கரை.
ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாய்
ஏககாலத்துச் செய்யப்பட்டன
மேற்கூறிய
சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.
அவற்றில் சிலப்பதிகாரத்தில்
"கடல்சூழ்
இலங்கைக் கயவாகு
என்பான்" என்று கூறப்பட்ட
அரசன் இலங்கையில் கி. பி.

112–ம் ஆண்டிலே அரசியல்பெற்றான் என மகாவமிசம் என்னும் இலங்கைச்

சரித்திரத்திலே செப்பியிருக்கிறது. ஆகவே வள்ளுவர் 1800 வருஷங்களுக்கு முற்பட்டவர் என்பது பெறப்படும்.

சைவம்.—சிவனைக் கடவுளாகக் கொண்ட சமயம்.

பதி–பசு–பாசம்

எனும் மூன்றும் நித்தியப் பொருள்கள் என்பதும், பசுக்களாகிய ஆன்மாக்கள் புண்ணிய மேலீட்டினலே பதிஞானம் பெற்றுப் பாசத்தடை நீங்கிச் சிவத்தோடு இரண்டறக் கலத்தலே முத்தி யென்பதும், இச்சையே பிறவிக்குக் காரணம் பற்றொழிதலே முத்திக்குக் காரணமென்பதும், சைவசமயக் கோட்பாடு.

சைவ சமயாசாரியர்.—சைவ சமயக்குரவர். சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனர். மாணிக்கவாசகர், திருஞான

அத்துவிதம்.—பிரமம் தவிர வேறில்லை என்பதே சித்தாந்தமாகக் கொண்ட மதம். இம்மதத்தைத் திக்குகடோறுஞ் சென்று எடுத்துப் பிரசங்கித்து வியவஸ்தாபனம் பண்ணினவர் ஆதி சங்காசாரியர்.

வைணவம்.—விஷ்ணுவைக் கடவுளாகக்கொண்ட சமயம். இது விசிஷ்டாத்துவிதம் எனவும் பெறும். இது இராமாநுஜரால் அபிவிர்த்தி செய்யப்பட்டமையால் இராமாநுஜமதம் எனவும் படும். ஈசுவரன் வேறு ஆத்துமா வேறு; ஆத்துமாக்கள் ஞானங்கைகூடி பிரபஞ்சத்தைத் துறந்து பகவானுடைய திருவடியினிடத்தில் வைத்த அன்புடையவராய், வைகுண்டஞ் சென்று சாமீபம் பெற்றிருத்தலே மோக்ஷமாம் எனக் கூறுவது.

(11-ம் பக்கம்)

அமாத்தியர்—மந்திரிகள்.

ஜைனர்.—வேதத்தை நம்பாதவர். கொல்லாவிரதமே இவர்களிடத்தில் முக்கியமான ஒழுக்கம். தமக்குள் கடவுள் அருகதேவன் என்பர். இவர்கள் இரவில் உணவுகொள்வதில்லை. தற்காலம் தென்னிந்தியாவில் காஞ்சிபுரம் மன்னார்கோயில் மைசூர் முதலிய இடங்களில் வசிக்கின்றனர்.

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

83.

புத்தர்.—பௌத்தமத ஸ்தாபகர். கடவுள் மனுவாக்குகளுக்கு அதீத

மாகையால், அவரை மானுட
நிலையில் கண்டு தெளிவது
முடியாது; புத்த நிலையை அடைய
முயல்வதே முத்தியுபாயம்;
அவாவறுத்து உலகநிலையாமை
உணர்ந்து ஆத்மதரிசனம் செய்த
வழியன்றி அந்நிலை சித்தியாகாது
என்பது பௌத்தமதக் கொள்கை.
இந்த மதஸ்தாபகரான கௌதம
புத்தருடைய காலம்
இரண்டாயிரத்தைந்நூறு
வருஷங்களுக்கு முற்பட்டது.

(12-ம் பக்கம்)

திருமயிலை—சென்னைக்குத்

தெற்கிலுள்ள மயிலாப்பூர்—San Thome.

மனமாட்சி—மனவறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள், மனவாளது நற்குண நற்செய்கைகள்.

நிகமமே யிதுவாமென்ன—இது நிகமமேயாம் என்ன, இது வேதமே என்று சொல்லுமாறு.

நால்வர்சொல் லைசவர் வேதம்.—நால்வர்—சைவசமயாசாரி யர்களான மாணிக்கவாசகர்,

திருஞானசம்பந்தர்,
திருநாவரையர், சுந்தர மூர்த்திகள்
எனு நால்வர். மாணிக்கவாசக
ரருளிச்செய்தது—திருவாசகம்; எனை
மூவருரும், தேவாரம்.

நளிர்குருகூரன்.—பெருமைபொருந்திய
திருவிக்குருகூரர். திருக் குருகூரிலே
அவதாரமான நம்மாழ்வார்.
இவருடைய அருளிச்செயல்களா
வன:—திருவிருத்தம்—திருவாசிரியம்—பெரிய
திருவந்தாதி—திருவாய்மொழி
என்பன.

குருகூரன்
சொல்லிப்போல்வலார்

சிலர்.—ஏனைய ஆழ்வார்கள்:
பெரியாழ்வார்—குலசேகராழ்வார்—திருமழிசையாழ்வார்—தொண்டரடிப்பொடியாழ்வார்—திருமங்கையாழ்வார்—பொய்கையாழ்வார்—பூதத்தாழ்வார்—பேயாழ்வார்—திருப்பாணாழ்வார்—சூடிக்கொடுத்த நாச்சியார்—மதுரகவி.

பாகவதர்—பகவத் சம்பந்தமுடையவர். பாகவதர் வேதம்—வைஷ்ணவர் களுக்குரிய வேதம், அதாவது நாலாயிரப்பிரபந்தம்.

வால்வளை—வெண்மையான

சங்கு. சங்குகள் உலவும்
வீதி—பிரவாக சலத்தில் வந்த
சங்குகள் உலவுதலான வீதி.

(13—ம் பக்கம்)

மேல்வழி—சுவர்க்கமார்க்கம்.

கொலைமறுத்தல்—உயிர்களைக்
கொல்லுதலை மறுத்தல்.

இவுளியாகம்—(இவுளி—குதிரை)
அசுவமேதயாகம். 84

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

உன்னியகருணை—சிறந்த
கிருபை.

ஆதிதரும் மகார்—பகவன்
என்பவனுடைய மனைவி பெற்ற
பிள்ளைகள்.

ஆதிதருமகாரெழுவார்.—இதனை
அடியிற் காட்டிய கபிலரகவலால்
அறிக.

"அருந்தவமாமுனி
யாம்பகவற்குக்
கருவூர்ப்பெரும்பதிக் கட்பெரும்பூஞ்சி
ஆதிவயிற்றினி
லன்றவதரித்த
கான்முளையாகிய
கபிலனுமம்யானே.

என்னுடன்பிறந்தவர்
எத்தனைபேரெனில்:—
ஆண்பால்மூவர்,
பெண்பால்நால்வர்.
யாம்வளர்திறஞ்சிறி
தியம்பக்கேண்மின்.
ஊற்றுக்காடெனும்
ஊர்தனில்தங்கியே
வண்ணாரகத்தில்
உப்பைவளர்ந்தனள்.
காவிரிப்பூம்பட்டினத்திற்
கல்விலஞர்சேரியில்
சான்றாரகந்தனில்

உருவவளர்ந்தனள்.

நரப்புக்கருவியோர்

நண்ணிடுசேரியில்

பாணரகத்தில்

ஓவியவளர்ந்தனள்.

குறவர்கோமான்

கொய்தினைப்புனஞ்சூழ்

வண்மலைச்சாரலில்

வள்ளிவளர்ந்தனள்.

தொண்டைமண்டலத்தில்

வண்டமிழ்மயிலைப்

பறையரிடத்தில்

வள்ளுவர்வளர்ந்தனர்.

அரும்பார்சோலைச் சுரும்பார்வஞ்சி

அதிகனில்லிடை

அதிகமான்வளர்ந்தனன்.

பாலூர்நீர்நாட்

டாலூர்தன்னில்

அந்தணர்வளர்க்க

யானும்வளர்ந்தேன்."

பிக்கி—பிற்பட்டு

ஓதிமப்புள்ளிறை—(ஓதிமம்–அன்னம்)

அன்னப்பறவையை வாகனமாக

வுடைய பிரமன்.

இறந்தவுன்—செத்த

பிராணியின் மாமிசம்.

இயற்றமிழ்மறை—தமிழ்வேதமான திருக்குறள்.

கோள்—கொள்கை அபிப்பிராயம்.

திருவள்ளுவமாலை.—திருக்குறளின் சிறப்புப்பாயிரம். சங்கப் புலவர்கள் திருக்குறளைச் சிறப்பித்துப் பாடிய பாடலாகிய மலராகிய மாலை. இது திருவள்ளுவர்—அரும்பதவுரை.

அசரீரி, காமகள், இறையனார்,

உக்கிரப்பெருவழியார் உரைத்த பாக்களுடனே, சங்கப்புலவர் நூற்பத்தொன்பதின்மரும் உரைத்த பாக்களுங்கூடி ஐம்பத்து மூன்று பாக்களையுடையது.

(14-ம் பக்கம்)

கபிலரகவல் — கபிலர் திருவள்ளுவருடன் பிறந்தவர். இவர் திருவா ரூரில் பிள்ளையில்லாத ஒரு பிராமணரால் பிள்ளையாக வளர்க்கப்பட்டனர். ஏழுவயதாகி உபநயனச்

சடங்குசெய்ய எத்தனிக்கையில்,
குலத்தினர் "இப்
பிள்ளை நமது
குலமரபுடையனல்லன்; ஆதலால்
இவனுக்கு இச்சடங்குசெய்வது
அடாது" என மறுத்தனர்.
அப்போது கபிலர் அவ்வுறவினரை
நோக்கி
"கர்மத்தாலல்லது சன்மத்தால்
சாதியில்லை" என்று சொல்லி
அவர்களுடைய
கோட்பாட்டை வல்ல
நியாயங்கொண்டு
நிராகரணஞ்செய்து ஒரு அகவற்
பாவைப் பாடினர். அதுவே

கபிலரகவல் என வழங்குகின்றது.
பின்னர்
சங்கப்புலவரிற் சிறந்தவர்களில்
ஒருவராக விளங்கினர்.

தொண்டைமண்டலம்.—காஞ்சிபுரத்தை
ராஜதானியாக உடைய
நாடு. வேங்கடமலைக்கும்
பிரஹிதகிக்கும் இடையிலே
பவழமலைக்குக் கிழக்
காக சமுத்திரதீரம் வரையில்
பரவியுள்ளது. சிலகாலந்
தனிநாடாகவும், பல
காலம்
சோழமண்டலத்திலுட்பட்டதாகவுமிருந்தது.
தொண்டைமான் ஆண்ட

காதலின்
இப்பெயருடையதாயிற்று.
இந்நாட்டின் பெருமையைத்
தொண்டை
மண்டலசதகம் என்னும் நூல்
விரித்துரைக்கின்றது.
மைப்புயலணிபொழின்
மயிலாப்பூர்,—கருமையான
மேகங்கள் தவழ்ந்த
அழகிய சோலைகள்சூழ்ந்த
மயிலாப்பூர்.
மன்னற்குள்படு
கருமத்தலைவன்—அரசர்களுக்கு
அமைச்சியல் செய்யலான
காரியத்தலைவன்.

மாதாநுபங்கி—(மாதா அநுபங்கி) தாயை ஒத்த ஒழுங்கினர்: பிள்ளையி னிடத்து அன்புசெய்யுந் தாய்போல உயிர்களிடத்து அருள் செய்பவர் எனச் சிலர் கூறுகின்றனர். (செந்தமிழ் என்னும் பத்திரிகை 5:3-ம் பக்கம்)—

"மாதம் அநுபங்கி என இருமொழி புணர்ந்தது மாதாநுபங்கி என வாயது வட நூன்முடிபு. மாதம் என்பது செருக்கு; அது என்பது ஸாதத்யார்த்தத்தில்

வந்தது;

பங்கி—பங்கத்தையுடையான்.

என்றுஞ் செருக்கொழிதலுடையான்

என்பது இப்பெயர்க்குப்

பொருளாகக் கொள்க.

பெரியராதலாற் பெருஞ்சிறப்

பெய்திய ஞான்றும் தருக்கின்றி ட

மைந்தொழுகுவார் என்பது கருத்து."

சென்காப்போதார்—செம்மையான

காவாகிய மலையுடையவர்.

சரஸ்

வதிக்கு இருப்பிடமான காவாகிய

மலை உடையவர் என்பதாம். 86

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

(15-ம் பக்கம்.)

அடிசில்—சோறு. படிசொல் பழிநாணுவாள்—என் சொற்படி நடவாவிட்டால் நேர்தலான பழிக்கு அஞ்சுமவள்.

அடிவருடி—காலினை வருடி, கால்பிடித்து. பின்தூங்கி—நான் தூங்கினபின் தூங்கி. முன் உணரும்— எனக்குமுன் நித்திரைவிட்டெழுந்த.

பேதை—பெண்.

இலிங்கதாரணர்—இலிங்கத்தைத் தரித்திருக்கும் வீரசைவமரபினர்.

காருஸ்வரம்—இழிவு

தோன்றும்படி உரைக்கும்
ஒலிக்குறிப்பு.

(16-ம் பக்கம்.)

புறநானூறு.—கடைச்சங்கப்புலவர் தொகுத்த எட்டுத்தொகையுள் எட்டாவது. புறத்தே நிகழும் ஒழுக்கமாகிய அறத்தையும் பொருளையுமே பொருளாக உடைமையின், இஃது இப்பெயர் பெற்றது. அரசர் பிரபுக்கள் முதலானவர்களைப் பல புலவர் பாடிய புறப்பொருள் விஷயமான நானூறு பாக்களுள்ள நூல்

என்பதாம்.

(17-ம் பக்கம்.)

தொல்காப்பியம்.—அகத்தியத்தின் இயற்றமிழிலக்கணத்தை முதனூலாகக்கொண்டு தொல்காப்பியராலே செய்யப்பட்ட இலக்கணம். எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என மூன்று பிரிவுடையது. கல்லாடர், இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய பேராசிரியர்கள் இதற்கு உரை எழுதியிருக்கின்றனர்.

தொல்காப்பியர் சமதக்கினி முனிவருடைய புதல்வர்; திரண தூமாக்கினி என்னும் இயர் பெயருடையவர்.

வடநாட்டினின்று அகஸ்தியரோடு வந்து அவர்பால் தமிழ் கற்றவர். அவர் மாணாக்கர் பன்னிருவரில் முதன்மையுள்ளவர். தொல் காப்பியக் குடியை உடையவராதலின் இப்பெயர் பெற்றனராம். தொல் காப்பியர் காலவரையறை செய்வது இன்னும் இயலாத காரியமாக இருக்கின்றது.

"இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின்

&c." என்பது பொருளதிகாரத்தில் கற்பியலில் 4-வது சூத்திரத்தில் நச்சினார்க்கினியர் குணிக்க படி.

விவிலிய நூல்.—The Holy Bible.

திரிபிடகம்.—மூன்றுகிய பௌத்தாகமங்கள். அவை வினய பிடகம், சூத்திரபிடகம், அபிதருமபிடகம் என்பன.

ஸர்வோத்கிருஷ்டம்—மிகமேலானது.

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

(18-ம் பக்கம்.)

ஒப்புமை—பொதுத்தன்மை

[பெற்றிருத்தல்.

அருளுடைமை—எல்லா வுயிர்களின்மேலும் செல்வதாகிய கருணையைப்

அவாவறுத்தல்—புலன்களின்மேற் செல்லும் ஆசையாகிய நினைவை மெய்பொருளுணர்வால் நீக்குதல்.

அதிகாரப்படுத்தி—கிரமப்படுத்தி.

"ஆரா... .....தரும்."

ஆசையற்றபோதே ஒருவனுக்கு

உயிரோடிருக்கையிற் ருனே
வீட்டின்பம் உண்டாகும்; அதாவது
அவாவற்றவர் ஜீவன் முத்தராவர்
என்பதாம்.

"நன்ருய்...வீடாமே."

விஷயாதிகளிலே உள்ள பற்று
பரிஷ்காரமா யற் றுப்போனல்
அந்த க்ஷணமே மோக்ஷம்
ப்ராப்தியாம் என்பது கருத்து.

(19-ம் பக்கம்.)

எல்லார்க்கும்
ஒப்பமுடிந்தது—எல்லார்க்கும்

சம்மதமாக முடிவானது;
சர்வசம்மதமானது; எல்லார்க்கும்
அங்கிகாரமானது.

சிங்கநோக்கு—நடந்து

செல்கையில் சிங்கமானது
முன்னும் பின்னும் பார்த்துச்
செல்வதுபோல, ஒரு விஷயத்தை
ஒரு நூலில் சொல்லுகையில் அவ்
விஷயம் முன்சொன்னவைகளையும்
பின்சொன்னவைகளையும்
நோக்கிச்செல் வதாம்.

"ஆற்றொழுக் கரிமா நோக்கந்
தவளைப், பாய்த்துப் பருந்தின் வீழ்
வன்ன சூத்திரநிலை" என்னும்

நன்னூல் 19-வது சூத்திரத்தைப் பார்க்க.

வாதவூரர்.—திருவாதவூரைப் பிறப்பிடமாக உடைய மாணிக்க வாசகர்.

திருக்கோவையார்.—திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் பெறும். திருச்சிற்றம்பல முடையாரைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பாடிய கோவை. இது சிற்றின்பப்பொருளை உடையதாயினும், உள்ளுறை யான பேரின்பப்பொருளையும் உடையதென்பது பெரியோர்

கொள்கை. அங் ஙனமே திருக்கோவையாருண்மை என அக்கோவையின் உண்மை ஞானப் பொருளை விளக்கிய நூல் ஒன்று திருவாரூர்–சுந்தரதேசிகர் என்பவரால் இயற் றப்பட்டிருக்கின்றது.

சடகோபர்.—சடம் என்னும் வாயுவை ஒறுத்தவர், நம்மாழ்வார்.

திருவிருத்தம்.—நம்மாழ்வாரருளிச்செய்தவை—திருவிருத்தம், திரு வாசிரியம் பெரியதிருவந்தாதி திருவாய்மொழி என நான்கு பிரபந்தங்கள். இவை முறையே

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

சாரமாகக் கொள்ளப்படும்.
திருவிருத்தம்—பகவானிடத்தில்
ஆழ்வார் "உயிர் கள்
பிறவிமுதலான துன்பநீங்கி
வீடுபெறும்படி அருளவேண்டும்"
என்று
விண்ணப்பித்துக்கொள்வதான
பிரபந்தம். நாயகி நாயக
பாவமாகக் கோவைத் துறைகளை
அமைத்து ஞானரத்தம்

உள்ளுறையாகப் பாடிய நூறு
கட்டளைக் கலித்துறைகளை
யுடையது.

இறையனாரகப்பொருள்.—கடைச்சங்கமிருந்த
காலத்தில் ஒரு முறை
கடும்பஞ்சம் கோரிட்டது.
அப்பொழுது காட்டைவிட்டுப்
போய்ப் பஞ்சம் தெளிந்தபிறகு
மீண்டும்வந்து சேர்ந்தவர்களில்
பொருளதிகாரம் வல்ல
நிலாமையாலே, மதுரையில்
கோயில்கொண்டிருக்கும்
இறையனார் அறுபது சூத்திரத்தால்
அகப்பொருட்சுருக்கம்

அருளிச்செய்தனரென்றும்
அதற்கு நக்கீரர் உரைகண்டனர்
என்றும் உரைக்கப்படுகின்றது.

உத்தரகுரு.—போகபூமியிலொன்று.

One of the six portions of the earth in which, free from sorrow, the soul enjoys the fruits of former virtuous deeds : they are ஆதியாரிவஞ்சம், நல்லரி வஞ்சம், ஏமதவஞ்சம், ஏமவஞ்சம், தென்குருவம், உத்தரகுருவம்—The last is beyond the north pole; and

one part is a sort of purgatory where souls are purified.

பெறுவல்—பெறுவேன்.

வழிபடுவல்—வழிபடுவேன்,

வணங்குவேன்.

(20-ம் பக்கம்.)

பாசாண்டிகர்—பாசாண்டம்—சமயக்கட்டு.

பாசாண்டர் (பாசாண்டிகர்)—சமயிகள். அறுவகைப் பாசாண்டிகர்—அறுவகைச் சமயிகள்.

இனை விழைச்சு—ஸ்திரீ புருஷரிருவருக்கு மொத்த வின்பம்.

கொலையேகளவே, ழ.

ஏகாரம் எண்ணுப்பொருளில் வந்தது.

முடைக்குரம்பை—புலால் நாற்றமுள்ள கூடு.

புழுப்பிண்டம்—புழுக்களா கிய உண்டை

பைம்மறியாநோக்க—பையை உட்புறம் வெளிப்புறமாகத் திருப்பிப் பார்ப்பதுபோலப் பார்த்தால்.

பருந்தார்க்கும்—பருந்து

புசிக்தலான.

ஐயும்—ஐ—சிலேட்டுமம், phlegm. பித்து—பித்தம்.

வளி—வாயு, air in the body. கொழு—நிணம்.

மூத்திரபுரீடம்—சலமலம்.

இயைபு—பொருத்தம்.

சாகது—கலவைக்சாந்து, சந்தனம். பாகு—சர்க்கரை, கற்கண்டு.

அசுபத்தன்மை—impurity.

தாழ்ம்பட்ட—பிணிபட்டுள்ள,
அல்லது ஆழ்ந்துள்ள.
நிச்சநிரப்பிடும்பை—நிச்சநிரப்பாகிய
இடும்பை; தரித்திரமாகிய
துன்பம் கடு—கசப்பு.

கலங்கற்சின்னீர்—அற்பமாகிய
கலங்கலான நீர்.
பேய்த்தேர்—கானல், mirage.

(21-ம் பக்கம்.)

'வேண்டிய...முயலப்படும்'

(திருக்குறள்).

இப்பிறப்பில் தவஞ்செய்தவர் தாம் விரும்பிய பேறுகளையெல்லாம் மறுமை யில் பெறுவர். ஆதலால் அறிவுடையோர் இப்பிறப்பிலே தவஞ் செய்பவர் என்பதாம்.

இதன்பாத்தேர்
வீடுபேற்றின்பம்—வீடுபேற்றின்பம்
இத்தவத்துக்கு வேறு னதோ.
இத்தவத்தாற்றானே
வீடுபேற்றின்டம் பெறலாமே.

அவலக்கவலைக்கையாறு—கிலேசத்தாலும்
கவலையாலும் உண்டாகும்

துன்பம்.

"காமஞ்சான்ற——பண்பே."

இது முன்னர் இல்லற நிகழ்த்திய தலைவனுந் தலைவியும் பின்னர்த் துறவறநிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது.

(22-ம் பக்கம்.)

கடா——வினா, கேள்வி.

நூற்கு உரை காண்கின்றவர்——நூலுக்கு உரையியற்றுவோர்.

இருமை——இம்மை மறுமை.

அங்கவியல்—அரசனது
அங்கத்தைக் கூறுகின்ற இயல்.

அங்கம் ஆறு: — "படைகுடிகூழமைச்சுநட்பரணுறு, மூடையானரசரு
ளேறு." [இயல்

ஒழிபியல்—அரசியலிலும்
அங்கவியலிலும்
கூறுதொழிந்தவற்றைக் கூறும்

பாயிரம்—Introduction.

(23-ம் பக்கம்.)

போக்கியார்—கடைச்சங்கப்
புலவரிலொருவர்.

(24-ம் பக்கம்.)

உறுபொருள்—உடையா

ரில்லாமையால் தானே

வந்துற்றபொருள்.

உல்குபொருள்—சுங்கம்.

"உழந்தும் உழவேதலை."—பல

வருத்தமுற்றும் உழவே

சிறந்த தொழி லாம்.

90

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

(25-ம் பக்கம்.)

இறைமாட்சியில்—இறைமாட்சி என்னு மதிகாரத்தில்.

இறைமாட்சி

யாவது அரசனுடைய நற்குண நற்செய்கைகள்.

ஊறு—தீமை.

கயமை—கீழ்மை.

அவ்வாற்றின்—அவ்வழியால்.

ஒருதலையான—உறுதியான, உண்மையான.

(26-ம் பக்கம்.)

மன்பதை—மக்கட்பரப்பு.

அறத்து

வழிப்படுவன—தருமமார்க்கத்தில்
நடத்தலால் உண்டாவன.

"மழையின்றி
மாநிலத்தார்க்கில்லை."

(நான்மணிக்கடிகை) மழையில்லை
யாயின் பூமியிலுள்ளார்க்கு
யாதொரு நன்மையும் இல்லையாம்.

வான்சிறப்பு—மழையின் பெருமை.

ஏற்புடைக்
கடவுள்—பொருத்தமுடைய
கடவுள்.

எழுவாயாக—முதலாக.

(27-ம் பக்கம்.)

"கோளில் பொறியிற்

குணமிலவே."—தத்தமக்கேற்ற

புலன்களைக் கொள்

ளுதலில்லாத பொறிகள்போலப் பயன்படுதல் உடையனவல்ல. காணுத கண் முதலியனபோல, சடவுஞ வணங்காத தலைகள் பயனில என்பதாம்.

பயனிலை---முடிவு.

இன்றியமையாமை—ஆவசியகம், necessity. [supports.
வலியுறுத்துகின்றது—வலிமையடையும்படி செய்கின்றது, strengthens,

வாழ்வாங்குவாழும்—வாழத்தகுந்த விதமாக வாழும். ஈறிலின்பம்—முடிவில்லாத இன்பம், பேரின்பம், மோகூம். சோபானம்—கற்படி, படிக்கட்டு.

மேல்வரிச்சட்டம்—Model.

(29-ம் பக்கம்.)

அடியாகின்றது---ஆகாரமாவது:

அருளென்னும் அன்பீன்குழவி—அன்பு ஈன் அருள் என்னும் குழவி—அன்பினுல் ஈனப்பட்ட அருளென்னும் குழவி.

(30-ம் பக்கம்.)

அந்தமி லின்பத் தழிவில் வீடு—முடிவில்லாத இன்பந்தருவதாய் நித்திய மான மோக்ஷம், eternal bliss.

பிறனில் விழைதல்—பிறனுடைய
இல்லாளை விரும்புதல்.
வெஃகல்—பிறர் பொருளை
வெளவக்கருதுதல்.
திருவள்ளுவர்—அரும்பதவுரை.

நடுவிகந்தாமாக்கம்—நடுவு
இகந்து ஆம் ஆக்கம்.
நடுவுநிலைமையினின்று தவறுதலான்
உண்டாகின்ற செல்வம்.

(32-ம் பக்கம்.)

கழுவாய்—பிராயச்சித்தம்.

மலைமேல் செய்த

ஹிதோபதேசம்—Sermon on the Mount.

ஏசுநாதர்.—ஆசியாவின் வடமேற்கில் ஜூடேயா என்னும் நாட்டில்

பெத்லெஹெம் என்ன நகரில் மேரி என்னும் கன்னிகையின் வயிற்றில் கடவு

ளருளால் திருவவதாரம் செய்தவர். இந்தக் குழந்தைக்குக் கடவுளாணைப்படி ஏசு (Jesus) அதாவது இரக்ஷகர் என்று பெயரிடப்பட்டது. இவர்க்குக் கிறிஸ்து என்றும் ஒரு பெயருண்டு. முப்பது வயதாகிறவரையில் காலிலி யைச் சேர்ந்த நாஜரெத்தில் வசித்துக்கொண்டிருந்து, அப்பால் உலகினர்க்கு உபதேசகராய்த் தாம் கடவுளின் திருக்குமாரன் என்பதை எல்லாரும் அறிய லாம்படி அனேக அற்புதங்களைச் செய்துகாட்டினர். உலக உஜ்ஜீவனார்த்த மாக ஊழியாய்த் திரிந்துகொண்டிருந்தனர். திரிதருகையில் குட்டரோகம் குருடு செவிடு ஊமை முடம் முதலான வியாதிகளைத் தீர்த்தும், அங்கங்கே ஹிதோபதேசம் செய்தும், இறந்தவர்களை எழுப்பியும், துஷ்டதேவதைகளின் சேஷ்டைகளை நீக்கியும் வந்தார். வீசுகிற காற்றுத்தானும், அவர் "அசையாம லமைந்திரு" என்றால், அமைந்திருக்குமாம். பகைவராலும் காணத்தக்க பாவச் செய்கை ஒன்றும் இல்லாத பரிசுத்தர். கொடியர் சிலர் அவருடைய ஹித வார்த்தைகளை அலக்ஷியம்பண்ணி அவரை இன்னல்படுத்தி இழிவுடன் கொன் றார்கள். இறக்குந் தறுவாயிலும் அவர் கடவுளைநோக்கி "அப்பா, இக்கொலை யாளரைப் பொறுத்தருளும். இவர்கள் தாம் செய்வதை இன்னதென் றறியார் கள்" என்றனராம். ஆத்மா உடலைவிட்டு நீங்கியபோது சூரியன் பிரகாசிக்க வில்லை என்றும் பூகம்பம் உண்டாயிற்றென்றும் உரைத்திருக்கின்றது. கொலை யுண்ட மூன்றாவதுநாள் மீண்டும் அவர் உயிர்பெற்றெழுந்து, நாற்பதுநாள் பூமியிலிருந்து, அப்பால் சுவர்க்கலோகத்தை அடைந்தனராம். இவருடைய உபதேசக் கிரமத்தை அனுசரித்துவருகின்ற மதம் கிறிஸ்தவமதம் எனப்பெறும்: அம்மதத்தினர் கிறிஸ்தவர் எனப்படுவர்.

(33-ம் பக்கம்.)

மிருதி—கர்வம்.

மிக்கவை—தீமைகள்.

தகுதி—பொற்றுமை.

ஒறுத்தல்—தண்டித்தல்.

ஓராறுபட்டு—ஒருவழிப்பட்டு.

சீரியர்—மேற்பட்டவர். 92

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

(34-ம் பக்கம்.)

கருக்கு—கர்வம்.

"பெருமை

பெருமிதமின்மை."—பெருமைக்

குணமாவது (கர்வங்கொள்

ளக் காரணமுள்ளவிடத்தும்)

கர்வங்கொள்ளாமல் விருத்தலாம்.

"அற்ற மறைக்கும்
பெருமை."—பெருமையுடையார்
(பிறருடைய கௌர
வச் செயல்களையே பிறர்
அறியக்கூறி) அகௌரவ
காரியங்களை மறையாநிற்பர்.

(35-ம் பக்கம்.)

சின்னீரதான—அற்பத்தன்மையுடையதான.

(36-ம் பக்கம்.)

கண்கூடு—பிரத்தியகூம்.

ஜோப்.—விவிலிய நூலில்

இவருடைய வரலாறு விளங்கக்
காணலாம். வறுமைத் துன்பங்களுக்
கீடுகொடுத்துப் பொறுமையே
உருவெடுத்தாற்போன்ற வர்.
இறுதியில் கடவுளடிநிழலைப்
பெற்று முக்தி யடைந்தார்.
வறுமைக்கும் பொறுமைக்கும்
எடுத்துக்காட்டா யிருப்பவர்.

(37-ம் பக்கம்.)

கூடாவொழுக்கம்—தவத்தோடு
பொருந்தாததான தீய ஒழுக்கம்.

வாய்மை—மெய்யினது
தன்மை.

அவாவறுத்தல்—புலன்களின் மேற் செல்லும் நினைவை மெய்ப்பொருளுணர்வால் அறுத்தல்.

ஒருதலை—அவசியம்.

நிராகரணம்—மனம் வாக்குக் காயம்.

(35-ம் பக்கம்.)

திட்பம்—உறுதி.

நுட்பம்—சூட்சுமம்.

குரவர்—பெரியோர்.

ஏகதேசமாக—அருமையாக.

அது தன்னெஞ்சைச் சுடுவதுமில்லையே—"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்."

(40-ம் பக்கம்.)

முரண்படக்கூறல்—மாறுகொளக்கூறல். முன்சொன்ன பொருளுக்குப் பின்சொல்லும் பொருள் விரோதப்படச் சொல்லுதல்.

கூறியதுகூறல்—முன்சொன்ன பொருளையே பின்னுஞ் சொல்லுதல்.

மற்றொன்று விரித்தல்—சொல்லத் தொடங்கிய பொருளைவிட்டு யிலே மற்றொரு பொருளை விரித்தல்.

இடை

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

93.

(42-ம் பக்கம்.)

எஞ்சிநிற்கும்—(போனவைபோக) மிஞ்சிநிற்கும்.

மிருதி—ஸ்ம்ருதி—தர்மசாஸ்திரம்.

"திருமொழியினும் வல்லவராக
எண்ணப்பட்ட சங்கத்தார்."

திருவினை யாடற் புராணத்தில்
சங்கப்பலகை தந்த படலத்தில்
"அக்கா நாற்பத்தெட்டு மவ்வழி
வேறுவேறு, மக்களாப்ப்
பிறந்துபன்மாண் கலைகளின்
வகைமை தேர்ந்து, தொக்கவா
ரியமுமேனைச்
சொற்பதினெட்டுமாய்ந்து,
தக்கதென் கலைநுண்டோர்ச்சிப்
புலமையிற் றலைமைசார்ந்தார்"
என்றுரைத்திருப்பது காண்க.

(43-ம் பக்கம்.)

மிகைபடக்
கூறல்—குறித்தபொருளை
விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களி
னும் அதிகப்படச் சொல்லுதல்.

குன்றக்கூறல்—குறித்தபொருளை
விளக்குதற்கு வேண்டுஞ்
சொற்களிற் குறைவுபடச் சொல்லுதல்.

மறைமுகத்தால்—(opp.
விதிமுகத்தால்) செய்யத்தகாதவை
என மறுத்தல் விதமாக.
(மறை—விலக்கு).

நீடுவாழ்வார் இன்னர் என்பது
இரண்டு குறளால் உணர்த்தினர்.
அவை யாவன:—"மலர்மிசை
யேகினான் மாணடி சேர்ந்தார்,

நிலமிசை நீடுவாழ்வார்" என்பதும், "பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க, நெறிநின்றூர் நீடு வாழ்வார்" என்பதுமாம்.

ஒரு முடிபு—ஒரு வாக்கியம்.

(44-ம் பக்கம்.)

கூறிய—கூற.

சுருங்கச்சொல்லல்—சொற்கள் வீணாக விரியாது சுருங்கி நிற்கச் சொல்லுதல்.

விளங்கவைத்தல்—பொருளைச் சந்தேகத்துக்கு இடமாகாமல் விளங்க வைத்தல்.

நவின்றோர்க்கினிமை—வாசித்தவருக்கு இன்பத்தைத் தருதல்.

நல்மொழி புணர்த்தல்—நல்ல சொற்களோச் சேர்த்தல்.

விளக்குகின்றுழி—விளக்குகின்றவிடத்தில்.

வழூஉச்சொற்புணர்த்தல்—குற்றமுடைய சொற்களோச சேர்த்தல்.

மயங்கவைத்தல்—இதற்குப் பொருள் இதுவோ அதுவோ என மயங்க வைத்தல்.

திருவள்ளுவர்—அரும்பதவுரை.

வெற்றெனத் தொடுத்தல்—பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற் களோச் சேர்த்தல்.

சென்று

தேய்ந்திறுதல் — செல்லச்செல்லச்

சொன்னடையும் பொருள் கடையும்

தேய்ந்து முடிதல்.

நின்று

பயனின்மை — சொற்களிருந்தும் ஒரு

பயனுமில்லாமற் போதல்.

தேடிக்குருவுதல் — கன்முய்

ஆராய்தல்.

(47-ம் பக்கம்.)

பொருளானது

கவர்படுதல் — கவர்படுபொருண்மொழி:

ஒரு பொருளைக் குறி உரைத்தசொல்

பலபொருளைக் குறிப்பித்துப்

பொதுத்தன்மையால் சந்தே
கங்கொள்ளா நிற்றல்.

"ஒருபொருள் குணிய உரைக்க
லுற்றசொல், இரு பொருட்
கிணைவது கவர்படு பொருண்மொழி."

பொருளானது

திரிபாதல்—பொருட்திரிபு—Change of meaning,

or compound terms having different meanings, according to the manner in which they are read or accented. (திரிபு—வேறு பாடு.)

உரையாசிரியர்—commentator.

தானுட்டித் தனதுநிறுத்தல்—தானே
ஒரு பொருளை எடுத்து காட்டி
அதனை வருமிடந்தோறும் நிறுத்துதல்.

பிறிதொடுபடான்றன்மதங்கொளல் .— பிறர்மதத்திற்கு தன் மதத்தையே கொள்ளுதல்.

உடன்படாளுகித்

நாயகமணி—மணிமாலைநடுவிலே கோத்திருக்கும் பெருமணி.

(49-ம் பக்கம்.)

தெரியா—தெரியாத இலக்கண சூட்சுமங்கள்.

திருவள்ளுவர்—(இங்கே) திருவள்ளுவருடைய திருக்குறள்.

சோவையார்—மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருச்சிற்றம்பலக்கோவை யார்.

முறையின்வைப்பு—படலம்

முறைப்படி வைத்தல்.

ஒத்து முதலியவைகளோக்

காரணகாரிய

விழுமிய—மேலான.

விழுமியது

பயத்தல்—சிறப்பாகிய

பொருளோத் தருதல்.

விளங்குதாரணத்ததாகுதல்—விளங்கிய

உதாரணத்தை யுடையதாகுதல்.

(50-ம் பக்கம்.)

சொற்பின் வருநிலை—ஒரு

பின்னும் வருவது.

செய்யுளில் முன்வந்த

சொல் பலவிடத்துப்

திருவள்ளுவர்—அரும்பதவுரை.
95.

பொருட்பின்

வருநிலை—ஒரு செய்யுளில் முன்வந்த
பொருள் பலவிடத்துப்

பின்னும் வருவது.

பிறிது மொழிதல்—ஒரு

திருட்டாந்தம் எடுத்துச் கூறி,
எடுத்துக்கொண்ட

பொருளை விளக்குவது.

இதற்கு ஒட்டணி, நவலா நுவற்சி
என்றும் பெயர்
உண்டு.
(55-ம் பக்கம்.)

பரந்துபட்ட—விரிவான.
புகழ்வார் போன்று
பழித்தல்—வஞ்சப்புகழ்ச்சி
(புகழாப் புகழ்ச்சி).
அணியாம்.
(56-ம் பக்கம்.)

நிலங்கடந்த
நெடுமுடியண்ணல்—விஷ்ணு.

(57-ம் பக்கம்.)

"குறுமுனிவர்...சேய்."—அகஸ்தியர் பிரசித்தம்பண்ணின இயல் இசை நாடகம் என முத்திறத்தாகிய தமிழும் என்னுற் செய்யப்பட்ட குறளும் உடைய கங்கையின் திருக்குமாரராகிய சடகோபர் அருளிச்செய்த திருவாய் மொழியின் புத்திரஸ்தானமாகிய வழிநூலாம்.

"ஊரவர் கௌவை...நோய்.'—இவ்வூரில் மகளிர் எடுக்கின்ற அலர் எருவாக, அதுகேட்டு அன்னை வெகுண்டு சொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, இக்காமநோயாகிய பயிர்

வளராநின்றது.

(58-ம் பக்கம்.)

போப்பையர்.—The Rev. G. U. Pope. இவர் தமிழ் நாட்

டில் கிறிஸ்தவப் பாதிரியாக இருந்தவர். தமிழில் இலக்கண வினாவிடையும்,

இங்கிலீஷ்காரர் தமிழ்பயில்வதற்கான சில சிறு புத்தகங்களும் எழுதியிருப்ப

தன்றி, திருக்குறள், நாலடிநானூறு, திருவாசகம்

என்னும் தமிழ்நூல்களை

இங்கிலீஷில்

மொழிபெயர்த்திருக்கிறார்.

சிலகாலம் இங்கிலாந்தில் ஆக்ஸ்

பொர்ட் கல்லூரியில்

தமிழாசிரியராக இருந்தார்.

மலைமேற்செய்த

ஹிதோபதேசத்தின் பிரதிசப்தம் —

Echo of the

Sermon on the Mount.

சர்வ சமயசமரசவாதி—சர்வ சமயங்களையும் சமரசமாகக் கொள்பவர்.

PRINTED AT THE DIOCESAN PRESS, VEPERY, MADRAS—B161

Publications of

T. CHELVAKESAVAROYA MUDALIAR,

M.A. [* இக் குறியிட்டவை கரிக்கப்பட்டவை.]

சென்னை

டெக்ஸ்ட் புக் கம்மிட்டியாரால் அங்கீ

*ராபின்ஸன் க்ரூஸோ—ஓர் இங்க்லிஷ்காரன் அமெரிக்காவை அடுத்த

நிர்மானுஷ்யமான ஒரு தீவில் விடப்பட்டு அங்கே நெடுங்காலம் தனியாய் ஜீவித்திருந்ததாக இங்க்லிஷில் எழுதியுள்ள ஒரு கதையின் சுருக்கம். சிறுவர் சிறுமியர் படித்தறியுமாறு எளிய நடையில் எழுதியிருக்கிறது. (4 அணா)

*அபிநவ கதைகள்—இதில் ஆறு கதைகள் அடங்கியிருக்கின்றன:—கற்பலங்காரம்—ஓரரசன் தான் விவாகம் பண்ணிக்கொண்ட ஓர் எளிய மாதின் கற்பைப் பரிசோதிக்குமாறு செய்த கொடுமைகளும், அவைகளுக்கு நடுபட்டு அவள் கற்பலங்காரியெனப் புகழப்பெற்றதுமாகிய விஷயங்களை விவரிப்பது. தனபாலன்-தான் செய்துவந்த கொடுக்கல் வாங்கல் வியாபாரங்களில் கள்ளக் காசுகள் கலந்திருந்ததனால்

மரணதண்டனை அடைந்த ஒரு சாவுகாரியைத்

தூக்கிடுகிற சமயத்தில், அந்த மோசத்துக்குக் காரணம் இன்னொன் என்பது வெளியாகி, தண்டனையினின்றும் விடுபட்ட கதை. கோமளம்-மஹாகவி ஷேக்ஸ்பியர் ஸிம்பலின் என்னும் நாடகத்தில் அமைத்திருப்பதை ஒட்டித் தமிழ்ச்

சிறுவர்களுக் கேற்றவாறு

பொருத்திய ஒரு பதிவிரதையின் கதை. ஸாப் பையர்-சென்னைச் சிங்காரவனத்தில் ஒரு வருஷம்

சந்தைக்கடைகள் தீப்பற்றிய போது காணுமற்போன ஒருவன்,

உத்தரகிரியைகளெல்லாம்

கடந்தபின், திரும்பிவந்த ஓர் உண்மையான கதை.

கிருஷ்ணன்-விடுமுறையில் தாய்

தந்தையரைப் பார்க்கப்போயிருந்த
சகோதரர் இருவரில் ஒருவன்,
உரிய நாளில் கல்விச்சாலைக்குத்
திரும்பாமல் ஒருநாள்
காமதிக்கும்பொருட்டுச் செய்த
மோசத்தால் விளைந்த விபரீதத்தை
விரித்துரைப்பது.

ஆஷாடபூதி-பல உப காரம்
செய்த சினேகிதருக்கு
அந்தரங்கத்தில் செய்த
துரோகத்தை விரித் துரைப்பது.

(10 அணு)

*அந்பர்—இந்தியாவில்

அரசாட்சி செய்திருந்த மோகல் அரசரில் நடு நாயகமான அக்பர் பாதுஷாவின் குண விசேஷங்களையும், அவருடைய மந்திரி மார்களின் திறங்களையும், அரசாட்சி நீடித்திருக்குமாறு மதாவேசமின்றி அவர் செய்த சீர்திருத்தங்களையும் விரிவாக உரைக்கின்ற சரித்திரம். (12 அணா)

*குசேலர்—கண்ணனுக்கு ஒரு சாலை மாணாக்கரான குசேலர், மக்கள் படுகின்ற

வறுமைத் துன்பத்தைக் கருதி
மனவி செய்த விண்ணப்பத்தால்,
துவாரகை சென்று கண்ணனைக்
கண்டு அருள்பெற்ற
பாகவதபுராணக் கிளைக்கதை.
(4 அணு)

கலிங்கத்துப்பரணி
கதாசங்கிரகம்—குலோத்துங்கச்சோழன்
தன் மந்திரி யான கருணாகரத்
தொண்டைமானைக்கொண்டு
கலிங்கதேசத்தை வெற்றி
கொள்ள, இயங்கொண்டார்
அவ்வெற்றியைச் சிறப்பித்துப்
பாடிய பரணிப் பிரபந்தத்தை

வசனரூபமாகச் சுருக்கியெழுதியது.
(8 அணு)

*கண்ணகி சரித்திரம்---மகா பதிவிரதையான கண்ணகி வரலாற்றைப் பஞ்சகாவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு ரைப்பது.
(12 அணு)

வியாசமஞ்சரி---சிறுவர் சிறுமியருக்கு உபயோகமாகத் திமிரி சபாபதி முதலியார் என்பவர் சென்ற நூற்றாண்டின் இடையில் சில வியாசங்களை எளிய நடையில் எழுதி யச்சிட்ட நற்புத்திப்போதம் என்னும் நூல், நெடுங்கால மாக

இரண்டாம் பகிப்பின்றி வீணுப்ப்
போவதைக் கண்டு, ஒரோ
விடத்தில் சில தொடர்களையும் சில
வாக்கியங்களையும் விடுத்தும்
கலியாணஞ் செய்து கொள்ளுதல்
என்னும் வியாசத்தில் மாத்திரம்
இளைஞர்களுக்கு அவசியமில்லாத சில
பகுதிகளை விடுத்தும்,
கர்மஞ்செய்தல் வீண்செலவு
செய்தல் என்கிற வியாசங்களில்
பெரும்பாகம் விட்டுவிடுவது
தகுதியாகத் தோன்றினமையால்
மிகுந்த பாகத்தைப்
பணஞ்சம்பாதித்தல் என்கிற
வியாசத்தில் சேர்த்தும்,

வியாசமஞ்சரி யென்னும்
புதுப்பெயருடன் பதிப்பித்தது.
இதில் அடங்கி யுள்ள
வியாசங்கள்:—காலையில் எழுதல்
- கடவுளைத் - தொழுதல் - உலா
வப்போதல் - கல்வி கற்றல் -
தினைகளுஞ்செய்தல் -
பனைஞ்சம்பாதித்தல்- கவியாணம்
செய்துகொள்ளுதல் என்பவை.
ஜனவிநோதினியிலிருந்து ஐந்து
வியாசங்கள் எடுத்துப் புதுக்கியும்
திருத்தியும் 1-வது அநுபந்தமாகச்
சேர்த்திருக்கின்றன. அவை
கைத்தொழில்-மனிதர்க்குள்ள
பரஸ்பரசம்பந்தம்-காலதாமதம்.

சம்பாஷணை-உழைப்பின் சிறப்பு என்பன. சில வழக்குத் தொடர்மொழிகள் அகராதியாக II-வது அநுபந்தமாய்ச் சேர்ந்திருக்கின்றன. (10 அணு)

தமிழ் வியாசங்கள்—கல்வி - செய்யுள் நாட்டு - சுகாதாரம் - செல்வம்-வசனம் - சாதுரியம் என்னும் பொருள்களைப்பற்றி இங்கிலிஷ் தமிழ் நூல் களின் சாராம்சங்களையும் அநுபவத்திலறிந்த அம்சங்களையும் தொகுத்து இடையிடையே பொருத்தமான முதுமொழிகளையும்

மேற்கோள்களையுங் காட்டி எழுதிய விபாசங்கள்.

(1 ரூபா.)

தமிழ்—முதல்பாகம் தமிழ் சுயபாஷை; இரண்டாம்பாகம் தமிழரசுடைய முற்காலநிலைமை; இவ்விஷயங்களைப் பல திறங்களால் ஆராய்ந்து விரித்துரைப்பதான ஒரு விபாசம்.

(12 அணை)

கம்பர்—அவருடைய காலத்தையும் கவிதையையும் ஒருவாறு ஆராய்ச்சி செய்தலான ஒரு விபாசம்.

(12 அணு)

திருவள்ளுவர்—அவருடைய காலத்தையும் அவர் திறத்தையும் நோக்கத்தையும் திருக்குறளின் போக்கையும் ஒருபுடை ஆராய்ச்சி செய்தலான ஒரு வியாசம்

(10 அணு)

*பஞ்சலட்சணம்—வித்தியார்த்திகள் தமிழிலக்கணத்தை எளிதில் கற்கு மாறு, எழுத்தையும் சொல்லையும் வாக்கியத்தையும் பற்றிய நன்னூல் சூத்திரங்களை (உதாரணங் காட்டாமல்) முன்பின் பின்முன்னாக ஏற்றபடி கிரமப்

படுத்தி, அணியையும் யாப்பையும் சுருக்கமாக உதாரணங்களுடன் வசனரூப

மாக எழுதி, பொருளின் பாகுபாட்டையும் இயல்பையும் விளக்கியுள்ள இலக்

கணச் சுருக்கம். சிவஞான முனிவருடைய படம் முகதலைப்பில் வைத்திருக் கிறது. (1 ரூபா.)

குசேலோபாக்கியானம் & அரிச்சந்திரபுராணம்—இந்நூல்களில் முக் கியமான பகுதிகளைத் தழுவியும் அவசியமில்லாத சங்கதிகளை விலக்கியும், உரை இடையிட்டு,

வித்தியார்த்திகள் எளிதில் படித்தறியும்படி வெளியிட்ட சுருக்கங்கள்.
(8 அணை)

*ஆசாரக்கோவை — பெருவாயின் முள்ளியார் என்பவரால் பல தர்ம சாஸ்திரங்களிலிருந்து அவசியமான ஆசாரங்களை நூறு தமிழ்வெண்பாக்களாக அமைக்கப்பட்டுச் சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கில் சேர்ந்த ஒரு நூல். இதில் உரைத்திருக்கும் விஷயங்கள்-சோடல்-உடுத்தல்-உண்ணல்-உறங்குதல்-காலக்கடன்-இல்லொழுக்கம்-மன்னரைச் சேர்ந்தொழுகுதல் முதலியன. இந்

நூல் பழைய பொழிப்புரையுடன்
புதிய பதவுரையும் குறிப்புரையும்
சேர்த்து அச்சிட்டிருக்கிறது.
(8 அணா)

பழமொழி
நானூறு—முன்றுறையரசர்
என்றும் ஜினவரசர் ஒவ்வொரு

பழமொழியை இறுதியில் வைத்துப் பாடிய வெண்பாக்கள் நானூறு கொண்டு சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கில் சேர்ந்த ஒரு நூல். வரையறையின்றி யிருந்த பாக்களை ஒருவாறு திருக்குறள் போல் பாகுபடுத்தி, பழைய பொழிப் புரையைச் சேர்த்து, பதவுரை, கருத்துரை, குறிப்புரைகளோடு அச் சிட்டது. (2 ரூபா.)

*முதுமொழிக்காஞ்சி—மதுரை கூடலூர்கிழார் இயற்றியது. பத்ததிகார

மாய் ஒவ்வோரதிகாரமும் பப்பத்துக்
குறட்டாழிசையால் அமைந்தது
ஒவ்வோ ரடியும் ஒவ்வொரு
முதுமொழி. பழைய
பொழிப்புரையோடு, புதிய பதவுரை

கருக்குரை குறிப்புரைகளைச்
சேர்த்து அச்சிட்டது.
(5 அணை)

*அறநெறிச்சாரம்--முனைப்பாடியார்
என்னும் ஜினப்புலவர் சைன

சம்பிரதாயங்களோடு
நல்லொழுக்கம் இல்லறம்
துறவறம் முதலியனவைகளை

விளக்கி
வீடெய்தும் உபாயத்தை உரைக்கும்
இருநூற்றிருபத்திரண்டு வெண்பாக்
களாகப் பாடிய ஒரு நூல்.
(6 அணை)

Apply to :

Mr. T. P.
ALAGAN,
No.15 , Tholasinga
Mudali Street, Perambur,
Madras, N.